முகப்பு :

அருள்மிகு இராஜராஜேஸ்வரி

# திருக்கோயில்


இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை—600 034,
தொலைபேசி எண்: 8279407

ஆசிரியர் :

கவிஞர் டாக்டர் ந. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை : | திருவள்ளுவர் ஆண்டு 2027&2028 தாது ஆண்டு மார்கழி&தை | மணி : |
|---|---|---|
| 38 & 39 | 1996 டிசம்பர் 1997 ஜனவரி விலை ரூ. 6—00 | 12 & 1 |


## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே ! வணக்கம்,

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்.

உயர்திரு **ஆணையர்** அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை-600 034.

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | .. | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | .. | ரூ. | 36-00 |
| ஆயுள் | .. | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்,
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

## பொருளடக்கம்


பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
—மாண்புமிகு முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்

விருதுபெறும் சான்றோர்களுக்கு வாழ்த்துக் கவிதை
—மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் புலவர் செங்குட்டுவன்

அப்பரடிகளின் அருள்நெறி
—வ. ராமதாஸ் இ.ஆ.ப. ஆணையாளர்

ஆளவந்தார்
—டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்

கோவையார் கூறும் பாவையர் தன்மை
—சேது. சிவா

அன்னத்தால் அருள் பெற்ற அன்பு நாயனார்
—எஸ். சுந்தரம்

மணிமங்கலம் இராஜகோபால சுவாமி
—சி. வசந்தி

தமிழகத்தில் பிரமன் வழிபாடு
—பேராசிரியர் டி. செல்வராஜ்

அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில்
—பைம்பொழில் பாலசுப்பிரமணியம்

சங்கஇலக்கியத்தில் திருமால் அவதாரங்கள்.
—ப. சிவநேசன் எம்.ஏ. எம்.பி.

ஸ்ரீ ஐயப்பன் 108 போற்றி
— செந்தில் துறவி

சமயபுரத் தாய்
—மயிலை சிவஞான ஜோதி சிவசக்தி வளர்ச்சி —ச. சர்வர்க்கர் இ.ஆ.ப.

பொருட்காட்சியில் நமது அரங்கம்
—ப. தனபால் எம்.ஏ பி.எல்.

அறிவுடையார் ஆவது அறிவார்
—டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி

ஆண்டாள் அருளிய அருள்நெறி
—திருமதி அனுசுயா



இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’

**—மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்**

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே ‘பிறப்பொக்கும்’ என்று வள்ளுவர் அழுத்தம் திருத்தமாகக் கூறவேண்டியிருந்திருக்கிறது. இன்று இந்த இருபதாம் நூற்றாண்டில் சமுதாயம் நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான சாதிப்பிரிவுகளால் சிதறுண்டு கிடப்பதுபோல் அன்றும் வள்ளுவர் காலத்திலும் பிறப்பால் உயர்வு தாழ்வு மனப்பான்மை பாராட்டப் பட்டிருக்கிறது. அந்த வேதனையைத் தாங்க முடியாமல்தான் வள்ளுவர் ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற குறள் தீட்டியுள்ளார்.

எல்லா உயிர்க்கும் என்று வள்ளுவர் குறித்தவுடன் விலங்கினங்களும், பறவையினங்களும், ஊர்ந்து சென்றிடும் புழு பூச்சி இனங்களும் அவரைப் பார்த்துக் கேள்விகளை அடுக்கின.

‘எங்களுக்குள் சாதிப் பூசல்களே என்றைக்கும் இருந்ததில்லை. சாதி உணர்வுகள் தலை தூக்கி அதன் காரணமாக நாங்கள் அமளிகளை உருவாக்கியதே இல்லை. அங்ஙனமிருக்க ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்று எம்மையும் சேர்த்து இழிவுபடுத்துதல் முறையானதுதானோ!’.

இவ்வாறு மிருகங்கள் கேட்டன. பறவைகள் கேட்டன. ஊர்வன கேட்டன.

‘‘உயிர்கள் என்று பொதுவாகச் சொன்னால் எல்லா உயிர்களையும் குறிப்பீடுமெனினும் உங்களுக்கு ஆறாவது அறிவான பகுத்தறிவு இல்லாத காரணத்தால் உங்களிடையே சாதிப்பூசல்கள் எழுவது இல்லை. பகுத்தறிவுவுள்ளவர்களாகக் கூறிக் கொள்ளும் மனிதர்களிடையே தான் பல்லாயிரம் சாதிகள், சண்டைகள். உயர்வு தாழ்வு உணர்வுகள்; குறளைப் படிக்கக்கூடியவர்களுக்காகத் தான் இதனை எழுதினேன். நீங்கள் படிக்க இயலாதவர்கள். உங்களுக்காக, இதனை நான் எதற்காக எழுதப் போகிறேன்! எனவே நான் ‘உயிர்கள்’ என்று குறிப்பிட்டிருப்பது இந்தக் குறளைப் பொறுத்த வரையில் மனிதர்களை எண்ணித்தான்.

வள்ளுவர் விளக்கமளித்துவிட்டு வேறு வழியாகப் பயணர் தொடர்ந்தார். அங்கே இருவர் விவாதித்துக்கொண்டிருந்தனர்.

ஒருவர்: பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லையென்று குறள் கூறினாலும்கூட அவரவர் செய்கின்ற தொழில்களின் வேற்றுமையால் சிறப்பு இயல்புகள் மாறுகின்றன என்று சுட்டி காட்டியிருக்கிறது அதனால் இசைவாணனான நான் ஆசிரியத் தொழில் புரியும் உம்மைவிட சிறப்புடையவன்.

மற்றவர்: இல்லை, மறுக்கிறேன். ஆசிரியத் தொழிலே சிறந்தது. அதற்குஒப்பிடக் கூடியது கூட அல்ல உமது இசைத் தொழில்

இருவரின் உரையாடல் சூடேறுவதற்கு முன்பு வள்ளுவர் குறுக்கிடுகிறார்



‘சொற்போரை நிறுத்திடுக. நான் தொழிலுக்குத் தொழில் உயர்வு தாழ்வு இருப்பதாகவோ-சிறப்பு இயல்புகள் மாறுவதாகவோ கூறிடவில்லை. ஒவ்வொரு தொழிலுமே அதனைச் செய்வோரைப் பொறுத்து வேறுபடுகின்றன. இதோ உங்களையே எடுத்துக் கொள்வோம். ஒரு இசைவாணர் பாடினாலே ஊரார் காதுகொடுத்துக் கேட்க மறுத்து வேறு அலுவல்களைக் கவனிப்பர். மற்றொரு இசை வாணரின் இனிய இசையை விடிய விடியக் கேட்டு மகிழ்வர். அது போலத்தான் ஒரு ஆசிரியர் மாணவரிடையே கேலிப் பொருளாக விளங்குவார். இன்னொரு ஆசிரியரோ மாணவரால் மதிக்கத்தக்க மாண்புடையவராகத் திகழ்வார். ஆகையால் தொழிலுக்குத் தொழில் வேறுபாடுகாண நான் விழைந்ததில்லை. செய்யுந் தொழில் எதுவாயினும் அதிலே எய்துகிற சிறப்புகள் வேறுபடுகின்றன; செய்பவரின் அறிவாற்றலைப் பொறுத்து. இப்படித்தான் என் கருத்துக்கு விளக்கம் பெற வேண்டுமேயல்லாமல் நீங்கள் மோதிக் கொள்வது முறையல்ல.’’

குறள் தந்த கோமானின் விளக்கவுரை கேட்டு, இசைவாணரும், ஆசிரியரும் மகிழ்ந்து வணங்கினர்.

‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்’

**—மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் குறளோவியமாம் தமிழ்க் காவியத்திலிருந்து இக்கருத்தோவியம் நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.**

### மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர்

## புலவர் செங்குட்டுவன் அவர்கள்

# முருகனடியார்களுக்கு விருதுகள் வழங்கிச் சாற்றியருளிய

# வாழ்த்துக் கவிதை

*(24—12—1996—செவ்வாய்க் கிழமை அன்று சென்னை கந்த கோட்டத்தில் கந்தன் கலையரங்கில் 'உலக முருக பக்தர்கள் பேரவையின்' சார்பில் நடைபெற்ற தவத்திரு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் 3-ஆம் ஆண்டு வான் கலந்த வழிபாட்டு விழா நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு புலவர் செங்குட்டுவன் அவர்கள் கலந்து கொண்டு பல்துறைகளில் சிறந்து விளங்கிய பதினான்கு பெருமக்களுக்கு விருதுகள் வழங்கி பாடிய வாழ்த்துக் கவிதையினை ''திருக்கோயில்'' வாசகர்களுக்கு வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம்.)*

புது வெள்ளம் நீர்பாய்ச்சிக் கழனிக்காட்டில்
புதுநெல்லைப் பொலிவோடு விளையவைத்து
நதியெல்லாம் தாயாக மகிழ்ந்து போற்றி
நாட்டோர்க்கு உணவளிக்கும் உழவன் போலே
எதிர்காலக் கனவுகளை நெஞ்சிலேற்றி
இனித்தாலும் புளித்தாலும் அருளை நம்பி
கதிர்போலத் தலைநிமிர்ந் திங்கேவாழும்
எண்ணியம் மிக்கவர்க்கு என வணக்கம்.

R. RAJU,
Dy Commissioner II (Rtd)
(Retired)
HR&CE Administration Dept

கார்முகில் ததும்பிய மார்கழித் திங்களில்
கண்ணியம் மிக்கவர் புக்கிய அவைதனில்
நேர்நிறை கொண்டவர் நிறைமொழி மாந்தர்கள்
நிரம்பிய இந்நாள் கந்தகோட் டத்தினில்
வார்ப்படப் பொருளாய் வகைசெய் அறிஞர்கள்
வந்து குழுமியும் சிந்தியும் அறிவுரை
தேர்ப்படும் உற்சவ தெள்ளிய மூர்த்தியாய்
திறம்பட வாழ்வியல் இலக்கணம் பெற்றவர்
கற்றவர் மற்றவர் உற்றவர் நிறைந்துளீர்
கந்தனை முருகனைக் கவினுறப் பாடிய

பெற்றிகள் பெற்றநல் பெருமகன் வாரியார்
பெயரால் தொண்டலர் பேரவை நடாத்திடும்
பல்சுவை அரங்கப் பயனுறும் நிகழ்ச்சியில்
பண்புடன் எம்மையே அழைத்துநல் விருதுகள்
பல்துறை அறிஞரை வாழ்த்தியும் வழங்கிடப்
பணித்தநம் பேரவை நண்பர்க்கும் வணக்கம்
நல்வினை ஆற்றிட நலம்பல செய்திர
நாளும் போற்றிட ஆள்வினை அமைத்தீர்
தொல்நெறித் தொகுப்புகள் துலங்கிட விளங்கிட
தூய்மையும் வாய்மையும் பெற்றவர் தமக்கெலாம்
விருதுகள் வழங்கிட விழைந்த நும்போக்கு
பெரிதும் போற்றுதற் குரியன நன்றே,
திருப்புகழ் தொழும்பன் பெரும்புகழ் பெறுபவர்
திருவளர் முருகா தண்டபாணி அவர்கள்
தமிழின் பெயரால் சங்கமே கண்டார்
தமிழ்உல கெல்லாம் வாணிபம் கொண்டார்
அமிழ்தினும் இனிய அண்ணல் சந்தோசத்தார்

அருங்கவிச் சக்கர வர்த்தியே ஆனார்
நிறைகுடம் தழும்பாப் புலமையைக் கிளர்ந்து
நெஞ்செலாம் சமயக் கவிமலர் புனையும்
இறையருட் கவிஞர் எழிலார் விருதினை
ஏற்றிடும் மதிப்புயர் சௌந்திரா கைலாசம்
செல்வப் பேறுகள் பதினாறு என்பார்
செஞ்சொற் செல்வர் பதினேழாம் பேறாய்
சிங்கப் பூர்வாழ் திருவை கதர்மன
சிறப்புடன் பெறுவது உயர்வகைப் பண்பே
குருத்துவம் போற்றிக் குருகுலம் பணிந்து
குன்றாப் புகழொடு அறப்பணி ஆற்றும்
மருத்துவக் கலையின் மாண்புறு செல்வர்
மகத்தான பட்டம் கண்ணப்பர் அடைவார்

சோதிடச் செல்வர் சிவாமேக நாதன்
நிமித்திகர் இருவரும் வானியற் கலைஞர்(கள்)
மேதினி போற்றிடும் மெய்பொருள் உரைப்பார்
மெய்மறந் தவருரை யாவரும் கேட்பார்
ஆகமம் அருள்நெறி ஆன்மீகப் பொழிவுகள்
அனைத்தும் வெள்ளமாய் கரைபுரண் டோடிட
தாகமே தீர்த்திடும் சமயத் திவலைகள்
சக்திபா ரதிவாணன் அருட்பாவலர் பெறுவார்
தமிழன் வாழ்ந்திடும் தாய்மொழி பேசிடும்
தமிழர் நாடிது தமிழ்த்தாய் நாடு
தமிழர் நாட்டினில் சார்ந்த கோவிலில்
தமிழில் அர்ச்சனை ஒலிப்பதே இல்லை
தர்மமா நியாயமா உணருவீர் நீங்கள்
சொந்த வீட்டினில் தத்துப் பிள்ளையாய்
வாழுதல் என்ன நேர்மையோ கூறுவீர்
தமிழில் அர்ச்சனை எங்கும் ஒலித்திட
தாக வேட்கையாய் கொள்கை முழக்கமாய்
ஆற்றிட வருக அர்ச்சகச் செம்மலே
துரை குருக்களே துவக்குவீர் தமிழ்ல்
திருப்புகழ் விளக்கம் தெருவெலாம் முழக்கி
தெளிந்த நீரோடையாய் வாழ்ந்தவர் வாரியார்
முருகன் பெரும்புகழ் முகிலாய்ப் பொழிந்த
முத்தமிழ் வித்தகர் வாரியார் சுவாமிகள்
வாரியார் அடிமை வளமார் விருதை
வனப்பாய் பெறுபவர் திருதா மோதரன்
பதினான்கு விருதுகள் பண்பால் வழங்கிட
பாசமாய் அழைத்தனர் பக்தர் பேரவையினர்
மதியத்து நிலவாக ஒளிபெறுதல் வேண்டும்
மண்ணிலே விண்ணுயர புகழ்பெறுதல் வேண்டும்

ஆயகலைகள் அறுபத்தி நான்கென்பார்
அரசியல் கலையே தொண்ணூற்றி ஆறு என்பார்
தூயநிலைகள் நூற்றிஎட்டு என்பார்
சொல்லும் பேறுகள் பதினாறு என்பர்
கழலும் கிரகங்கள் ஒன்பது என்பார்
வார நாட்கள் ஏழு என்றும்
சுவைக்கும் ருசியோ ஏழு என்றும்
பஞ்சபூதங்கள் ஐந்து எனறும் உரைப்பார்கள்
இயல் இசைச் கூத்து மூன்றென்பார்
எழிலார் ஆண் பெண் பாலிரண்டு
உலகியல் வாழ்வை 'ஓம்', என்ற பிரணவமே ஒன்றென்பார்
ஒன்றான பிரணவத்தை நன்றேயாக்கி
உளம் தெள்ந்து பொறையவழ்ந்து
நிறை மாந்தராய் வாழ இந்தப் பேரவையின்
முயற்சிகள் வெல்க - வாழ்க'

என்று கூறி கவிதை உரையை முடிக்கின்றேன்.

# அப்பரடிகளின் வாழ்க்கை

**வ. இராமதாஸ், இ.ஆ.ப.,**
ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.



தெய்வச் சேக்கிழார் பெருமான் தம்முடைய திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தில் திருநாவுக்கரசரைப் பற்றிப் பாட முற்படும்போது என்ன சொல்கிறார் என்றால்...

திருநாவுக்கரசர் சைவத் திருத்தொண்டிற்காகவே அவதரித்தவர். ஞானத்தவ முனிவர் வாகீசர் அவருடைய பெருமைகளை ஒரு நாவினாலே எடுத்துரைப்பது என்பது இயலாத காரியம் என்பதை உணராமல் அவருடைய சீர்பரவ முற்படுகிறேன் என்று கூறுகிறார்.


'தொண்டர்தம் பெருமை பேசவும் பெரிதே' என்றார் ஔவையார். வானத்து மீன்களை எண்ணிவிடலாம்; கடல் மணல்களையும் கூட எண்ணிவிடலாம்; கடலில் நீந்தும் மீன்களையும் கூட எண்ணிவிடலாம். ஆனால் தொண்டர்களுடைய பெருமையை எடுத்துரைப்பது மற்றவர்களுக்கு அரிய செயல். அது சேக்கிழாருக்கு மட்டுமே எளிய செயல் என்று சேக்கிழார் புராணத்தில் உமாபதி சிவம் போற்றுகிறார். அத்தகைய பெருமைக்குரிய சேக்கிழாரே தம் ஒரு நாவினால் திருநாவுக்கரசரான வாகீசர் வாய்மையை-உழவாரத் திருத்தொண்டின் பெருமையை எடுத்துக் கூற ஆகாது என்று போற்றியிருக்கிறார் என்றால் அப்பர் எனும் அருளாளரின் பெருமையை யாராலும் எடுத்து விளக்க இயலாது என்பதே உண்மை.

'உடைய அரசு உலகேத்தும் உழவாரப் படையுடையவர்' என்று உலகமே திருநாவுக்கரசரைப் போற்றுவதைக் கூறுகிறார் சேக்கிழார். அவருடைய திருக்கரங்களில் எப்போதும் உழவாரம் இருந்து கொண்டே இருக்கும். உழவாரத்தின்படை அறாத திருக்கரம் திருநாவுக்கரசரின் திருக்கரம் என்று கூறுகிறார் மாதவச் சிவஞான மாமுனிவர்.

திருநாவுக்கரசர் நாளும் நாளும் உழவாரப் பணிபுரிந்திருக்கிறார். திருஞான சம்பந்தரும் சிறுத்தொண்ட நாயனாரும் திருநீலநக்க நாயனாரும் இத்தலத்தில் நம் அப்பரோடு இருந்து அவர்தம் திருப்பணிக்கு உறுதுணை புரிந்திருக்கிறார்கள். அடியவர்களைத் தாங்குவது ஆண்டவன் கடமை; ஆண்டவனை உழவாரப் பணி முதலான திருப்பணிகளால் போற்றுவது அடியவர் கடமை என்பதை திருநாவுக்கரசு சுவாமிகள் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று எவ்வளவு அற்புதமாகப் பாடியிருக்கிறார்கள்.

திருநாவுக்கரசரின் பாட்டு ஈசனையே உருக்க அதனால் அவரே 'நாவுக்கரசென்று உலகு ஏழினும் நின் நாமம் நயப்புற மன்னுக' என்று நாவுக்கரசு என்னும் திருநாமத்தை வழங்கினார்.

அவருக்கு பெற்றோர் இட்ட பெயர் மருள்நீக்கியார் என்பது இவர் சைவ சமயத்தை மறந்து கொஞ்ச காலம் சமண சமயத்தில் சேர்ந்திருந்தபோது இவருக்கு சமணர்கள் வைத்த பெயர் தருமசேனர் என்பது. இவரை இவருடைய தமக்கையார் திலகவதியாரின் வேண்டுதலுக்கிணங்க திருவதிகைப் பெருமான் சூலைநோய் தந்து தடுத்துஆட்கொண்டார். திருவதிகைப் பெருமானிடம் வந்து 'கூற்றாயினவாறு விலக்கலீர்' என்று தருமசேனர் பாட நோயும் மறைகிறது. தருமசேனர் என்ற பழைய பெயரும் மறைகிறது. திருவதிகைப் பெருமான் 'நாவுக்கரசு' என்று திருநாமம் சூட்டுகிறார்.



சமண சமயத்திலிருந்து இவரை மீட்டவர் இவருடைய தமக்கையார் திலகவதியார். சைவத்திற்கே இவர் திலகம்போல் விளங்குவார் என்று கருதி அந்தப் பெயரை வைத்தார்களோ என்னவோ நமக்குத் தெரியாது. திலகவதியார் என்ற பெயர் அவ்வம்மையாருக்கு அப்படிப் பொருத்தமாக வாய்த்திருக்கிறது. அவ்வம்மையார்தான் திருநாவுக்கரசரை உழவாரத் தொண்டிலும் கூட ஈடுபடுத்தினார் என்பது இங்கே நாம் மகிழ்ந்து நினைய வேண்டிய ஒரு முக்கிய செய்தியாகும்.

'தூண்டு தவ விளக்கனையார்' என்று சேக்கிழார் போற்றுகிறார் திலகவதியாரை. அவருக்குக் கணவராக நிச்சயிக்கப்பட்டவர் கலிப்பகையார். நிச்சயம் ஆனது. ஆனால் திருமணம் நடைபெறாத நிலையில் போர் வந்துவிட்டது. தம் மன்னவருக்கு ஆதரவாக கலிப்பகையாரும் போருக்குப் போனார். போர்க்களத்தில் வீர மரணமும் அவர் அடைந்து விடுகிறார். 'நிச்சயிக்கப்பட்டவர் வீரமரணம் அடைந்துவிட்டபடியால் நானும் உயிர்விடுவேன்' என்று திலகவதியார் மாள முற்படும்போது திலகவதியாரைத் தடுத்துத் தம்பி அழ தம்பிக்காக உயிர் தாங்கினார் திலகவதியார்.

திலகவதியார் அம்பொன்மணி நூல் (தாலி) தாங்காது அனைத்து உயிர்க்கும் அருள் தாங்கி இம்பர் மனைத்தவம் புரிந்து இருந்தார் என்கிறார் சேக்கிழார். திருவதிகைத் திருத்தலத்தில் சிவபெருமானுக்கு உழவாரத் தொண்டு செய்து திலகவதியார் வாழ்ந்திருந்தார்.

'புலர்வதன்முன் திருவலகு பணிமாறி
புனிறகன்ற
நிலமலி ஆன் சாணத்தால் நன்கு திருமெழுகிட்டு
மலர் கொய்து கொடுவந்து மாலைகளும்
தொடுத்தமைத்து

பலர் புகழும் பண்பினார் திருப்பணிகள் பல செய்தார்.' என்று திலகவதியார் செய்து அருளிய பணிகளைச் சேக்கிழார் வடித்துக் காட்டுவதன் மூலம் அத்தகைய திருப்பணிகள்- உழவாரப்பணிகள் செய்ய திலகவதியாரே திருநாவுக்கரசரையும் வழிப்படுத்தினார் தூண்டினார் என்பதை நாம் தெளியலாம். ஆகவே தான் அவர் 'தூண்டுதவ விளக்கனையார்' என்று போற்றப்படுகிறார்.

திருநாவுக்கரசரும் தம் தமக்கையார் ஆற்றுப்படுத்திய வழியில் உழவாரப் பணிபுரிய நம் நெஞ்சிற்குத் தாமே கட்டளையிட்டு கொள்கிறார்.

'நிலை பெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டு
பூமாலை புனைந்தேந்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடி
சங்கரா ஜயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடை எம் ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.''

வைகறையில் எழ வேண்டும். இறைவனுடைய திருக்கோயிலைக் கூட்டிச் சுத்தப்படுத்தவேண்டும்; காலைக் குத்துவதாய் அங்கே முளைக்கின்ற முட்செடிகளையும், புற் பூண்டுகளையும் உழவாரம் எனும் கருவியாலே களைய வேண்டும். பசுவின் சாணத்தால் நன்றாக மெழுகிக்

கோலங்கள் இட்டு அழகுபடுத்த வேண்டும். அதற்குப் பிறகு ஆலய நந்தவனங்களில் மலர் பறித்து அதை மாலையாகக் கட்டி இறைவனுக்கு அணிவித்துப் பூசை நாளும் செய்தால், இறைவனின் அருளையும் பெறலாம்; நிலையற்ற இப்பூவுலகில் நிலைபெற்றும் வாழலாம் என்பது அருளாளர் அப்பர் நமக்கு அருளிய அருள்மொழியாகும்; தொண்டு வழியாகும். அப்பர் என்ன உபதேசித்தாரோ அதைத்தாமே செயற்படுத்திக் காட்டினார். உடல் வருத்தமே பாராது சொல்லப் போனால், அதையே ஆனந்தமாக எண்ணி எண்ணி உழவாரப் பணியிலே தம்மை ஈடுபடுத்திக்கொண்டார். பிறரையும் ஈடுபடவைத்தார்.

ஆரம் என்றால் மாலை, தேவாரம் என்றால் தெய்வத்திற்குச் சாற்றக்கூடிய ஆரம் தேவாரம் என்பது பொருளாகும். தெய்வத்தின் மேல் உழுவல் அன்பு கொண்டு (இறைவனுக்குத் தம்மையே அர்ப்பணித்து வாழும் அன்பு தான் உழுவல் அன்பு) அவனுக்குச் சாற்றக்கூடிய கைத்தொண்டாகிய மாலை உழுவல் ஆரம், உழவாரம் என்று ஆன்றோர்கள், உழவாரம் என்ற சொல் எப்படி பிறந்திருக்கக்கூடும் என்ற ஆய்ந்து சொல்கிறார்கள் ஆகவே, இறையடியார்களுக்கு வேண்டுவது, இறைவனுக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளும் பக்தி உணர்வு; அத்தகைய பக்தி உணர்வு கொண்ட முதல் பக்தர் தலையாய பக்தர் நம் திருநாவுக்கரசர். 'இடையறா பேரன்பும் மழைவாரும் இணை விழியும் உழவாரத்தின் படை அறாத் திருக்கரமும்' என்று அவருடைய தோற்றம் எப்படி இருக்கும் என்பதைக் காட்டுகிறார் மாதவச் சிவஞான மாமுனிவர்.

திருநாவுக்கரசர் எந்தத் திருத்தலத்திற்கு சென்றாலும், முதலில் உழவாரப் பணி புரிந்து கைத்தொண்டு செய்து ஆலயத்தைத் தூய்மை படுத்துவார். அவருடன் அடியார்களும் சேர்ந்து உழவாரப் பணி புரிவார்கள். வாய் தேவாரம் பாட, உள்ளம் தெய்வத்தை எண்ணி உருக அதனால் இருகண்களிலிருந்தும் கண்ணீர் பெருக அவர்கள் எப்படி எல்லாம் உழவாரப் பணி புரிந்திருப்பார்கள் என்பதை எண்ணுகிறபோது தொண்டின் பெருமையைச் செயலால் செய்து நமக்குக் காட்டிய அப்பரின் அருள் உள்ளத்தை எண்ணி எண்ணி வியக்கலாம் நாம்.

திருநாவுக்கரசரின் உழவாரப் டணியைச் சிறப்பிக்கும் வகையில் திருவீழிமிழலைத் திருத்தலத்தில் அவருக்கு வாசியிலாப் பொற்காசு இறைவர் வழங்கினார் என்ற விந்தைமிகு வரலாற்றையும் அவருடைய வரலாற்றிலே காண்கிறோம். திருவீழிமிழலையில் திருநாவுக்கரசரும் திருஞானசம்டந்தரும் தங்கி இறைத்தொண்டு புரிந்து கொண்டிருந்தார்கள். அப்போது நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. இறைவர் அப்பர்-சம்பந்தர் இருவருடைய கனவிலும் தோன்றி 'எம்மை வழிபடும் உங்களைப்பஞ்சம் வாட்டாது; என்றாலும் உங்களைச் சார்ந்தவர்களுக்கு உதவும் பொருட்டு 'படிக்காக தருகிறோம்' என்று அருள் புரிந்தார்.

ஆலயத்தில் கிழக்குப்பீடத்தில் சம்பந்தருக்கும் மேற்குப்பீடத்தில் அப்பருக்கும் பொற்காசு வைத்தார். இவ்வாறு இறைவரால் அப்பருக்கு வழங்கப்பட்ட பொற்காசு மாற்றுக் குறையாத பொற்காசாக இருந்தது. திருஞான சம்பந்தருக்கு வைத்த பொற்காசு மாற்றுக்குறைந்ததாக இருந்தது. திருநாவுக்கரசரின் பொற்காசினைக் கமிஷன் இல்லாமலே மாற்றிக் கொள்ள முடிந்தது. திருஞான சம்பந்தரின் பொற்காசுக்குக் கமிஷன் தர வேண்டி இருந்தது. ஏன் இறைவர் இவ்வாறு வேற்றுமைபட இருபெரும் சமயக் குரவர்களிடமே நடந்து கொண்டார் என்பதற்குச் சேக்கிழார் காரணம் காட்டும்போது திருநாவுக்கரசரின் உழவாரப்பணியைச் சிறப்பிக்கவே-பெருமைப் படுத்தவே வாசியில்லா காசு நல்கினார் என்று பாடுவதைப் பெரிய புராணத்திலே காண முடிகிறது. அன்னை உமாதேவியாரிடமே உலகம் உய்ய ஞானப்பால் உண்டவர் திருஞானசம்பந்தர்; இருந்தாலும் அவருக்கு வாசியுள்ள காசே இறைவர் வழங்கினார்; 'கைத்தொண்டாகும் படியையினால் வாசி இல்லாக் காசு படி பெற்று உவந்தார் வாகிசர்' என்று பாடுகிறார் சேக்கிழார்

'வாசிதீரவே காசு நல்குவீர்' என்று திருஞானசம்பந்தர் தம் குறையைத் திருவீழிமிழலை நாயகரிடம் விண்ணப்பித்து பிறகு திருநாவுக்கரசருக்கு வழங்கப்பட்டதைப் போலவே மாற்றுக்குறையாத பொற்காசு பெற்று மகிழ்ந்தார் என்பதையும் நாம் அறிந்து மகிழ்கிறோம்.

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் இறைவன் கட்டளையால் இவ்வுலகில் தோன்றி சைவ சமயத்தைத் தழைத்தோங்கச் செய்தவர்கள். அவர்கள் ஆற்றிய சமயத் தொண்டு போல் யாரும் ஆற்ற முடியாது. திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரைபோற்றி இருக்கிறார்; திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரை போற்றி இருக்கிறார். அப்பர் வயதால் மூத்தவர். 80 ஆண்டு காலம் இப்புவியில் வாழ்ந்து உழவாரத்தொண்டு புரிந்தவர். திருஞானசம்பந்தர் 3 வயதில் ஞானப்பால் அருந்தி உலகம் போற்ற திருப்பதிகங்கள் பாடி சமண இருளை அகற்றி சைவ ஒளி விளங்கச்செய்தார். 16 வயதிலேயே முக்தி பெற்றவர். இருவர் தொண்டும் அவர்கள் வரலாற்றிலே உவமை கூற முடியாத இமயமெனத் திகழ்கிறது.

திருஞானசம்பந்தர்தான் திருநாவுக்கரசருக்கு 'அப்பர்' என்ற திருநாமம் கொடுத்தவர் இறைவன் கொடுத்த நாமம் திருநாவுக்கரசு. இவர் கொடுத்த நாமம் அப்பர். தமக்குத் தந்தை போன்றவர் என்று எண்ணி மட்டும் 'அப்பர்' என்று திருஞானசம்பந்தர் அழைக்கவில்லை தம் கைத்தொண்டால் ஞாலத்திற்கே வழிகாட்டுகிறார் திருநாவுக்கரசர். அவர் இந்த உலகிற்கே தந்தை என்பதால்தான் 'அப்பர்' என்று அன்போடு பெயர் வழங்கினார். இறையடியார்கள் அனைவரும் அப்பரைப் போல் உழவாரப் பணி புரிய வேண்டும் என்பதையும் திருச்செங்கோட்டில் தாம் பாடிய ஒரு பதிகத்தின் மூலமும் வற்புறுத்தியிருக்கிறார் திருஞான சம்பந்தர்.

R. RAJU
DY. Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

''அவ்வினைக்கு இவ்வினையாம் என்றுசொல்
லும் அஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பது உம்தமக்கு ஊனம்
அன்றே
கைவினை செய்தெம்பிரான் கழல்
போற்றுதும் நாம் அடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு
நீலகண்டம்''

என்பது திருஞானசம்பந்தர் அருள்வாக்கு. உழவாரப் பணி புரிவதால் விதியையும் வென்று வாழ முடியும் என்று திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரின் உழவாரப் பணியைச் சிறப்பித்துக்கூறுவதைத்தான் இங்கே காண்கிறோம்.

அப்பர் அகவையால் மூத்தவர்; அவர் திருஞான சம்பந்தர் திரு ஆலவாய் எனும் மதுரைத் திருத்தலத்தில் பாண்டியனின் கூனை நிமிர்த்து, வெப்பு நோயை அகற்றி திருநீற்றுப் பதிகத்தால் அவ்வற்புதங்கள் எல்லாம் புரிந்து, எண்ணாயிரம் சமணர்களைக் கழுவேறச் செய்தார்: சமண இருளை முழுமாகஅகற்றிமுழுநிலாபோல் நம் சைவ சமயம் என்றும் மங்காமல் மறையாமல் ஒளி பெறச் செய்தார் என்பதையும் நாம் பார்க்கிறோம்.

சமண இருள் நீக்கிய கதிரவனாய் சிவிகையில் வருகிறார் திருஞானசம்பந்தர். அவருடைய அருட்பணியைப் போற்றிடும்வகையில் அவருடைய முத்துச் சிவிகையைத்தாங்கும் திருக்கூட்டத்தில் ஒருவராக உட்புகுந்து சம்பந்தரின் திருச்சிவ்கையைத் தாங்குகிறார் அப்பர். அதை நினைக்கிறபோது அவருடைய அச்செயல் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. சிவிகையில் வரும் ஞானசம்பந்தர் அப்பரைக் காண வேண்டும்; அவரிடம் மதுரையில் நடைபெற்ற சம்பவங்களை நேரில் விவரிக்க வேண்டும். என்பதற்காகவே வந்து கொண்டிருக்கிறார். அவர் 'எங்குற்றார் அப்பர்? அவரைக் காணவேண்டும்' என்று கூற 'யான் இங்குற்றேன்; உம்மைத் தாங்கி வரும் பெருவாழ்வு வந்து எய்தப் பெற்று, இங்குற்றேன்' என்று திருநாவுக்கரசர் சொல்கிறார் என்றார் அவருடைய பணிவின் பெருமையை என்னென்பது; சேக்கிழார் போற்றுவது போல் திருநாவுக்கரசர் பெருமையை ஒரு நாவாலும் சொல்ல முடியாது. ஆயிரம் நா கொண்ட ஆதிசேடனாலும் கூட திருநாவுக்கரசரின் பெருமையைக் கூறமுடியாது.

திருநாவுக்கரசர் தம் வாழ்வில் தம் உழவாரப்பணியின் காரணமாக எண்ணற்ற பல அற்புதங்களை எல்லாம் செய்திருக்கிறார். சமணர்கள் தந்த நஞ்சருந்தி உயிர் மாளாதிருந்தார். சமணர்கள் இட்ட நீற்றுச் சுண்ணாம்புக் காளவாய் இவருக்கு மலர்ச் சோலை போல் குளிர்ந்தது. இவரைக் கொல்ல வந்த யானை கொல்லாமல் பணிந்து வணங்கிச் சென்றது. அப்பூதியடிகளாரின் புதல்வரைப் பாம்பு தீண்ட அப்பர் பதிகம்பாடி பிழைக்கச் செய்தார். இவர் பதிகம்பாட அடைப்பட்டிருந்த திருமறைக் காட்டு ஆலயத்திருக்கதவம் திறந்து கொண்டது. இவரை சமணர்கள் கல்லுடன் கட்டிக் கடலில் வீசினார்கள். இவர் நமச்சிவாயப் பதிகம்பாட கல்லும் தெப்பமாக மிதந்து இவரைக் கரைசேர்ந்தது. பூவுலகிலேயே கைலாய தரிசனம் கண்ட புண்ணியம் செய்தவர் நம் திருநாவுக்கரசர்.

அவர் ஆற்றிய அற்புதங்கள் அனைத்திலும் சிறந்த அற்புதம் எது என்று சொல்லப் போனால், அதுதான் உழவாரத்திருப்பணி; தமிழகத்திலும்வடக்கே இமயமலைவரையிலும் திருநாவுக்கரசர் சென்று தரிசிக்காத ஆலயங்கள் இல்லை. இறுதியாகஅவர் தங்கியிருந்த திருத்தலம் பூம்புகலூரிலுள்ள அக்னீசுவரர் திருத்தலம்தான். எண்பது வயதான முதுமையிலும் அவர் உழவாரப் பணிபுரிந்தார். அதிலே இனிமையும் இளமையும் கண்டார். அவர் மண்வெட்டியால் தோட்டத்தைச் செப்பனிடுகிறார். அப்போது மண்ணுடன் பொன்னும் இரத்திைங்களுஞ் சேர்ந்து வருமாறு செய்கிறார் இறைவர். ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்கும் சிவநேயச் செல்வரான அவர் அவற்றை அப்படியே தூக்கக் குளத்தில் எறிகிறார். பொன்னும் பொருளும் யாருக்கு வேண்டும்? இறைவா; உம் திருவருள் அல்லவா எமக்கு என்றும் வேண்டும். 'புழுவாகப் பிறந்தாலும் உன்னடி மறவாதிருக்க வரம் தா' என்று பாடியவர் அல்லவா நாவுக்கரசர். இறைவரைக் காணவும் அவருக்கு உழவாரப் பணிபுரியவும் வரம் கிட்டுமானால் 'மனிதப்பிறவியும்வேண்டுவதேஇந்த மாநிலத்தே' என்று போற்றியவர் அல்லவா திருநாவுக்கரசர். அவருக்குப் பொன் ஓடும் ஒன்றுதான்; மண் ஓடும் ஒன்றுதான். வைரக் கற்களும் ஒன்றுதான். செங்கற்களும் ஒன்றுதான். ஆகவே புகலூரில் உழவாரப்பணி செய்யும்போது தோன்றிய பொன் நவரத்தினங்களை எல்லாம் வாரித் திருக்குளத்திலே கொட்டிவிடுகிறார். அந்த அற்புதம் அப்பர் ஆற்றிய புனிதத் திருத்தலம்தான் புகலூர். அரம்பையர்கள் வந்து ஆடிப்பாடுகிறார்கள். அப்பர் பொன்னுக்கு மயங்காதது போலவே பெண்ணுக்கும் மயங்காமல் உழவாரப்பணியைத் தடையின்றிப் புரிந்திருக்க அரம்பையர்கள் வெட்கப்பட்டு இவரை வணங்கி விடைபெற்று சென்று விடுகிறார்கள்.

'அப்பரே இனி நீர்எம் திருவடிக்கு வருக' என்று அருள் வாக்கு எழுகிறது. அப்பரும் 'புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே' என்று பாடியவாறு இறைவனடி கலந்து, சிவானந்தப் பெருவாழ்வு பெற்றுவிடுகிறார்.

அருளாளர் அப்பர் இறைவனடி கலந்தது சித்திரை மாதத்து சதய நட்சத்திரம் கூடிய பொன்னாள்;

'திருநின்ற செம்மையேசெம்மையாய்கொண்ட
திருநாவுக்கரையன் தன் அடியார்க்கும்
அடியேன்,'

என்ற சுந்தரமூர்த்தி நாயனாரின் அருள்மொழியை நினைத்து அப்பர் பெருமானின் வழியில் உழவாரப் பணிபுரியும் சிவநேயச் செல்வர்களின் திருவடிகளை வாழ்த்திவணங்குகின்றேன்.

# ஆளவந்தார்

டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்





''நமனைத் துறத்தி நமைவாழச் செய்யும்
யமுனைத் துறைவர் உலகிற்கு—அமுதனை
ஆளவந்தார் அந்தமிழ் மாமறையை
ஆளவந்தார்
ஆளவந்தார் மண்ணுலகை ஆம்''.


மணக்கால் நம்பி நமக்கு உய்யக்கொண்டார் அருளிய அருளிச் செயல்கள் முதலிய அரும்பொருள் நூல்களைப் பலருக்கும் உரைத்தார்: உலகிற் பரவச் செய்தார் இங்ஙனம் சில நாள்கள் சென்றபின் நாதமுனிகளுடைய மைந்தர் ஈசுவர முனிகளுக்கு ஒருமைந்தர் தோன்றினார். அதனைக் கேட்ட மணக்கால் நம்பி ஈசுவரமுனிகளது இல்லம் சென்று, அம்மைந்தரை நோக்கி. மிக்க மகிழ்ச்சி உற்றார். குழந்தை பிறந்த பின் செய்ய வேண்டுவனவற்றை ஈசுவர முனிகளைக் கொண்டு செய்வித்து, நாதமுனிகளின் கட்டளைப்படி பத்து நாளும் கடந்த இரண்டாம் நாள் அம்மைந்தருக்கு 'யமுனைத்துறைவர்' என்னும் திருப்பெயரை இட்டார். ஆளவந்தார் என்பது இவருக்குப் பின்பு உண்டான பெயராகும்.

அவ் அரிய மைந்தர், ஐந்தாம் வயதிற் கல்வி கற்கத் தொடங்கி, முன்னே கற்க வேண்டிய நூல்களைக் கற்று, வேதம் ஓதத் தொடங்கினார் வேதம் ஓதுகையில் தம்மோடு வேதம் ஓதுகின்றவர்கள் முன்னே ஓதினதை இரண்டாம் முறை சொல்லும்போது 'முன் ஓதின இடத்தையே மீண்டும் ஓதுகின்றீர்களே? எதுக்கு!' என்று கூறி வாளா இருப்பார். ஆசிரியர் 'அவங்களோடு நீயும் ஓது' எனின், அம்மைந்தர், 'அவர்கள் முன் ஓதின இடத்தையே மீண்டும் ஓதுகின்றார்கள்' என்பார்.

அச் சிறுமைந்தர், எவற்றையும் ஒருமுறை கேட்டவுடன் மறவாமல் உள்ளத்திற் கொள்ளும் ஆற்றல் உடையவராய் விளங்கினார். எவ்வித நுண்மாண் பொருள்களையும், எளிதில் உணரும் பேரறிவாளராகவும் விளங்கினார். அவருடைய அப்பேரறிவின் ஆற்றலைக் கண்டு, ஈசுவர முனிகள் மணக்கால் நம்பி முதலியவர்கள், மிக்க மகிழ்ச்சி எய்தினார்கள். அவர் பல நூல்களையும் நன்கு கற்றுச் சிறந்து விளங்கினார். பிறகு அவருடைய தந்தையார். அவருக்கு மணம் செய்வித்தார். பின்பு சில நாள்களில் அவர் தந்தையார் அந்தமில் இன்பத்து அழிவில் வீட்டை எய்தினர். பிறகு யமுனைத் துறைவர் மாபாடியபட்டர் என்னும் ஆசிரியரை அடைந்து இலக்கணம் தருக்கம் முதலிய நூல்களையும் கற்றறிந்தார்.

## யமுனைத்துறைவரும் பெரும்புலவனும்

அக்காலத்தில் ஆக்கியாழ்வான் என்னும் வடமொழிப் புலவன் ஒருவன் சோழவேந்தனுடைய அவையில் இருந்தான். அவன் வடமொழியில் கற்காத நூல்கள் இல்லை; சவையறிவில் 'இவனுக்கு ஒப்பாரும் மிக்காரும் இலர்'. என்று யாவரும் கூறும்படி வடமொழி



புலமையிற் சிறந்து விளங்கினான். அதனால் சோழமன்னன் அவன்டால் நன்கு மதிப்பைக் கொண்டான். அப்புலவன் கல்வியிற் சிறந்து விளங்கியது போக அவன்பால் செருக்கும் சிறந்து விளங்கியது. அவன் புலவர்களை யெல்லாம் வாதுக்கு அழைப்பான்; அவனோடு வாதமிடப் புலவர் எவரும் துணிவுகொள்ளார். புலவர்கள் அவனைக் காணின், அரிமாக் கண்ட கைம்மா எனக் கலங்குவார்கள். அப்புலவனுக்கு அந்நாட்டில் ஏடும் எழுத்தாணியும் எடுத்தவர் எல்லாரும், குடிகள் அரசர்க்குத் திறை செலுத்துதல் போல ஆண்டுதோறும் திறை செலுத்தி வந்தார்கள். அதன்படி யமுனைத் துறைவருடைய ஆசிரியர் ஆகிய மாபாடியபட்டரும் ஆண்டுதோறும் அவனுக்குத் திறை செலுத்தி வந்தார். அவர் பொருள் இன்மையால், ஓர் ஆண்டு அப் புலவனுக்குச் செலுத்த வேண்டிய காலத்தில் திறை செலுத்தவில்லை. ஆக்கியாழ்வான், தன் கணக்குப் பிள்ளையை நோக்கி, 'யாவரும் திறை செலுத்தி விட்டார்களோ!' என்று கேட்டான். கணக்குப்பிள்ளை, 'அடலேறே! மாபாடிய பட்டர் நீங்கிய அனைவரும், திறை செலுத்தி விட்டனர். அவர் ஆண்டுதோறும் அனைவருக்கும் முன் திறை செலுத்தி வந்தவர், இவ்வாண்டு இன்னும் திறை செலுத்தவில்லை. அதற்குக் காரணம் யாதோ தெரியவில்லை' என்றான்.

ஆக்கியாழ்வான், சினம் உற்று, 'திருமிகு மாபாடியபட்டருக்கு எமது கட்டளை திறைப் பொருளை, ஆண்டுதோறும் மற்றை அனைவருக்கும் முன்னதாகச் செலுத்தி வந்த நீர், இவ்வாண்டு மற்றை அனைவரும் செலுத்தி விட்ட பின்னும் செலுத்தாமலிருத்தற்குக் காரணம் என்ன! வழக்கம்போல் செலுத்த வேண்டிய திறைப்பொருளை இத்திருமுகத்தைக் கண்டவுடன் இதனைக் கொண்டு வருவோர்பால் சிறிதும் தாழ்த்தாமற் செலுத்துவீர்' என்று ஓர் ஓலையில் எழுதித் தன் பணியாளன் ஒருவன்பால் அதனைக்கொடுத்து அனுப்பினான்.

அவன் ஆணை ஓலையைக் கொண்டு அவர் அக்கட்டளை ஓலையைப் படித்துப் பார்த்து அவனுக்குத் திறை செலுத்துதற்கு உரிய பொருள் தம்பால் இன்மையால், 'இதற்கு என்ன செய்வோம்!' என்று எண்ணி வாடியிருந்தார். அப்போது யமுனைத்துறைவர் அங்கு வந்து, அவரது முகவாட்டத்தைக் கண்டு வணங்கி நின்று அவரை நோக்கினார். 'அடிகளே! எப்போதும் செந்தாமரை எனப் பொலிந்து விளங்கும் தங்கள் திருமுகம் இப்போது கரையில் எடுத்தெறியப்பட்ட பூவைப் போல வாடி இருத்தற்குக் காரணம் யாது?' என்று கேட்டார். அவர் ஆக்கியாழ்வனுக்கு எல்லாப் புலவர்களும் திறை செலுத்தி வருதலையும் அவ்வாண்டு தாம் செலுத்த வேண்டிய திறையைக் காலத்திற் செலுத்தத் தவறியதனால் அவன் தமக்குக் கட்டளை வோலை அனுப்பியிருத்தலையும் யமுனைத் துறைவருக்குக் கூறினார்.

யமுனைத்துறைவர், தம்முடைய ஆசிரியரை நோக்கித் 'தேவரீர் இதற்காகச் சிறிதும் அஞ்சுதல் வேண்டா' என்று கூறி, அப்பணியாளர் கொணர்ந்த ஓலைச் சுருளை வாங்கிக் கிழித்தெறிந்துவிட்டு 'வேதபாடகர்களாகியும், கவிகளாகியும் யாவராலும் உயர்வாகச் சொல்லப்படுபவர்களுள் யாம் ஒருவர் அல்லோம்; இவ்வுலகில் உள்ள வாதிகளாகிய யானைகளின் மதக்கை ஒழிக்க அரியேறாய் உள்ளோம் என்னும் பொருள்படும் ஒரு பாட்டினை ஓர் ஓலையில் எழுதி, அதனை அப்பணியாளன்



கையிற் கொடுத்தனுப்பினர். அவன் சென்று, அப்புலவனை வணங்கி யமுனைத் துறைவர் தன் கையிற் கொடுத்த ஓலையைக் கொடுத்துத் தான் கொண்டு சென்ற ஓலைச் சுருளை யமுனைத்துறைவர் கிழித்தெறிந்ததையும் கூறினான்.

அவ்வடமொழிப் புலவன், மிக்க சீற்றம் கொண்டு, அவ்வேந்தன்பால் சென்று, அச்செய்திகளைக் கூறினான். அம்மன்னர்பிரான் யமுனைத்துறைவரைத் தன்னிடம் வரும்படி ஓர் ஓலையில் எழுதி, அதனை ஓர் ஒற்றன் மூலமாக யமுனைத்துறைவருக்கு அனுப்பினான். யமுனைத்துறைவர், அவ் ஓலையை வாங்கிப் படித்துப் புன்னகை புரிந்து ,அதனையும் கிழித்தெறிந்து விட்டார். அவ்ஒற்றன் விரைந்து சென்று யமுனைத் துறைவரது மனவன்மையையும் அவர், அவ் ஓலையைக் கிழித்தெறிந்ததையும் கூறினான். அப்புரவலன், வியப்புற்று, அவரைக் காண வேண்டும் என்னும்விருப்புடையவனாய் விலைமிக்க மணிகளைப் பதித்த பல்லக்கையும், கொடிகளையும் பல மணிமாலைகளையும் அனுப்பினான்.

யமுனைத்துறைவரும் அப்பல்லக்கில் ஏறிச் சென்று, அரசன் முற்றத்தை அடைந்தார். அவ்வேந்தனும் அவர் வருகையை முன் ஆக உணர்ந்து எதிர் சென்று அவரை வரவேற்று சிறந்ததோர் இருக்கையில் வீற்றிருக்கச் செய்தான். யமுனைத்துறைவர் அவ் இருக்கையில் வீற்றிருந்து

உமையவள் தாளால் தூய்மை
உற்றநல் பனிம லைக்கும்
அமைகழை தோளி சீதை
அருமுகச் சேது விற்கும்
இமைஒளி தெரிக்கும் கோள்கள்
க॥ தணி கீழ்ம லைக்கும்
சுமையொரு மேல்ம லைக்கும்
ஒப்பவர் தோன்ற வில்லை.

என்று ஒரு கவியை எழுதி அம்மன்னர் பிரானிடம் ஈந்தார்.

அவ்வேந்தன் அப்போது அங்கு மறை உணர்ந்த முனிவர்களும் சிறந்த புலவர்களும் சூழ்ந்திருக்கக் கோப்பெருந்தேவியுடன் அவையில் வீற்றிருந்தான். அம்மன்னன், யமுனைத்துறைவரை நோக்கி, 'அறிஞரே! நீர் எம்முடைய புலவருடன் வாதப்போர் புரிவீராக! என்று கூறிப் பின் தன் கோப்பெருந்தேவியின் திருமுகத்தை நோக்கி 'அன்பும் அறிவும் நிறையப் பெற்றவனே! இவ்இருவருள் யார் வெல்வார்! நீ கூறுக 'என்று வினவினான். அக்கோப்பெருந்தேவி 'என் அன்புக்குரியவரே! சிவபிரானே எதிரில் வந்து மாறுபட்டு வாதிக்கினும் வெல்லுவோர் யமுனைத் துறைவரே'' என்றாள். மன்னன், 'அன்புடையாய்! நம்முடைய புரோகிதரோ, கடல் போன்ற கலையறிவின் பரப்பை உடையவர். யமுனைத்துறைவரோ தாய் முந்தானையைப் பற்றிக் கொண்டு திரியும் பருவத்தைக் கடக்காத இளஞ்சிறுவர். இவர் இச்சிறுவயதில் எத்துணை நூல்களைக் கற்றிருத்தல் கூடும்! நம்முடைய புரோகிதர் கற்ற நூற்பரப்பின் ஒரு சிறு பகுதியையும் இவர் கற்றிருத்தல் இயலாதே! அறிவுடைய நீ, இவற்றையெல்லாம் நன்கு ஆராயாமல் கூறுகின்றனையே! இஃதென் தெளிவு!'' என்றான்.

கோப்பெருந்தேவி 'பெரும்படைக்கடலை கலக்கும் திண்தோள்களை உடைய எம்மிறைவரே!

''வாமனன் எனநி னைந்தோம்
மண்ணையும் விண்ணையும் தன்
சேமத்தாள் உயர்ந்த ளந்தான்
உருவம்வே றுண்மை வேறு''.

''ஒரு சிறு கடுகின் அளவான நெருப்புப் பொறி மலைபோற் குவிக்கப்பட்ட வைக்கோற் போரை எரித்துச் சாம்பல் ஆக்குதலும் நாம் பட்டறிவில் காண்பதுதானே!

'வடிவிற் சிறிய அரிமா ஒன்று கருவரை அன்ன கைம்மாக்கடலைக் கலக்கிவிடும்என்பது தாங்கள் அறிந்ததே அன்றோ! யமுனைத் துறைவருடைய திருமுக அறிவொளி அவர் திருமாலின் திருவருள் தம்பால் நன்கு பொருத்தப் பெற்றவர் என்பதை இனிது விளக்கிக் கொண்டிருக்கின்றது; ஆதலின் அவர் வெல்வார் என்பதே என் மனத் துணிவு' என்றாள். அம்மன்னன் :'அன்புடையாய்; யமுனைத்துறைவர் தோற்கின் அதற்கு நீ கூறும் சூளுரை யாது!' என்றான்.


அவ்அரசனும் கோப்பெருந்தேவியும் இவ்வாறு கூறிக்கொண்டபின். அம்மன்னன் புரோகிதன் யமுனைத்துறைவரை நோக்

கிப் ‘பிள்ளாய் ஆழந்தெரியாமல் காலிடுவாரை போல நீ எம்முடைய கல்வியின் திறத்தை அறியாமையால் எம்முடன் வாதிக்கத் துணிந்தனை! யாம் நின்னோடு நெடுநேரம் வாதித்தல் எமக்குத் தகுதியன்று. நீஎம்மை எதிர்த்து ‘அல்ல’ என்பனவற்றை யாம் ‘ஆம்’ என்று கூறி நிலை நாட்டுவோம்; நீ ‘ஆம்’ என்று கூறுவனவற்றை ‘அல்ல’ என்று கூறி உறுதிப்படுத்துவோம். இவ்வாறு செய்யும் தருக்கத்திலே தோற்றோர் வென்றவர் காற்செருப்பை சுமத்தல் வஞ்சினம் ஆகும். நீ முன்னே உன் தருக்கமொழியைக் கூறு’ என்றான்.

யமுனைத்துறைவர், ‘புலவரே! நீர் கூறியபடி இல்லை என்பது ஒன்றையும், ஆம் என்பது ஒன்றையும் யாம் கூறுகின்றோம்; நீர் அவற்றை மறுத்துக்கூறுவீர். உம்மைப்பெற்ற அன்னையார் மலடி அல்லர்: இம் மன்னர் மன்னருடைய கோப்பெருந்தேவியார், அருந்ததி அன்ன கற்புடையார்; நீர் இவற்றை மறுத்துக் கூறுவீராக’, என்றனர்.

ஆக்கியாழ்வான், ‘என்னே இது? கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல் இருக்கின்றதே! நாம் இச்சிறு பிள்ளையோ, நெடுநேரம் வாதிடாமல் எளிதில் வென்று விடலாம் என்று எண்ணிக் கூறியவை நமக்கே தோல்வியை ஆக்குவனவாய் முடிந்தவே! நம்மைப் பெற்ற தாயை நாம் மலடி தான் என்று கூறுவோமானால், ‘என்னே புலவரே!நீர், அவ் அம்மையின் வயிற்றினின்று, கொழுக்கட்டை போலப் பிறந்து, இவ்அவையின் நடுவிற்குட்டிச் சுவர் போல இருந்து கொண்டு வாய்க்கூசாமல் அவ்அம்மையை மலடி என்று காண்டல் அளவைக்கு மாறாகப் பேசுகின்றீரே. இது தகுமா!’ என்று கேட்பார்களே! அதற்கு நாம் என்ன மறுமொழி கூறுவது! இவர், ‘கோப்பெருந்தேவியார் கற்புடையார்,’ என்றதை நாம் ‘அல்லர்’ என்று மறுத்துக் கூறுவோமானால், நம் பக்கத்தில் இருப்பவர்களே நமக்கு வானுலகுக்குச் செல்ல வழிகாட்டி விடுவார்களே! மற்றையோர் காலுக்குப் போட்டால் தலைக்கும், தலைக்குப் போட்டால் காலுக்கும் ஆக மாற்றிப் பேசி மிரட்டி வந்த மிரட்டல்கள் எல்லாம் இப்பொழுது ஒரு சிறிதும் பயன்படாமற் போயினவே! இவரை நாம் நீறு பூத்த நெருப்பு என்று நினையாமல், சிறு பிள்ளையென்று அவமதித்ததன் பயன் நம்பால் வந்து, சேர்ந்து விட்டது’ என்று எண்ணி. மறுமொழி ஒன்றும் கூறாமல், வாளா இருந்துவிட்டான்.


பின் அரசன், வேண்டுகோளின்படி, யமுனைத்துறைவர், தாமே அவற்றை மறுத்துக் கூற இணங்கி, ‘ஒரு மரம் தோப்பன்று; ஒரு பிள்ளையும் பிள்ளையில்லை என்னும் பழமொழியின்படி இவருடைய அன்னையாருக்கு இவர் ஒருவரே மைந்தன்; ஆதலின் இவருடைய அன்னையார் வாழை மலடியார் ஆவர்’ என்று முதற்கேள்வியை மறுத்துக் கூறினார். பிறகு ‘மகளிர் முன்னே வெண்மதிக்கும், பின்பு கந்தருவனுக்கும், பின்னர் தீக்கடவுளுக்கும் உரியோராய் இருந்து



பின் ஓர் ஆடவனுக்கு மனைவியர் ஆகின்றனர்’ என்று வேத நூல்கள் கூறுதலின், அம்முறைப்படி கோப்பெருந்தேவியார் கற்புடையார் ஆகார்!’ என்று இரண்டாம் வினாவுக்கும் விடை அளித்தார்.


பிறகு ஆக்கியாழ்வானை நோக்கிப் ‘புலவரே! நீர் தோற்றவர் வென்றவர் தொடுதோலை (காற்செருப்பை)ச் சுமத்தல் என்று சூள் உரைத்தீர்! நீர், அரசருடைய புரோகிதர் ஆதலால், அவவாறே செய்தல் வேண்டும் என நாம் விதிக்கச் சிறிதும் மனந்துணியோம்’ என்றார். குணம் என்னும் குன்றேறி நின்ற யமுனைத்துறைவர் உடனே ஆக்கியாழ்வான் எழுந்து சென்று யமுனைத் துறைவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி அவருக்கு அடியவன் ஆயினேன் எனறான். பின்பு கோப்பெருந் தேவியார் யமுனைத்துறைவர்பால் எழுந்து சென்று ‘நீர் எனது சபதமொழி கெடாமல் என்னை ஆளவந்தீரோ?’ என்று கூறி அவரைத் தழுவிக் கொண்டனர். அது முதல் யமுனைத் துறைவருக்கு ஆளவந்தார் என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

பின் அம்மன்னன் எழுந்து யமுனைத் துறைவரிடம் சென்று ‘என்றும் தோலாத மொழியையுடையராய் விளங்கிய எங்கள் புரோகிதரை வென்ற உம்மைச் சிறுமாமனிதருள் ஒருவர் என்று நினைக்கிலேன்; திருப்பாற்கடலில் அறிதுயில் கொள்ளும் பெருமாள் என்றே கருதுகின்றேன்.’ என்று கூறி அவரை வணங்கி நின்றான். பின் யமுனைத்துறைவர் கோப்பெருந் தேவியாரால் கூறப்பட்ட ஆளவந்தார் என்பதையே தம்முடைய திருப்பெயராகக் கொண்டு, அம்மன்னர்பிரான் கோப்பெருந்தேவியார்பால் கூறிய சபதமொழிப்படி தமக்குப் பகிர்ந்து அளித்த அரைப்பகுதி நாட்டை ஆண்டு வரலாயினார். ***



# கோவையார் கூறும் பாவையர் தன்மை

சேது. சிவா.



மணிவாசகர் தில்லை வனத்தில் சிவ யோகத்தில் இருக்கும் பொழுது கூத்தப் பிரான் அந்தணர் வடிவில் வந்து 'அன்பரே' தாங்கள் பல இடங்களில் பாடிய பாடல்கள் அனைத்தையும் தொகுத்துக் கூறுங்கள்; எழுதிக் கொள்கிறேன்' என்று கேட்கவும் அவர் தான் ஆங்காங்கு பாடிய பாடல்களைத் திரும்பக் கூற அனைத்தையும் ஏடுகளில் எழுதிக் கொண்ட அந்தணர் 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்றார்.

மார்கழி மாதம் கன்னிப் பெண்கள் அதிகாலையில் எழுந்து தம் தோழியரையும் எழுப்பிக் கொண்டு தண்ணீர்த் துறைக்குச் சென்று குளித்துப் பழமைக்குப் பழமையாகவும் புதுமைக்கும் புதுமையாகவும் உள்ள சிவபிரானிடம்; 'சிவனடியார்களின் திருவடிகளைத் தாம் வணங்குவதாகவும்; அவர்களுக்குத் துணையாக இருப்பதாகவும் அவர்களே தங்களின் கணவன்மார்களாக அமைய வேண்டும் என்றும்; அவர்களின் சொற்படி தாங்கள் தொண்டுகள் செய்வதாகவும்; அவ்வாறு அருள் செய்தால் தாங்கள் ஒரு குறையும் இல்லாதவர்கள் ஆவோம்' என்றும் வேண்டுவதாகத் திருவாசகம் திருவெம்பாவையில் பாடி இல்லற வாழ்க்கைத் துணைவரைச் சுட்டிக் காட்டி இன்ப அன்பு உணர்வுகளைக் கொண்ட அகத்துறையைத் திருக்கோவையாரில் விரிவாகப் பாடுகின்றார்.

உயிராகிய தன்னைத் தலைவனாகவும்; தான் பெறும் இறையின்பத்தினைத் தலைவியாகவும் வைத்து ..அகத்துறை நிகழ்வுகளைக் களவு நெறி கற்பு நெறி என அந்நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப நிரல்படப் பாடுகின்றார்.

இத்திருக்கோவையாரை அந்தணர்கள் வேதம் என்றும் யோகிகள் ஆகமத்தின் முதல் நூல் என்றும் காமுகர் காமநூல் என்றும் தார்க்கியர்கள் தருக்க நூல் என்றும் புலவர்கள் இலக்கண நூல் என்றும்; போற்றுவதாக நூற்சிறப்புப் பாடல் பாடுகின்றது.

'ஆரணம் காண்என்பர் அந்தணர்,
யோகிகள் ஆகமத்தின்
காரணம் காண்என்பர்; காமுகர்
காம நன்னூல் அதுஎன்பர்
ஏரணம் காண் என்பர்; எண்ணர்,
எழுத்து என்பர் இன்புலவோர்
சீரணங்கு ஆய சிற்றம்பலக்
கோவையைச் செப்பிடினே

உடலாற் பெறும் சிற்றின்ப உணர்வுகளை உயிரால் பெறப்படும் பேரின்பத்துடன் இணைத்துப் பாடியுள்ளதனால் இதனை 'காமம் சான்ற ஞானப் பனுவல்' என்று பெரியோர்கள் அழைக்கலாயினர்.

அகத்துறையில் உள்ளத்தில் அடுத்து அடுத்து உண்டாகும் உணர்வுகளையும், நிகழ்வுகளையும் திருக்கோவையாரில் நிரல்படப்

பாடி இருப்பினும் உலகியல் நடைமுறை வாழ்வுக்கு ஏற்பப் பெண்களின் தன்மை பண்பு இல்லற வாழ்வு பற்றிய சில பாடல்களை வரிசைப்படுத்தி இக்கட்டுரையில் பார்ப்போம்.

பெண்ணாகப் பிறந்தவளின் தன்மையை 'மலையில் தோன்றி, வண்டுகளை ஈர்க்கும் நறுமணமுள்ள சந்தனமும் (மரம்) கடலில் தோன்றிய வெண்மையான முத்தும் சங்கும் தாம் பிறந்த இடங்களுக்குப் பயன்படாமல், தம்மை விரும்பி அணிந்து கொள்பவரின் உடலுக்கு அழகு செய்வது போன்று, பெண்ணாகப் பிறந்தவளும் பிறந்த இடத்திற்குப் பயன்படாமல் தன்னை மாலை மற்றும்மங்கல நாண் அணிவித்து) ஏற்றுக் கொண்டவனுக்கும் பயன் படுவாள்' என்று பாடுகின்றார்.

''சுரும்பு இவர் சந்தும் தொடுகடல்
முத்தும் வெண்சங்கும் எங்கும்
விரும்பினர் பாற்சென்று மெய்க்கு அணியாம்
வியன் கங்கை என்னும்
பெரும்புனல் சூடும் பிரான் சிவன்
சிற்றம்பலம் அனைய
கரும்புஅன மென் மொழியாரும்
அந்நீர்மையர் காணுநர்க்கே..... 248

தாம் பெற்ற பெண் குழந்தை வளர்ந்து ஆளாகிக் கன்னிப் பருவம் அடைந்தவுடன், பெற்றோர் அவளுக்குத் தகுந்த ஆண்மகனைத் தேடுகின்றனர். எங்கோ பிறந்த ஆணுக்கும் எங்கோ பிறந்த பெண்ணுக்கும் அமைப்பு ஏற்கெனவே அமைக்கப்பட்டு இருப்பதனைப் பேச்சு வழக்கில் 'திருமணங்கள் சுவர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன, என்று பேசப்படுகின்றது.

மணிவாசகர், ஓரிடத்தில் பிறந்த ஆணும் மற்றோர் இடத்தில் பிறந்த பெண்ணும் இணைவதற்கு ஒரு அருமையான உதாரணம் காண்பித்துப் பாடுகின்றார்.

'சங்குகள் நிறைந்த கிழக்கேயுள்ள கடலில் (இந்து மகாசமுத்திரம்) விடப்பட்ட கழி (முளைக்குச்சி) மேற்குக் கடலில் (அரபிக் கடல்) விடப்பட்ட நுகத்தடியின் துளையில் கோர்த்துக் கொண்டதனைப் போன்று. கயிலை மலையின் ஆயத்தாரிடமிருந்து பிரித்துக் கெண்டை போலும் கண்களை யுடையவளைத் தந்த விளைவு ஆகிய தெய்வத்தினை அல்லாது பிற தெய்வங்களை வியப்பதுவும் நயப்பதுவும் செய்யேன்' என்று பாடுகின்றார்.

''வளைபயில் கீழ்கடல் நின்றுஇட
மேல்கடல் வான்நுகத்தின்
துளைவழி நேர்கழி கோத்து எனத்
தில்லைத் தொல்லோன கயிலைக்
கிளைவயின் நீங்கிக் கெண்டைஅம்
கண்ணியைக் கொண்டு தந்த
விளைவை அல்லால் வியவேன்
நயவேன் தெய்வம் மிக்கனவே''

திருமணம் நிறைவேற்றப் பெற்ற இருவரும் இணைந்து அனுபவிக்கும் இன்பமானது, அமுதத்திலிருந்து அதன் சுவையைப் பிரித்து அறிய முடியாதவாறு, இணைந்தே இருப்பது போன்று, அவள் அமுதமாகவும், அவன் சுவையாகவும் இருக்கும்படி வினையாகிய தெய்வம் தந்தது என்று பாடுகின்றார்.

''சொற்பால் அமுதுஇவள் யான்சுவை
என்னத் துணிந்து இங்ஙனே
நற்பால் வினைத் தெய்வம் தந்து இன்று
நான் இவளாம் பகுதிப்
பொற்புஆர் அறிவார் புலியூர்ப்
புனிதன் பொதியில் வெற்பில்
கற்பாவிய வரைவாய்க் கடி
தோட்ட களவகத்தே.... 8

இல்லறத் தலைவனும், தலைவியும் நுகரும் இன்ப நுகர்ச்சியை மற்றொரு பாடலில்; 'இன்பக் கடலில் அழுந்த ஆர்வம் கொண்ட ஒரு உயிர், ஒரு உடம்பால் அவ்வின்பத்தினைத் துய்த்தால் நிறைவு படாது என்று இரண்டு உடல்களைக் கொண்டு இன்ப வெள்ளத்தில் திளைப்பதாகவும். அந்த இன்பமும், ஒலிக்கின்ற திருவடிகளையுடைய அம்பல கூத்தனின் அருளைப் பெற்றவரின். இன்பம் போல ஒருகாலத்தும் குறைவு படாது; முதிர்ச்சியும் அடையாது' என்று பாடுகின்றார்.

''ஆனந்த வெள்ளத்து அழுந்தும்ஓர்
ஆர்உயிர் ஈர்உருக் கொண்டு
ஆனந்த வெள்ளத்திடைத் திளைத்தால்
ஒக்கும் அம்பலம் சேர்
ஆனந்த வெள்ளத்து அறைகழலோன்
அருளைப் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம் வற்றாது
முற்றாது இவ்வணி நலமே''..... 307

பெண்ணிற்குத் தாய் போல் நாணம் சிறந்தது என்றும்; அந்த நாணமும் கற்பினும் சிறந்தது அன்று என்றும் கற்பின் சிறப்பினைப் பாடுகின்றார்.

''தாயிற் சிறந்தன்று நாண்
தையலாருக்கு அந்நாண் தகைசால்
வேயிற் சிறந்த மென்தோளி! திண்
கற்பின் விழுமியது அன்று..'' 204



இல்லறத்தில் தலைவனும் தலைவியும் இன்பதுன்பங்களை ஒன்றாகவும் பொதுவாகவும் அனுபவிக்க வேண்டும் என்பதனை ஒரு சிறந்த உதாரணம் காண்பித்தும் பாடுகின்றார்.

காகத்திற்கு கண்கள் இரண்டு. ஆனால் விழி ஒன்றுதான். அந்த ஒரு விழியே இரண்டு கண்களுக்கும் உருண்டோடிச் சென்று பார்வையைக் கொடுக்கின்றது. காகம் இருபக்கமும் தலையைச் சாய்த்துச் சாய்த்துப் பார்ப்பதனால் அதற்கு 'ஓரக்கண்ணி' என்கின்ற சொல்லும் உண்டு.

ஒரு விழியே இரண்டு கண்களுக்கும் பார்வையைக் கொடுப்பது போன்று அனைத்திலும் ஒருவனாகவுள்ள அம்பலக் கூத்தனின் சோலைகள் நிறைந்த மலையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இரண்டு உடல்களில் உயிர் ஒன்றாகவும் இன்டதுன்பங்கள் இருவருக்கும் பொதுவாகவும் இருந்தன என்று பாடுகின்றார்.

''காகத்து இருகண்ணிற்கு ஒன்றே
மணி கலந்து ஆங்கு இருவர்
ஆகத்துள் ஒருயிர் கண்டனம்
யாம் இன்று; யாவையுமாம்
ஏகத்து ஒருவன் இரும்பொழில்
அம்புலவன் மலையில்
தோகைக்கும் தோன்றற்கும் ஒன்றால்
வரும் இன்பத் துன்பங்களே....'' 71

பெண்ணின் வாழ்க்கைத் துணைவனின் தன்மையை, 'வேண்டாமல் மழை கொடுக்கும் மேகம் போன்றும்; வேண்டக் கொடுக்கும் கற்பக மரம் போன்றும், கற்றவர்களுக்கு நல்ல பேச்சுத் துணையாகவும், இசைப் பாணர்க்குச் சுற்றமாகவும், நினைத்ததைக் கொடுக்கும் சிந்தாமணி போன்றும், தில்லைப் பிரானின் திருவடிகளுக்குச் சூட்டப் பெறும் கொன்றைப் பூவின் தன்மையனாகவும் நண்பருக்கும் டகைவருக்கும் (பயன் கொடுத்தலின்) விதியாகவும் உறவினர்களுக்கு ஊருணியாகவும், மற்றுமுள்ள அனைவருக்கும் பயனாகவும் இருக்கின்றான்.' என்று பாடுகின்றார்

''காரணி கற்பகம் கற்றவர்
நற்றுணை பாணர் ஒக்கல்
சிரணி சிந்தாமணி அணி
தில்லைச் சிவன் அடிக்குத்

தாரணி கொன்றையன் தக்கோர்
தம் சங்கநிதி விதிசேர்
ஊருணி உற்றவர்க்கு ஊரன்
மற்று யாவர்க்கும் ஊதியமே,,..'' 400

சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் நான்கினில் முதலாவதாகிய திருவுந்தியார்

'பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் அங்கே
முற்ற வரும்பரிசு உந்தீபற
முளையாது மாயை என்று உந்தீபற' என்றும்

இரண்டாவது நூலாகிய திருக்களிற்றுப்படியார்;

'உடம்புடை யோகிகள் தாம் பெற்ற
சிற்றின்பம்
அடங்கத்தம் பேரின்பத்து ஆக்கி' என்றும் பாடுகின்றன.

மணிவாசகர் திருவாசகத்திலும்;

''காணும் கரணங்கள் எல்லாம் பேரின்பமாய்
பேணும் அடியார்' என்று பாடுகின்றார்.

இந்த மண்ணில் பிறந்து தாங்கள் அனுபவித்த அனைத்துச் சிற்றின்பங்களையும் சிவபிரானின் அருளே என்று அருளாளர்களும், அடியார்களும் நெஞ்சில் நிலை நிறுத்தி வாழ்ந்து, சீவன் முத்தர்களாக மாறி, இறைவன் திருவடிகளுக்கு ஆளானார்கள்.

திருஞான சம்பந்த சுவாமிகள் சிவநேசர் குடத்தில் கொண்டு வந்த எலும்புகளையும் சாம்பலையும் பெண்ணுருவாக எழுந்து வரப் பாட அழகிற் சிறந்த பன்னிரண்டு ஆண்டு அகவைப் பூம்பாவையாக எழுந்து வந்த பொழுது அவர் அப்பெண்ணின் அழகினைக் காணவில்லை; நெற்றிக்கண்ணையுடைய சிவபிரானின் கருணை வெள்ளமாகக் கண்டார்.

'புண்ணியப் பதினாறு ஆண்டு பேர் பெறும்
புகலி வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிரம்
முகத்தால் கண்டார்'
என்றும்;

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவையாரின் அழகினை 'அற்புதமோ சிவன் அருளோ அறியேன் என்று அதிசயித்தார்' என்றும்;

'பூங்கோவிலில் இருந்து மற்றொரு வழியாகச் சென்று விட்ட பரவையாரைக் காணாது 'எம்பிரான் அருள் எந்நெறிச் சென்றதே என்று வருந்தினார்' என்றும்;



திருவொற்றியூரில் சங்கிலியாரின் மணி அல்குல் துறை படிந்து மிகும் புணர்ச்சியைப் பேரின்பமாக உணர்ந்தார் என்றும்;

'யாழின்மொழி எழில் முறுவல் இருகுழை மேல்
கடை பிறழும்
மாழைவிழி வனமுலையார் மணிஅல்குல் துறை
படிந்து
வீழும்அவர்க்கு இடை தோன்றி மிகும்புலவி
புணர்ச்சிக்கண்
ஊழியும் ஒருகணம் தான் அவ்வூழி ஒருகண
மாம்''
'இந்நிலையில் பேரின்பம் இனிது அமர்வார்'
என்றும் தெய்வச் சேக்கிழார் பாடுகின்றார்.

'பெண்களைச் சேர்ந்து அனைத்துப் பெறக் கூடிய இன்பத்தினை மாற்றி தம்மை நிக்கும் வல்லமையுடையவர்களுக்குப் பெரும் பற்றப் புலியூர்ப் பிரான் பெரிய துணையாக வருவான்' என்று திருநாவுக்கரசு சுவாமிகள் பாடுகின்றார்.

'வான்புலன்கள் அகத்தடக்கி மடவாரோடும்
பொருந்தணைமேல் வரும் பயனைப் போக
மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லார்க்கு
என்றும்
பெரும் துணையாம் பெரும் பற்றப்
புலியூரானை.'

முடிவுரை: அரிதிலும் அரிதாகக் கிடைத்துள்ள இந்த மானிடப் பிறவியில் நுகரும் சிற்றின்பங்கள் அனைத்தையும் 'உளமார' இறைவனின் அருளை அனுபவிப்பதாக ஒன்றி உணர்ந்து அதனைப் பேரின்பமாக மாற்ற முயலுவோமாக.

# அன்னத்தால் அருள் பெற்ற அன்பு நாயனார்

தானத்தில் சிறந்தது அன்னதானம். ஒருவருக்கு போதுமென்ற அளவுக்கு தானம் கொடுப்பது அன்னதானமே. அளவுக்கு மீறி ஆசைப்பட்டு அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் அன்னம் மட்டும் தேவைக்கு மேல் பெற்றுக் கொள்ள முடியாது. வசதி படைத்தவர்கள் அன்னதானம் செய்வது பெரிய காரியம் அல்ல. வறுமையான நிலையில் தான தருமம் செய்வதுதான் பாராட்டுக்குரிய செயலாகும். நல்ல செல்வத்துடன் இருந்து சிவனடியார்களுக்கு அமுது செய்விக்க செல்வம் குறைந்து வறுமை நிரம்பி வறுமையிலும் சிறுமையின்றி தன்னுடைய தொண்டினை விடாது செய்து சிவபெருமானின் பூரண அருள் பெற்றவர்தான் இளையான் குடி மாற நாயனார்.

இளையான் குடி என்றதும், மாற நாயனாரின் நினைவுதான் சிவபக்தர்களுக்குவரும். பாண்டிய நாட்டில் பரமக்குடி அருகில் இளையான்குடி உள்ளது. இத் திருப்பதியில்தான் வேளாளர் குலத்தில் செல்வச் செழிப்போடு நில புலனகள் உள்ள குடும்பத்தில் அவதரித்தவர் மாறநாயனார். இவ்வூரின் திருப்பெயரை வைத்தே இவருக்கு 'இளையான்குடி மாற நாயனார்' என்ற பெயர் நிலைத்துவிட்டது.

இவர் தில்லையிலே நடனமாடுகின்ற நடராஜப் பெருமானிடம் அதிக அளவு காதல் கொண்டவர். சதா அவரை தியானித்து வந்தார். 'சித்தமெல்லாம் எனக்குசிவ மயமே' என்ற கோட்பாட்டுடன் வாழ்ந்து வந்தார். இவருக்கு தகுந்தாற்போல இறைவனின் திருவருளாலே இவருக்கு வாய்த்த மனைவியும் இவரைப் போலவே இறை பக்தியில் அதிக நாட்டங் கொண்டவர். இறைவனுக்கு தொண்டு செய்ததினால் நல்ல கணவர் கிடைத்திருக்கிறார். நல்ல கணவரை அமைத்துக் கொடுத்த இறைவனுக்கு' அவன் மூலமாக நம்மை காத்து வருகின்ற கணவருக்கும் தொண்டு செய்வதே பிறவிப் பயன் என்பதை நன்குணர்ந்தவர்.

''அம்பொன் நீடிய அம்பலத்தினில்
ஆடுவார் அடி சூடுவார்
தம்பிரான் அடிமைத் திறத்துயர்
சால்பின் மேன்மை தரித்துளார்

நம்பு வாய்மையில் நீடுசூத்திர
நற்குலஞ் செய் தவத்தினால்
இம்பர் ஞாலம் விளக்கினார் இளை
யான் குடிப்பதி மாறனார்.''

தில்லையிலே ஞான வெளியில் எம்பெருமான் ஆனந்த தாண்டவம் புரிகின்றான். அம்பலத்தில் ஆடுகின்ற அவனின் அடி தன முடி மீது சூடிய இளையான் குடி மாற நாயனார் எப்போதும் அவனிடம் அடிமைத் திறம் பூண்டவர். பற்றற்ற அன்பினால் பரம்



பொருளைத் தரிசிக்கும் வாய்ப்பு பெற்றவர். சிவபெருமானுடைய தொண்டர்களுக்கு தனது சக்திக்கு மீறி அனைத்தையும் செய்யக் கடமை பட்டவர். தொண்டர்கள் உள்ளத்தில் எப்போதும் உறைகின்றவன் இறைவன் என்ட தால் தொண்டர்கள் வழிபாட்டில் அதிக அக்கறை உள்ளவர்.

மிக்க செல்வம் பெற்றிருந்த மாறநாயனார் செல்வத்தின் பயன் அடியவர்க்கு அமுது அளித்தலே என்ற விரதத்தை மேற்கொண்டவர். தினமும சிவனடியார்கள் எவரையாயினும் அழைத்து வந்து நன்கு உடசரித்து இருக்கையில்அமர்த்தி அவர்களுடைய திருவடிகளை தண்ணீரால் கழுவ பூஜித்து பின்பு அறுசுவை உணவையும் அன்புடன் விரும்பியவாறு அமுது செய்விப்டார்.

"கொண்டு வந்து மனைப் புகுந்து
குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆதனத்திடை
வைத்த ருச்சனை செய்த பின்
உண்டி நாலு விதத்திலாறு
சுவைத் திறத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில்
அடுது செய்து அளித்துள்ளார்."

வைணவத்தில் பன்னிரண்டு ஆழ்வார்களில் திருமங்கையாழ்வார் ஒருவர். இவருடைய இயற்பெயர் நீலன். வைணவ வைத்தியரின் வளர்ப்பு மகனான குமுதவல்லியை மணக்க ஆசைப்படுகிறார். சோழ அரசனிடத்தில் திருமங்க என்னும் பதிக்கு சிற்றரசனான இவர் வைணவ வைத்தியரிடத்தில் பெண் சேட்கிறார். அவர் சம்மதம் தெரிவிக்கவே குமுதவல்லி ஆயிரம் வைணவ அடியார்களுக்கு உணவு படைத்து அவர்களுடைய தளிகைப் பிரசாதமும் பாத தீர்த்தமும் உட்கொண்டாலன்றி உன்னை மணக்க சம்மதிக்க மாட்டேன் என்கிறாள். அவ்வாறே செய்வதாக பிரமாணம் பண்ணி குமுதவல்லியை மணக்கிறார். தினமும் 1008 வைணவர்களுக்கு உணவு படைத்து தமமுடைய செல்வம் எல்லாவற்றையும் இழக்கிறார். சோழ அரசனுக்கு கப்பமும் கட்ட முடியவில்லை. களவுத் தொழில் செய்தாகிலும் வைணவ அடியவர்களுக்கு உணவு படைக்க வேண்டும் என்ற நியதியுடன் களவுத் தொழிலை மேற்கொண்டு பெருஞ் செல்வர்களிடத்தில் வழிப்பறி செய்து அதன் மூலம் அமுது செய்விக்கும் தொண்டினைச் செய்கிறார். இவருடைய தூய பக்தியை உலகிற்கு எடுத்துக் காட்டவும் இவரை ஆட்கொள்ளவும் நினைத்து தாமே திருமகளுடன் புதுமணத் தம்பதியராய் வேடம் பூண்டு தம்மை வழிப்பறி செய்யுமாறு வருகிறார்.

மங்கை மன்னனாகிய நீலன் ஆடை ஆபரணங்கள் அனைத்தையும் கொள்ளையடித்து ஒரே மூட்டையாகக் கட்டி, தூக்க முயன்றும் முடியவில்லை தன்னுடைய வாளை உருவி 'என்ன மந்திரம் செய்தாய்? மூட்டையைத் தூக்க முடியவில்லை' என்று ஓங்க இதுதான் தக்க தருணம் என்று எதிர்பார்த்திருந்த 'திருமகள் கேள்வன்' 'வா உனக்கு அந்த மந்திரத்தைச் சொல்கிறேன் என்று 'ஓம் நமோ நாராயணாய' என்ற அஷ்டாச்சர மந்திரத்தை உபதேசித்தருளி தேவியர்களுடன் கருடாழ்வார் சகிதமாக காட்சி கொடுத்து மறைந்தருளினார். அடியார்களுக்கு அமுது செய்வித்ததன் மூலம் 'ஸ்ரீமந் நாராயணன் மூலமாகவே மந்திர உபதேசம் பெற்று தன் நிலையை உயர்த்திக் கொண்டு, அவரை நேரிடையாக காணும் வாய்ப்பினையும் திருமங்கையாழ்வார் பெற்றார்.

இதனை அடிப்படையாகக் கொண்டு தான் இப்போதும் 'சமாராதனை என்ற பெயரில் கோவில் விழாக்களில் அன்னதானம் வழங்கப்படுகிறது, இப்படி அன்னமிட்டு இறைவனின் அருளைப் பெற்றவர் வைணவத்தில் திருமங்கையாழ்வாரும், சைவமதத்தில் இளையான் குடி மாற நாயனாரும் என்பது குறிப்பிடத்தக்கது.]

தினமும் மாற நாயனார் இல்லத்தில் சிவனடியார்களின் கூட்டம் நிரம்பியது. இவர் செய்யும் அமுது படைக்கும் தொண்டினால் இளையான்குடி புகழ் ஓங்கியது. அனைத்து மக்களும் இவருடைய பெருந்தொண்டினைப் பாராட்டினார்கள்.

ஏழ்மையினால் கஷ்டப்படும்போதும் நாயனார் அடியார்க்கு அமுது படைப்பதில் சலியாதவர் என்பதனை உலகுக்கு எடுத்துக் காட்டவும் நாயனாரின் தூய பக்தியை உலகுக்கு காட்ட வேண்டுமென்றும் எம்பெருமான் எண்ணங்கொண்டார். அதனால் இவர் அனமம் அளித்ததின் பயன் புண்ணியம் சேர்ந்தது; வறுமை தலைகாட்டத் தொடங்கியது. செல்வம் சிறிது சிறிதாகக் கரையத் தொடங்கியது. நாயனார் வறுமையில் வாடத்தொடங்கினார். தனக்கும் தனது மனைவிக்கும் உணவு இல்லையே என்று கவலைப்படாமல் அடியார்களுக்கு உணவளிக்க முடியவில்லையே என வேதனைப்பட்டார். இருப்பினும் மாற நாயனாருக்கு செல்வம் சுருங்கியும் மனம் சுருங்கவில்லை. சிறிது, நிலத்தை வைத்துக்கொண்டு அனைத்தையும் விற்பனை செய்தார். நகை நட்டுகள் பாத்திரங்கள் அனைத்தையும் விற்று அடியார்களுக்கு அன்னமளித்து வந்தார். நாயனாரின் பெருந்தொண்டிற்கு அவரது துணைவியாரும் அணுவளவும் குறையாமல் அவருக்கு உதவியாய் இருந்து துணை புரிந்து வந்தாள்.

சிவபெருமான் இவர்களை ஆட்கொள்ளும் காலம் கனிந்துவிட்டது என்று இந்த சமயத்தில் வயது முதிர்ந்த நல்ல தவசீலர் வேடம் பூண்டு கையில் தடியுடன் மற்றொரு கையில் உத்திராட்ச மாலையுடன் தனியாகப் புறப்பட்டு வந்தார். நல்ல மழை பெய்து எங்கும்நீர்ஓடச்செய்தார். எங்குபார்த்தாலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. நாயனாரும் அவரது மனைவியும் உண்ண உணவின்றி பட்டினியால் வாடி வருந்திக் கொண்டிருந்தார்கள். தண்ணீர் அருந்தி இறைவனை தியானித்து உறக்கமின்றி தவித்துக்கொண்டிருந்தார்கள்.

தவவேடம் புனைந்த எம்பெருமான் ஈரத்தில் நனைந்து கொண்டு குளிரால் உடல் நடுங்க நாயனாரின் கதவை மெல்லத் தட்டினார். 'ஓம் சிவாயநம' என்று பலமாக உச்சரித்தார். சிவாய நம என்ற நாமத்தைக் கேட்டதும் வந்துள்ள தவசீலருக்கு எப்படியாவது அன்னம் அளிக்க வேண்டுமே என்று ஓடி வந்து பயபக்தியுடன் கதவைத் திறந்தார். வந்த தவசீலர் 'அன்பனே அதிகமாக பசிக்கிறது. புசிக்க வேண்டும்' என்றார்.

மாற நாயனாரும் அவரது மனைவியும் அதிர்ச்சி அடையவில்லை. முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது. நம்மிடத்தில் இவருக்கு அமுது படைக்க எந்த வசதியும் இல்லையே: நாம் எப்படி இவரை உபசரிப்பது என்ற எண்ணம் சிறிது கூட வரவில்லை. யோசிக்கவும் இல்லை. ஈரத்தில் நனைந்து வந்திருந்த அடியாரின் மேனியை வஸ்திரத்தால்துடைத்தார்.

''ஈரமேனியை நீக்கி இடங் கொடுத்து
ஆர இன்னமுதூட்டுதற் காசையால்
தார மாதரை நோக்கித் 'தபோதனர்'
தீரவே பசித்தார் செய்வதென்' என்று

அடியாரே: தாங்கள் எதிர்பாராத விதமாக இங்கு எழுந்தருள அடியேன் என்ன பாக்கியம் செய்தேனோ? என்று மனைவியுடன் மகிழ்ச்சியோடு துதி செய்து உபசரித்தார்.

அடுத்து பசியோடு வந்துள்ள அடியார்க்கு பசியைப் போக்க வேண்டுமே! என்னசெய்வோம் என்று சிந்தனை வர. ஒன்றும் வழி இல்லை. பக்தர்களின் பசியைப் போக்கக்கூடிய பரமனே பசியுடன் வந்தால்யார் தான் என்ன செய்ய முடியும்!

உணவுக்குரிய சாதனங்கள் யாதொன்றும் இல்லாத நிலையில் நாயனார் வழியேதும் புரியாமல் அன்பிற்குரிய தன் மனைவியைப் பார்த்து 'அன்புடையோய்' எம்பெருமானுடைய அடியார் பசியுடன் களைப்போடு வந்திருக்கிறார். நம் மனைக்கு வந்துள்ள அவரை பட்டினியோடு விடக்கூடாது. இந்த தவசீலருக்கு அமுதுபடைக்கும் வழி என்ன' என்று கேட்டார்.

இறை பக்தி நிறைந்த அம்மாதரசி பல வழிகளிலும் ஆராய்ந்து பார்த்தார். கடன் கொடுப்பாரும் இல்லை. காலமோ அகாலம் நடுநிசி. முயற்சி செய்து பார்க்கக் கூடிய இடங்களும் இல்லை. கடைசியில் ஒரு வழி தோன்றியது.

''ஸ்வாமி: இன்று நம் வயலில் நாம் விதைத்து வைத்த நெல்லை வாரிக்கொண்டு வந்தால் அக்னியில் வறுத்து, குத்தி அமுதாக்கிப் படைக்கலாம். இதனைத் தவிர தற்போது வேறு வழி இல்லை என்றார் அம்மையார்.

''செல்லல் நீங்கப் பகல் வித்
  திய செந்நெல்
மல்லல்நீர் முளை வாரிக்
  கொடு வந்தால்
வல்ல வாறமு தாக்கலும்
  ஆகும் மற் (று)
அல்ல தொன்றறி யேன்! என்
  றயர் வுற''

மனைவியின் சொற்கள்நாயனாருக்கு அமிர்தம் போலிருந்தது. நெல் முளையை இப்போதே எடுத்துக் கொண்டு வருகிறேன் என்று கூறிப் புறப்பட்டார். அவர் புறப்பட்டபோது மழை கொட்டிக் கொண்டிருந்தது. அடியார்க்கு

அமுது செய்விக்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடு தலையில் கூடையைக் கவிழ்த்துக் கொண்டு நடு இருட்டில் 'ஓம் நமச் சிவாய' என்ற நாமத்தை சொல்லிக் கொண்டே நடந்தார். போட்ட விதை இறைவனின் சோதனையில் முளைத்தும், தண்ணீரில் மிதந்து கொண்டு ஒருபுறம் ஒதுங்கியும் இருந்தது. நெல் விதையை அவசர அவசர மாக வாரிக்கூடையில் போட்டுக்கொண்டு மிக வேகமாக தனது இல்லத்தை நோக்கி நடந்து வந்தார். வாசலிலேயே கணவனை எதிர் பார்த்துக் கொண்டிருந்த மனைவி கூடையை வாங்கினார்.

கூடையிலிருந்த நெல் முளையை அம்மையார் அவர்கள் தண்ணீரில் கழுவினார்.

'ஸ்வாமி! இந்த நெல் முளையை வறுத்து, குத்தி பக்குவப்படுத்தி அமுதாக்குகிறேன். அடுப்பிற்கு விறகு இல்லையே! நெல் வந்த பிறகு தானே அடுப்பெரிக்க வேண்டும என்று மௌனமாக இருந்துவிட்டேன். மன்னிக்க வேண்டும். விறகுக்கு ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்று தாழ்ந்த குரலில் கூறினார்.

மாற நாயனார், ''அன்புடையாய்! கவலைப் படாதே. இதோ இப்பவே விறகு தயார் செய்து வருகிறேன் என்று அன்புடன் கூறி, தாம் வசிக்கும் வீட்டின் கூரையின் ஒருபுறத்தை இடித்துத் தள்ளினார். கூரையின் உள்புறத்தில் நனையாத கட்டைகளை எடுத்துக் கொடுத் தார். அந்தக் கட்டைகளை வைத்து அம்மையார் அடுப்பெரித்து நெல் முளையை வறுத்து குத்தி அரிசியாக்கி அன்னமாக்கினார்.

அன்னம் தயார் செய்தவுடன் மீண்டும் அடுத்த பிரச்சனை வந்து விடுகிறது. 'என் பிராண நாதா: இனி கறிக்கு என்ன செய்ய வேண்டும். சோறு ஆனபின் தானே கறியமது பற்றி நினைக்க வேண்டும்: என்ன செய்வது என்று கேட்க, நாயனார், பசியுடன் வந்தி ருக்கும் அடியார்வருந்திக் கொண்டிருப்பாரே! என்று அன்பின் மிகுதியால் தோட்டத்தில் உள்ள குழிக்கு மேல் வளர்ந்துள்ள காட்டுக் கீரையை வேருடன் பறித்துக் கொண்டு வந்து அன்பு மனைவியாரிடம் கொடுத்தார்.

'' மனைவியார் கொழுநர் தந்த
மனமகிழ் கறிகள் ஆய்ந்து
புனலிடைக் கழுவித் தக்க
புனித பாத்திரத்துக் கைம்மை
வினையினால் வேறு வேறு
கறியமுதாக்கிப் பண்டை
நினைவினால் குறையை நேர்ந்து
திருவமு தமைத்து நின்று''

கணவர்கொண்டு வந்த காட்டுக்கீரையைப் பெற்றுக் கொண்ட அம்மையார், வேரினை அறுத்து புல் புழுவின்றி ஆய்ந்து பல முறை தண்ணீரில் நன்றாகக் கழுவி சுத்தமான பாத் திரத்தில் வைத்து கீரையை மசக்கி நன்றாக வேகவைத்து ருசிக்கும் வண்ணம் கூட்டுசெய்து அமுது செய்விக்கும் தயார் நிலையில் வைத் திருந்தார்.

சிவ பக்தி கொண்ட தம்பதிகளான மாற நாயனாரும், அவரது மனைவியும் தவசீலராக வந்த இறைவன் பால் சென்று, ஆகாரம் தயாராக உள்ளது. தயவு செய்து எழுந்தருள வேண்டும் என்று பணிவுடன் அவரை எழுப்பி னர்.

இவர்கள் எழுப்பியதும் சிவனடியாரான எம்பெருமான் அந்த தவசீலர் தோற்றத் துடனா எழுந்திருந்தார்? ஆதியும் அந்தமு மில்லாத சிவபெருமானே அங்கே சோதியில் எழுந்து தோன்றினார்.

'அழுந்திய இடருள் நீங்கி அடியனேன்
உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய்: ஈண்டு
அமுது செய்தருள்க' என்று
தொழும்பனார் உரைத்த போதில்
சோதியாய் எழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவியாரும்
தொண்டரும், திகைத்து நின்றார்.

அரும் பெருஞ்சோதி வடிவத்திலே நாயனா ருக்கும் அவரது மனைவிக்கும் அருள் புரிய அவர்கள் எல்லையில்லா மகிழ்ச்சியடைந்து ஆனந்தக் கண்ணீருடன், இறைவா உன் கருணையே கருணையென்று துதி செய்து வணங்கினர்.

சங்கரா போற்றி ஞானசம்புவே போற்றி
யாற்றில்
வெங்கரா வடுமால் காணா விமலனேபோற்றி
யென்றும்
செங்கரா மலகம் போன்று திருவருள்
செய்வோய் போற்றி
பொங்கரா வணிந்த வேத புங்கவ போற்றி
போற்றி''
என்று துதித்தனர்.

திருத்தொண்டரான மாற நாயனாரை நோக்கி சிவபெருமான் '' அன்பனே உன் தொண்டினை கண்டு யாம் மெச்சினோம். எமது அடியார்க்கு அமுது செய்வித்த உன் தொண்டு மிக நல்லது. ஆனந்தமடைந்தோம் நீ உன் மனைவியுடன் எமது சிவலோகம் நோக்கி வருவீராக எனது நண்பன் குபேரன் இரண்டு நிதிகளையும் ஏந்தி உனக்கு ஏவல் செய்வான்'' என்று கூறி மறைந்தருளினார்.

நாயனாரும் அவர் மனைவியும் சிவ கணங்களுள் ஒன்றாகி குபேரன் சங்கநிதி, பத்மநிதி என்ற இரண்டு நிதிகளையும் ஏந்தி பணிவிடை செய்ய பேரானந்தப் பெருவாழ் வில் திளைப்பவரானார்.

இளையான்குடி மாறன் நாயனார் திரு வடிகளே சரணம்.

**திருச்சிற்றம்பலம்.**

# மணிமங்கலம்

# ஸ்ரீராஜகோபால சுவாமி

சீ. வசந்தி

R. RAJU, Dy Commissioner H.Qrs. (Retired) HR&CE Administration Dept

சென்னையிலிருந்து காஞ்சிபுரம் செல்லும் வழியில் சுமார் 30 கி.மீ. தொலைவில் காஞ்சிக்கு நுழைவு வாயிலாக இருக்கும் மணிமங்கலம் கிராமங்களில் மணி போன்றது என்ற பொருள்படும்படி வடமொழியில் இரத்தின கிராமம் எனவும் இரத்தினகிருஷம் எனவும் 'கிராம சிகாமணி' எனவும் பல பெயர்களால் வழங்கப்பட்டிருந்தது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் அதாவது பல்லவர் ஆட்சியில் மணிமங்கலம் என்று இவ்வூருக்குப் பெயர் வழங்கப்பட்டிருந்தது. இதனைக் கூரம் செப்பேட்டின் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது.

தற்போது குடமுழுக்குத் திருப்பணி மேற்கொள்ளப்பட இருக்கும் இராஜகோபால சுவாமி கோயிலில் 18 கல்வெட்டுக்கள் உள்ளன. இவை 10-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு வரையிலான காலக்கட்டத்தைச் சேர்ந்தவை. இந்தக் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் கோயிலுக்கு வழங்கப்பட்ட பல்வேறு தானங்களைப் பற்றியும் அவற்றைக் கொண்டு நடத்தப் பெறும் வழிபாடுகள் பற்றியுமே குறிப்பிடுவன.

தமிழகத்திலே கிருஷ்ண பிரானுக்கு எனக் கோயில்கள் நாகை காயிதேமில்லத் மாவட்டத்தில் மன்னார்குடியில் இருக்கும் இராஜ கோபால் சுவாமி கோயில், திருநெல்வேலியில் மன்னார் கோயில், விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் உள்ள இராஜ மன்னார்குடி மற்றும் மணிமங்கலத்தில் உள்ள இராஜகோபால சுவாமி திருக்கோயில்களாகும்.

**மணிமங்கலத்து இறைவன் திருப்பெயர்கள்:** தூவாரகையின் அரசன் என்ற பொருளில் ஸ்ரீதூவாரகபுரி தேவன் என்று சமஸ்கிருதத்திலும் தமிழில் வண் துவாராபதி எனவும் ஸ்ரீகாமகோடி விண்ணகர் ஆழ்வார் என்றும் திருவாய்க்குலம் (திரு ஆயர்குலத்துப் பெருமான் என்பதன் திரிபு) என்றும், இந்தக் கோயில் இறைவன் பலவாறு அழைக்கப்பட்டுள்ளான்.

**கல்வெட்டின் வழிச் செய்திகள் :** இரண்டாம் இராஜேந்திரனின் (கி.பி. 1055) படைத்தலைவன் ஜெயம் கொண்ட சோழ பிரம்மாதிராஜன். இவனது தாயார் காமக்குலவயாள், மணிமங்கலத்திலிருந்தும், அதன் அருகில் உள்ள அடண்பாக்கம் என்ற இடத்திலிருந்தும் 4,000 குழி நிலத்தை வாங்கி அந்நிலத்தை இந்த கோயிலுக்கு தானமாக அளித்துள்ளான். வீரராஜேந்திரனின் (கி.பி. 1068) ஐந்தாம் ஆட்சியாண்டில் இதே படைத்தலைவன் 4450 குழி நிலத்தை இக்கோயிலுக்குத் தானமளித்துள்ளான். இத்தானத்திற்கான நிலத்தை இவனது தந்தையார் மஞ்சிப்பய்யனார் என்னும் ஜெயசிம்ம குளொந்தக பிரம்மநாயன் மணிமங்கலத்திலிருந்தே வாங்கினார். இக் கல்வெட்டின் மூலம் ஜெயசிம்ம குளொந்தக பிரம்மராயனும் ஒரு படைத்தலைவன் என்பதும் இவர்களது சொந்த ஊர் மணிமங்கலம் என்பதும் தெரிய வருகிறது. இதனால் சோழ நாட்டின் படைத்தலைவனின் படைத்தஊராக மணிமங்கலம் இருந்துள்ளது. மாதந்தோறும் அமாவாசை தினத்தன்று இந்தக் கோயில் இறைவனின் திருவுருவை ஊர்வலமாக எடுத்துச் செல்ல முதலாம்குலோத்துங்கன் என்ற சோழ அரசனின் 48-வது (கி.பி. 1118) ஆட்சியாண்டில். அதாவது கி.பி.- 12ஆம் நூற்றாண்டில் 1050 குழி நிலத்திலிருந்து வரும் வருவாயைப் பயனபடுத்த ஏற்பாடு



செய்யப்பட்டுள்ளது. வண்துவராபதி கோயில் இறைவன், திருவாய்க் குலத்தாழ்வார் அவதரித்த ரோகிணி நட்சத்திர நாள் அன்று திருமஞ்சன நீராட்டுக்கும், இறைவனுக்கு அமுது செய்வதற்கும், விக்கிரம சோழனின் 4-வது ஆட்சியாண்டில் நிலம் கொடையளிக்கப்பட்டுள்ளது. இதே மன்னனின் 15-ஆம் ஆட்சியாண்டில் வழங்கப்பட்ட 250 குழி நிலதானம் இரண்டாம் குலோத்துங்கனின் 8-வது ஆட்சியாண்டில்தான் தானம் அளிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது இராஜராஜனின் (கி.பி. 1158) 8-வது ஆட்சியாண்டில் சிறுகாலை சந்திக்கும், திருப்போனகம் அமுது செய்தருளவும், 4 நாழி (நாழி ஓர் அளவு) அரிசி தானமாக அளிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1178-1217) காலத்தில் நான்கு நாழி அரிசி அமுது செய்ய 600 குழிநிலம் அளிக்கப்பட்டுள்ளது இதே மன்னனின் 28-வது ஆட்சியாண்டில் 'திருவாய்ப்பாடி' என்று பெயரிடப்பட்டு தானமளிக்கப்பட்ட விளக்கினை ஏற்றவும்கொடை அளிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் இராஜராஜனின்(கி பி.1216) காலத்தில் கோயிலில் இரவு சந்தி விளக்கெரிக்கப் பணம் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கோயிலில் இருந்த அபிஷேக மண்டபத்தின் அடிப் பகுதியில் புலிமுகத்துடன் கூடிய படிகற்களை மணிமங்கலத்துடையான் பஞ்சநதி இலட்சுமணன் மலைக்கு இனிய நின்றான் பெரிய பிள்ளையும், இவன் தம்பி ஆகவ மல்லதேவன் ஆகிய இருவரும் அமைத்துள்ளனர். எனவே அபிஷேக மண்டபம், கி.பி. 13-ஆம் நூற்றாண்டிற்கு முன்பே இருந்துள்ளது. இதற்கு கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் படிகட்டுகள் அமைக்கப்பட்டன எனத் தெரிகிறது மற்றொரு கல்வெட்டில் 'மன்னார்' என வழங்கப்பட்ட இறைவன் திருமுன்பும், இதே கோயிலில் எழுந்தருளி இருக்கும் சிங்கப் பெருமாள் (நரசிம்ம) திருமுன்பும், திருவிளக்கு ஏற்றப்பட்ட செய்தியும் காணப்படுகிறது இந்த கல்வெட்டுக்கள் அனைத்தின் மூலம் இந்தக் கோயில் சோழ மன்னர்கள் அனைவராலும் போற்றப்பட்டதால், அவர்கள் அனைவராலும் தானங்கள் பல வழங்கப்பட்டுள்ளமை தெரிகிறது.

**மணிமங்கலம் இருந்த நாட்டுப் பிரிவு :** மணிமங்கலப கிராமம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் செங்காட்டுக் கோட்டத்து மாக ஞர் நாட்டில்இருந்து வந்துள்ளது. ஆனால், இவ்வூர் பின்னர் ஜெயம் கொண்ட சோழ மண்டலத்தில் புலியூர் கோட்டத்தில் ஸ்ரீகுன்றத்தூர் நாடு என்ற பெரிய நிர்வாக அமைப்பின் கீழ் மாற்றப்பட்டுள்ளது. எனவே, இப்போது போலவே அப்போதும் நிர்வாக வசதிக்காக ஊர்களை ஒரு நாட்டுப் பிரிவிலிருந்து வேறொரு நாட்டுப் பிரிவிற்கு மாற்றம் செய்துள்ளனர்.

**மணிமங்கலத்திற்கு வழங்கப்பட்ட பெயர்கள்:** மணிமங்கலம் சோழ மன்னன் முதலாம் இராஜ ராஜன் காலத்தில்,



அவனது மனைவி உலகமாதேவியின் பெயரால் உலகமாதேவிச் சதுர்வேதி மங்கலம் என வழங்கப்பட்டுள்ளது. பின்னர், முதலாம் இராஜாதிராஜன் காலத்தில் இராஜ சூளாமணிச் சதுர்வேதி மங்கலம் எனவும், கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் 'பாண்டியனை இருமுடி வென்று கொண்ட சோழச் சதுர்வேதி மங்கலம்' எனவும் இவனது பாண்டிய வெற்றியைக் குறிக்கும் வகையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மூன்றாம் இராஜராஜன் காலத்தில் கிராம சிகாமணி சதுர்வேதி மங்கலம் எனவும் வழங்கப்பட்டது.

இந்தச் செய்திகளைக் கல்வெட்டுக்களின் மூலம் அறியும்போது ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இவ்வூருக்கு பல்வேறு பெயர்கள் வழங்கப்பட்டுள்ளதையும் வரலாற்றில் இவ்வூர் முக்கிய இடம் வகித்ததையும் அறிய முடிகிறது.

**கோயில் அமைப்பு :** கருவறையும் அர்த்த மண்டபமும், முன் மண்டபமும் கொண்ட கோயில் கருவறையைச் சுற்றி தெற்கில் தும்பிக்கை ஆழ்வாரும், விஷ்ணுவும் மேற்கில் வைகுண்ட நாதரும் தெற்கில் விஷ்ணு துர்க்கையும் காணபடுகின்றன.

நம் முன்னோர் விட்டுச் சென்ற திருப்பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு நம் ஆலயங்கள் சீரழியாமல் நாம் போற்றிக் காக்க வேண்டும்.

# தமிழகத்தில் பிரமன் வழிபாடு

**டாக்டர் டி. செல்வராஜ்**

**தமிழ்த்துறைத் தலைவர், உ. நா. அரசுக் கல்லூரி, பொன்னேரி.**

**பிரமன் :** பிரமன் சுயம்புவாகத் தோன்றியவன். அவன் அண்ட சராசரங்களையும் தாவரம் சங்கமம் என்ற உயிரினங்களையும் படைத்தவன்; என்றும் எப்போதும் படைக்கின்றவன். மும்மூர்த்திகளில் ஒருவன்.

வேதகாலத்தில் எல்லாத்தேவர்களுக்கும் மேலானவனாக இந்திரன் கருதப்பட்டான். அப்போது இந்திர வழிபாடு சிறப்புற நடைபெற்றது. உபநிடதங்களும் இந்திரனுக்கே ஏற்றம் தந்தன. காலப்போக்கில் பதினெண் புராணங்கள் தோன்றின. அவற்றில் பிரம்ம புராணமும் ஒன்று. இது தவிர வேறு புராணங்கள் பலவும் பிரமனைப் பற்றிய செய்திகளை உரைக்கின்றன. அடுத்து பிரமனுக்குரிய சிறப்புகளும், பெருமைகளும் கூடுதலாயின. தொடர்ந்து, பிரமன் படைப்புக் கடவுளாக நிலைநாட்டப்பட்டான். அவனை, இந்திரனைவிட மற்றதேவர்களை விட உயர்வாகப் போற்றினர். பிரமனை வழிபடும் வழக்கம் மெல்லப் பரவத் தொடங்கியது.

பிரமன் தன்னையே கருதித்தவம் செய்பவர் யாராக இருந்தாலும் வரங்களை வாரி வழங்கிய வள்ளல் ஆவான். இவனை விஷ்ணுவின் மகன் என்று சில புராணங்கள் கூறுகின்றன ; சில சிவனின் மகன் என்று வரைகின்றன. இவர்கள் இருவரையும் பிரமனே படைத்தான் என்றும் சில புராணங்கள் கூறுவது உண்டு. இவ்வாறு பிரமனைப் பற்றிய புராணச்செய்திகள் ஒன்றினுக்கொன்று மாறுபட்டும், வேறுபட்டும் இருக்கின்றன,

பிரமன் படைத்தலையும், விஷ்ணு காத்தலையும் உருத்திரன் அழித்தலையும் தமக்குரிய தொழில்களாகச் செய்கின்றனர். சிவனின் பல வடிவங்களில் ஒன்று உருத்திர வடிவம்.

**பிரமனும் விஷ்ணுவும்**

விஷ்ணு அனந்த சயனத்தில் இருக்கின்றபோது அவனது உந்திக்கமலத்தில் தனியே அமர்ந்த கோலத்தில் வீற்றிருந்து படைக்கின்ற தொழிலைச் செய்கின்றவன் பிரமன். விஷ்ணு-பிரமனின் இத்திருக்காட்சி பழைய தமிழிலக்கியங்களில் ஓர் இலக்கிய ஓவியமாக அழகுறப்புனையப்பட்டுள்ளது. இதில் பிரமனுக்கு முதன்மை இல்லை. விஷ்ணு-முதன்மையானவன்; பிரமன்-ஓர் உபதெய்வம். விஷ்ணுவின் அருளால் ஆணையால் பிரமன் படைப்புத் தொழிலை மேற்கொண்டிருக்கிறான். மேற்குறித்த பிரமன்-விஷ்ணுவின் கற்சிலைகள் பல தலங்களில் காணப்படுகின்றன; ஓவியங்களும் உண்டு.

**பிரமனும் சிவனும்**

பிரமனுக்குத் தனியாகக் கோயில் ஒன்றும் இல்லை. இதற்குக் காரணமாக ஒரு கதை உபநிடதக் காலத்திலிருந்தே வழங்கி வருகிறது.

''இருவரில் யார் பெரியவர்'' என்ற போட்டி பிரமனுக்கும் விஷ்ணுவுக்குமிடையில் எப்படியோ வந்துவிட்டது. சிவனின் முடி அல்லது அடியை முதலில் தரிசிப்பவரே பெரியவர் என்ற குறிக்கோளுடன் பிரமன் அன்னமாகி. முடியைத்தேடி விண்ணில் பறந்து சென்றான் விஷ்ணு வராகமாகி அடியைத் தேடி மண்ணைப் பறித்துச் சென்றான் இருவரும் தரிசிக்க முடியாத பெருஞ்சோதியாக-அண்ணாமலையாக- பெருமிதத்துடன் நின்றான் சிவன். இருப்பினும் தான் முடியைத் தரிசித்ததாகப் பொய் கூறி தாழம்பூவையும் பொய்ச்சாட்சி சொல்ல வைத்தான் பிரமன். இதனால் சினந்த சிவன் 'பிரமனுக்கு எங்கும் கோயில் இல்லாமல் ஒழிக' என்று சாபம் கொடுத்தான். அன்று முதல் பிரமனுக்குத் தனிக்கோயில் தோன்றவில்லை. பொய்ச்சாட்சி சொன்ன தாழம்பூ சிவனுக்குச் சூட்டப்படுவதில்லை.

ஒரு முறை செருக்குற்ற பிரமனின் ஒரு தலையைச் சிவன் கிள்ளிக்கொய்தான். இந்த வீரச்செயல் திருக்கண்டியூரில் நடைபெற்றதாக அவ்வூர்த்தலபுராணம் கூறுகிறது இத்திருத்தலம் அட்டவீரட்டானங்களில் ஒன்று. இறைவனது திருநாமம் 'பிரமசிரகண்டீசர்' என்பதாம்.

சிவபார்வதி திருமணத்தில் வேள்விக் குண்டத்திற்கு முன்னால் அமர்ந்து நெய் வார்க்கும் பாவனையில் இருக்கின்ற புரோகிதர் பிரமன்.

திரிபுரம் எரிக்கப் புறப்பட்ட சிவனுக்குத் தேரோட்டியாக விளங்கியவரும் பிரமனே. ஆகவே சிவன் கோயில்களுக்குரிய தேர்களில் பிரமன் தேரோட்டியாக வீற்றிருக்கிறான். அவன் செலுத்தும் நான்கு குதிரைகள் நான்கு வேதங்களாம்.

மேற்கண்ட அனைத்துக்காட்சிகளிலும் சிவன் முதன்மைத் தெய்வமாகவும் பிரமன் அவருக்குப் பணிந்த உபதெய்வமாகவும் தோன்றுகின்றார்.

சிவனும் விஷ்ணுவும் சமமாக இணைந்த 'சங்கர நாராயணர்' வடிவம் பழங்கால முதலே இருக்கின்றது. இதே போல சிவனும் பிரமனும் சமமாக இணைந்த வடிவம் எப்போதும் இல்லை. காத்தலும் அழித்தலும் இணையலாம். ஆனால் காத்தல் இல்லாமல் பிறத்தலும் (படைத்தலும்) இறத்தலும் (அழித்தலும்) இணைவது பயனற்றது. அதாவது பிறந்த உயிர் காக்கப்படாமல் உடனே இறப்பதால் பயனில்லை. இறத்தலும் பிறத்தலும் இணைவது—அதாவது மறுபிறப்பு-தேவையற்றது. பிறத்தல்-இறத்தல். இறத்தல்-பிறத்தல் என்ற சுழல்வட்டம் நொறுங்க வேண்டும். எனவே பிறத்தலை அருளும் பிரமனும், இறத்தலை அருளும் சிவனும் சமமாக இணைந்த வடிவத்தைச் சான்றோர் படைக்கவில்லை என்பது கூர்ந்து கவனிக்கத்தக்கது இதே போல பிரமனும் விஷ்ணுவும் சமமாக இணைந்த வடிவமும் இல்லை. பிரமன், ஒரு பரம்பொருளாகப் போற்றப்படாததால், பரம் பொருள்களான சிவனோடும், விஷ்ணுவோடும் சமமாக இணைந்த வடிவம் இல்லை.

**முத்தொழிலில் முதல் தொழில்**

முத்தொழில் செய்கின்ற மும்மூர்த்திகளுக்கும் சிவனைப் பரம்பொருள் என்று போற்றுகின்றனர் சைவர். வைணவர் விஷ்ணுவே பரம்பொருள்என்று உயர்த்துகின்றனர். பிரமனைப் பரம்பொருள் என்று ஏற்கின்றவரும் இல்லை; ஏற்கின்ற தனிச்சமயமும் இல்லை.

ஆனாலும், முத்தொழில்களில் முக்கியமானது-முதன்மையானது-முதல் தொழிலே-படைத்தல் தொழில். பிரமன் படைக்காவிட்டால் காத்தல் தொழில் விஷ்ணுவுக்கும்; அழித்தல் தொழில் சிவனுக்கும் அறவே நடைபெறுவதில்லை. எனவே பிரமன் பரம்பொருளும் இல்லை; முதன்மையான தெய்வமும் இல்லை; முக்கியமானதெய்வம் என்பதுமட்டும் முழு உண்மை. உலக இயக்கத்திற்கு இவனது படைத்தல் தொழிலும் முக்கியமானது.

மேலும் பிரமன் மக்களைப் படைக்கின்றான். பிறவிகளில் மிக உயர்ந்தது மக்கள் பிறவி. தம்மை மக்களாகப் படைத்த பிரமனுக்கு அவர்கள் நன்றி தெரிவித்து எப்போதும் வழிபாடு செய்வதே பொருத்தமானது. இனிமேல் மறுபிறவி தேவையே இல்லை என்றாலும் பிரமனைத்தானே வழிபட வேண்டும்! பிறந்த பின்னும் பிறவாமை வேண்டினாலும் பிரமனே வழிபாட்டுக்குரிய முக்கிய முதற் கடவுளாக உயர்ந்து விளங்குகின்றான். ஆனாலும் பிரமனைப் பக்தியுடன் வழிபடுவதில்லை. மக்கள் திட்டுவது அவனுக்கு 'அர்ச்சனையாகி விடுகின்றது.

**பிரமன் படும் பாடு**

சிவன் பிரமனின் தலையைக்கிள்ளி எறிகிறான். முருகன் பிரணவப்பொருள் கூறாத காரணத்தால் பிரமனின் தலையிலே குட்டிச் சிறையிலே தள்ளுகின்றான். இத்தகைய துன்பங்கள் பிரமனுக்குத் தெய்வங்களால் ஏற்படுகின்றன.

மக்கள் தாம் படும் துன்பங்கள் அனைத்துக்கும் காரணம் தம்மைப்படைத்த பிரமனே என்று கருதுகின்றனர். தமக்குத் துன்பம் ஏமாற்றம், வெறுப்பு, விரக்தி, நோய் முதலிய வாழ்வியல் வீழ்ச்சிகள் ஏற்படும் போதெல்லாம் பிரமனையும் அவன் படைத்த விதியையும் நொந்துகூறுவது மிக இயல்பாக நடைபெறுகின்ற ஒன்று.


'ஒரு பக்கம் பிணப்பறை முழங்குகிறது. மறுபக்கம் மணப்பறை ஒலிக்கிறது. 'பண்பில்லாத பிரமன்' உலகை இவ்வாறு முரண்பாடு இருக்கும்படி படைத்திருக்கிறானே.' என்று ஒரு புலவர் அவனைப் 'பண்பில்லாதவன்' என்று திட்டுகிறார்.

திருவள்ளுவர் 'ஒருவன் முயற்சி செய்து உண்ண வேண்டும். அவன் இரந்து உண்ணும் படி படைக்கப்பட்டால் அவனை அவ்வாறு படைத்த பிரமனும் அவனைப் போலவே இரந்து கெட வேண்டும்' என்று பிரமனுக்கே சாபம் தருகிறார்.

இவ்வாறு பலரது சொல்வலையில்சிக்கிய பிரமன் மக்களைப் படைத்துப் படைக்கப் பட்டவரிடம் பாவம் படாதபாடுபடுகிறான். மேலும் மக்கள் மறு பிறப்பு எடுப்பதற்கு அவர்கள் செய்த இருவினைகளே காரணமாம். வினைகளுக்குத் தகுந்த வடிவங்களைப் படைக்கும் பிரமனோ ஒரு 'துணைக்காரணம்' அப்படியிருக்க பிரமனை நொந்து கொள்வது ஏன்!

**தலையெழுத்து**

தமிழர் பிரமனை நான்முகன், பிரம்மா. படைப்போன், உலகியற்றியவன், விதி என்றெல்லாம் அழைக்கின்றனர். மக்களின் மண்டையோடுகளில் சில கீறல்கள் இருக்கின்





றன. இவை பிரமன் எழுதிய 'தலையெழுத்து' என்றும் 'பிரமலிபி' என்றும் நம்புகின்றனர். அத்தலையெழுத்து அழிய வேண்டுமென்றால் மறுபிறவி ஒழிய வேண்டுமென்றால் முருகனை வணங்க வேண்டும் என்று அருளுகிறார். அருணகிரிநாதர்: ''ஐடன் (முருகன்) கால்பட்டழிந்தது இங்கு என் தலைமேல் அயன் கையெழுத்தே.' மக்களும் 'என் தலையெழுத்து'—'அவன் தலையெழுத்து' என்று வெளிப்படையாக ஓயாமல் கூறி அந்த எழுத்துகளை எழுதிய பிரமனை மறைமுகமாக நினைக்கிறார்கள்; விரக்தியுடன் திட்டுகிறார்கள்.

**பிரமனின் குடும்பம் :** பிரமன் விஷ்ணுவின் மகன், இவனுக்குச் சரஸ்வதி சாவித்திரி எனத்தேவியர் இருவர். சிலபோது காயத்திரியும் ஒரு தேவியாகக் குறிக்கப்படுகிறாள்.

சரஸ்வதிக்குக் கூத்தனூரில் தனிக் கோயில் ஒன்று இருக்கிறது. சரஸ்வதியை மூல மூர்த்தியாகக் கொண்ட ஒரே கோயில் இது தான். இவளை 'ஆற்றங்கரைச் சொற்கிழத்தி' என்று குறித்து வழிபட்டவர் ஒட்டக்கூத்தர்.

பிரமனின் மகன் நாரதர். இவருக்கு விராலிமலையில் தனிச்சந்நிதி இருப்பது குறிக்கத்தக்கது.

சித்தி புத்தி என்ற இருவரும் பிரமனின் மகள்கள்; இவர்கள் இருவரையும் தேவியராகக் கொண்டவர் விநாயகர்.

பிரமனின் தங்கை மகாலட்சுமி; மன்மதனும் ஐயப்பனும் தம்பிகள் ஆவர்.

மேற்குறித்தவர்களில் ஐயப்பனைத் தவிர வேறுயாருக்கும் சிறப்பான தனிக்கோயில்கள் அமையவில்லை. குடும்பத்தலைவன் பிரமனுக்கே கோயில் இல்லாதபோது குடும்ப அங்கத்தினருக்கும் கோயில்கள் இல்லை.

**பிரமனின் வடிவம் :** பிரமன் ஐந்து தலைகளையும் நான்கு கைகளையும் கொண்டவன். சிவன் ஒரு தலையைக் கிள்ளி எறிந்தபின் புடைப்புச் சிற்பமாக அமையும்போது பிரமன் மூன்றே தலைகளுடன் காட்சி தருகிறான். சில சிலைகளில் பிரமன் தாடி மீசையுடன் புன்னகை பூக்கும் இளமை ததும்பும் முதியவராய்த் தோன்றுகிறான். அவனது மூன் இரு கைகளும் அபய வரத கைகளாகும். பின் வலக்கையில் ஜெப மாலையும் இடக்கையில் கமண்டலமும் அல்லது ஸ்ருக் (வேள்விக்குரிய மரச்சிறு கரண்டி) ஸ்ருவம் (வேள்விக்குரிய மர நீள் கரண்டி) என்ற வேள்விச் சாதனங்களையும் ஏந்தியவன். மேலும் அலங்கரிக்கப்பட்ட சடாமுடியைக் கொண்டு பற்பல அணிவகைகளை அணிந்து மரவுரியோ நூலாடையோ புனைந்திருக்கிறான்.

பிரமன் ஞான வடிவானவன். அவனது முகப்பொலிவு அமைதியானது; பாவனை சாந்தமானது. சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் உக்கிரமான வடிவங்கள் இருப்பதைப் போல பிரமனுக்கு உக்கிரமான வடிவம் இல்லை. சிவன்-திரிபுரதகனம்; விஷ்ணு-இரணிய வதம்; முருகன்-சூரபத்மவதம்; கிருஷ்ணன் கம்ச வதம். இவர்களைப் போல பிரமன் யாரையும் வதம் செய்யவில்லை. வதம் செய்கின்ற பலருக்குப் பிரமன் துணை நின்றதுண்டு. எனவே பிரமன் எப்போதும் சாந்த சொரூபியாகக் காட்சியளிக்கிறான். தாமரையில் அல்லது அன்னத்தின் மேல் வீற்றிருக்கிறான். பிரமனின் வாகனம் அன்னம்; அவனது தேரையும் அன்னங்களே இழுக்கின்றன.

'அன்னகாமு'—'அன்னம் விரும்புகின்றவன்' என்ற திருப்பெயர் பிரமனுக்குண்டு. இப்பெயரைத் தமிழகத்தின் தென்பகுதிகளில் சிலர் சூடிக்கொள்கின்றனர். இது தவிர பிரமனின் வேறு பெயர்கள் அதிகமாகப் பழக்கத்தில் இல்லை; மக்கள் சூடுவதில்லை.

**பிரமன் திருக்கோயில்கள்**

மும்மூர்த்தி வழிபாட்டில் மும்மூர்த்திகளில் ஒருவனான பிரமன் வழிபாடும் கலந்துள்ளது. திருவந்திபுரம் வேதநாத சுவாமியும் சுசீந்திரம் தாணுமாலயனும் மும்மூர்த்திகளின் அம்சமுடையவர்.

திருக்கண்டியூர், சேங்காலிபுரம் (தத்தாத்ரேயர்), திருக்கரம்பனூர் (பிட்சாண்டர், உத்தமர் கோயில்) முதலிய திருத்தலங்களில் வழிபடப்படும் மும்மூர்த்திகளில் பிரமனும் ஒருவர். குறிப்பாகத் திருக்கரம்பனூரில் மும்மூர்த்திகளுக்கும் தனித்தனி சந்நிதிகள் இருக்கின்றன. குறிப்பிட்ட நாள்களில், முறையான வழிபாடுகள் நடைபெறுகின்ற பிரம சந்நிதி இங்குள்ள இது ஒன்றுதான்.

திருக்காளத்தியில், கோயிலுக்கருகில், மலைப்பக்கத்தில், பிரமனுக்குரிய சிறிய தனிக்கோயில் ஒன்று உள்ளது. பாண்டிக்கொடுமுடியிலும் பிரமன் சிலை உள்ளது; இதுவும் மும்மூர்த்தி தலம்.

சிவன் கோயில்களில் காணப்படும் பிரமன் சிலைகள் சிவ வழிபாட்டுடனும், விஷ்ணு கோயில்களில் காணப்படும் பிரமன் சிலைகள் விஷ்ணு வழிபாட்டுடனும் தொடர்புடையன. பிரமன் சைவர்களாலும் வைணவர்களாலும் வழிபடப்படுவதும் மதிக்கப்படுவதும் ஒரு சிறப்பியல்பாகும். சிவனின் மகன்களான விநாயகருக்கும் முருகனுக்கும் வழிபாடுகள் சிறப்பாக உண்டு. இத்தகைய ஏற்றம் விஷ்ணுவின் மகனான பிரமனுக்கு இல்லை.

**பிரமன் சிலைகள்**

சிவன் கோயில்களின் கருவறையின் வடக்கு மாடத்தில் கோமுகிக்குமேல் பிரமனின் தனித்த கற்சிலைகள் உள்ளன. சில கோயில்



களில். திருச்சுற்றுகளில் தனித்த அல்லது சரஸ்வதியுடன் கூடிய பிரமன் கற்சிலைகள் உண்டு. இவை பக்தர்களின் 'கண்படும்' இடத்தில் உள்ளன.

'சரஸ்வதி. காயத்திரியுடன் இணைந்த பிரமனது சுதைச் சிற்பங்களைக் கோபுரங்களின் வடக்குப் பகுதியில் தரிசிக்கலாம். சிலவற்றில் பிரமன் தனித்தும் தோற்றமளிக்கின்றான்.

சிவன் கோயில் தேர்களில் அமைந்த தேரோட்டியான பிரமனின் வடிவம் மரத்தாலானது.

பிரமனுக்கேயுரிய சிறந்த விழாக்கள், பவனி ஊர்வலங்கள் முதலியன இல்லை. ஆகவே பிரமனது உற்சவ மூர்த்தங்களை அல்லது ஐம்பொன் முதலிய உலோகச்சிலைகளைத் தரிசிப்பது மிக அபூர்வம்.

'லிங்கோற்பவர்' சிலைகளில் மேற்பகுதியில் பிரமன் அன்னவடிவில் காட்சி தருகிறான்.

**இலக்கியங்களில் பிரமன்**

பிரமனைப்பழித்தும் விதியை நொந்தும் பாடப்பட்ட தமிழ்ப்பாடல்கள் பல கிடைக்கின்றன. பிரமனைப் பற்றிய சிறப்பான நூல் எதுவும் இல்லை; கடவுள்வாழ்த்தாகப்பாடப்பட்ட மிகச் சில தோத்திரப் பாடல்கள் சில நூல்களின் தொடக்கத்தில் உள்ளன.

சிவனின் திருமுடியைப் பிரமன் தரிசிக்க முடியாத காட்சியைத் திருஞான சம்பந்த சுவாமிகள், தாம் அருளிய தேவாரத் திருப்பதிகத்தின் ஒவ்வோர் ஒன்பதாவது பாடலிலும் பாடிக்களிக்கிறார். இதே காட்சியை இகழ்ச்சிக் குறிப்புடன் அடியார்கள் பலர் பாடி அருளினார்கள்.



**பிரமன் வழிபட்ட திருத்தலங்கள்**

வழிபாட்டுக்குரிய பிரமன், தானே சிவனை அல்லது விஷ்ணுவை வழிபட்ட திருத்தலங்களும், அவன் அமைத்த தீர்த்தங்களும் பல இருக்கின்றன பிரமபுரம், பிரம்மாபுரம். பிரமவனம் .பிரமகிரி பிரமபுரி பிரம்ம தீர்த்தம் முதலியன பிரமனுடன் தொடர்புடையன பிரமனைப் பற்றிய கதைகள், பல தலபுராணங்களில் நிரம்ப உள்ளன.

**பிரமன் கோயில் அதிகமாக இல்லாததற்குக் காரணங்கள்**

1. முன்னர்க்கண்டபடி, சிவனின் சாபம் ஒரு காரணம்.

2. பிரமன் ஒரு பரம்பொருளாக மதிக்கப் படுவதில்லை; தனி வழிபாட்டு முறைகளும் அவனுக்கு இல்லை. எனவே, தனிக் கோயில் களும் இல்லை.

3. கோயில் சமயத்துடன் தொடர்புடையது. சைவ, வைணவச் சமயங்களுக்குப் பொதுவானவன் பிரமன். பிரமனை மேலாக உயர்த்தும் சமயம் இல்லை; தனிக்கோயிலும் உருவாகவில்லை.

4. ''பிறவாமை வேண்டும்'' என்று காரைக்காலம்மையார் சிவனிடம் வரம் கேட்டார். 'பிணி, பசி, மூப்பு, துன்பம். ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகருளானே'' என்று விஷ்ணுவிடம் விண்ணப்பித்தார் தொண்டரடிப்பொடியாழ்வார். இவ்வாறு எல்லாரும் பிறப்பே வேண்டியதில்லை என்றே மறுக்கின்றனர். அப்படி இருக்க, பிறப்பை அருளும் பிரமனை எவரும் வழிபடமாட்டார்கள் அல்லவா! அவனுக்குக் கோயிலும் கட்டமாட்டார்கள் அல்லவா!

5. வேறு பல கடவுள்களுக்கு விழாக் களும், விரதங்களும் இருப்பதைப் போல பிரமனுக்கு இல்லாதபோது அவனுக்குக் கோயிலும் தேவையற்றதாகிவிடுகிறது.

6. விநாயகனை வழிபட்டால் விக்னங்களை அழிப்பான். கல்வியைத் தருகிறாள் சரசுவதி; செல்வத்தைத் தருகிறாள் இலக்குமி. ஆரோக்கியத்தை அருளுகிறான் சிவன். பிறப்பைத் தவிரப் பிரமன் தரக்கூடிய தனிச் சிறப்புடைய பொருள் எதுவும் இல்லாதபோது பக்தர்களும் அவனுக்குத் தனிச் சிறப்புடைய கோயில்களை அமைத்து வழிபடாதது ஒரு வகையில் நியாயமானதுதான்.

ஒரு கடவுளுக்குக் கோயில் கட்ட வேண்டும் என்றால் இரண்டு தகுதிகள் வேண்டும் ஒன்று, அக்கடவுள் பரம்பொருளாக விளங்க வேண்டும் அல்லது, அப்பரம்பொருளிடம் பெற்ற அதிகாரத்தின்மூலம், சில சிறப்பான பொருள்களைப் பக்தர்களுக்கு அருளக்கூடிய தகுதியாவது இருக்க வேண்டும். இந்த இரண்டு தகுதிகளும் பிரமனுக்கு இல்லை.

7. நோய்திர்க்கும் மாரியம்மனுக்கு எல்லா ஊர்களிலும் தனிக்கோயில்கள் இருக்கின்றன. இவளை ஒரு பக்திவெறியுடன்' பக்தர்கள் வழிபடுகின்றனர். இத்தகைய பக்தி வெறி பிடித்த பக்தர்கள்-கோயில் கட்டக்கூடிய பக்தர்கள்-பிரமனுக்கு எப்போதும் இல்லை.

போரில் எல்லா அஸ்திரங்களையும் பயன் படுத்திய பிறகு இறுதியில் பயன்பட்டது 'பிரம்மாஸ்திரம்' பிரமன் அருளிய இது சர்வ வல்லமை படைத்தது. ''அவன் பிரம் மாஸ்திரம் விட்டான்.'' என்ற தொடர் இப்போதும் பேச்சில் வழங்குகிறது. ''பிரம்மாஸ் திரம் இருந்து என்ன செய்வது! பிரமனை வழிபடாதவர் மீது பயன்படுத்த முடியாதே!

# அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில்

'பைம்பொழில்' பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.ஃபில், பி.எட்.

**முன்னுரை :** செந்தமிழ் வழங்கும் பாண்டி நாட்டுத் தலைநகரங்களில் ஒன்றாக இருந்த பெருமையுடையது திருநெல்வேலி. இப்போது நெல்லை கட்டபொம்மன் மாவட்டத் தலைநகராகவும், தாலுகாவுக்கு தலைமை நகரமாகவும் இருந்து வருகிறது. தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் இவ்வூருக்கு பேருந்து மற்றும் புகைவண்டி வசதிகள் உள்ளன.

**இருப்பிடம் :** தண்பொருனையாற்றின் இடது கரையில் இருப்பது இவ்வூர். நெல்லையப்பர் காந்திமதியுடன் எழுந்தருளி வந்து ஆற்றிலே தீர்த்தம் கொடுக்கும் துறை சிந்துபூந்துறை எனப்படும். என்ன சிந்தும் பூந்துறை என்னும் வினாவுக்கு திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தமது தேவாரம் திருநெல்வேலிப் பதிகத்தில் எட்டாவது பாட்டில் பின்வருமாறு விடை தந்தருளியுள்ளார்.

''கந்தமார் தருபொழில் மந்திகள் பாய்தர
மதுத் திவலை
சிந்துபூந்துறை கமழ் திருநெல்வேலி''

மதுத்திவலைகள் சிந்தும் பூந்துறை அதாவது தேன்துளிகளைச் சிந்துகின்ற பூந்துறை எது சிந்துகின்றது? மணம் பொருந்திய சோலை தேன்துளி சிந்துகின்றது. ஏன்! மந்திகள் பாய்தலினாலே கொப்புகள் அசைகின்றன. அதனால் பூக்களில் உள்ள தேன் சொட்டுகின்றது. இவ்விடத்தில் தாமிரபரணி ஆற்றில் நெல்லையப்பர் இறங்கி மக்கள் உய்யும் பொருட்டுத் தீர்த்தம் கொடுக்கும் இடத்தைப் புகழ்ந்தருளிய பிற்பாடுதான் அடியார்களும், புலவர்களும் இவ்விடத்தைச் சிந்து பூந்துறை எனப் பெயரிட்டு அழைத்திருத்தல் வேண்டும்.

சிந்து பூந்துறைக்கும் நெல்லையப்பர் திருக்கோயிலுக்கும் 2 கி. மீ. தூரம் இருக்கும். சிந்துபூந்துறை என்ற பெயரைப் பெற்ற ஆற்றங்கரையில் ஒரு சிறு ஊர் தோன்றுவதாயிற்று. பெருமாள் தீர்த்தம் கொடுக்கும் இடத்தில் மண்டபம் ஒன்று தைப்பூசமண்டபம் என்ற பெயருடன் எழுந்தது அதையொட்டி கைலாசநாதர் கோவிலும் தோன்றியது. அக்கோவிலை ஒட்டி மாடத்தெருவென நான்கு தெருக்கள் இருக்கின்றன. இந்தப் பகுதி கைலாசபுரம் என்ற பெயரை அடைந்து சிந்துபூந்துறையின் ஒரு பகுதியாக விளங்குகின்றது.

**ஆலய அமைப்பு:** இத்திருக்கோயில் அழகிய திருக்கோபுரத்துடன் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோவில் உருவத்தில் சிறியது ஆயினும், பார்வையில் அழகுடன் விளங்குகின்றது.

கர்ப்பக் கிரகத்தில் கைலாசநாதர் சிவலிங்க உருவில் எழுந்தருளியிருக்கின்றார். பள்ளியறைச் சொக்கர் இதை அடுத்திருக்கும் அர்த்த மண்டபத்தில் இருக்கிறார். அதனை அடுத்திருப்பது மாமண்டபம்; அதன் தென்புறம் பிள்ளையாரும், வடபுறம் முருகனும் இருக்கின்றனர். இதிலேதான் சுந்தரவல்லியம்மை திருக்கோவில் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. கர்ப்பக்கிரகத்தால் இறைவியும் அர்த்த மண்டபத்தில் பள்ளியறை அம்மையும் இருக்கின்றனர்; அம்மன் திருமுன்பு தெற்கே தள்ளி நந்தியும், சிவபெருமானுக்கு நேராகச் சிறிது கிழக்கே தள்ளி நடுநாயகமாக உள்ள நந்தியும் இருக்கின்றன. இதுவே உட்சுற்று மண்டபமும் ஆகும். கிழக்குச் சுற்றைத் தாண்டித் தெற்குச் சுற்றுக்கு வந்தால் அம்மன் திருமுன்'பு ஜன்னல், அதைத் தாண்டினால் தெட்சிணாமூர்த்தி தெற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். கன்னிமூலையில் திருவிழா மூர்த்திகள் கைலாச நாதரும் சுந்தரவல்லி அம்மையுமுள்ளனர். வடமேற்கு மூலையில் கங்காளநாதர் இருக்கிறார். வடக்குச் சுற்றின் நடுவில் சண்டேசுர நாயனார் திருக்கோவில் உள்ளது. அம்மை கோவிலையும் சுற்றிக் கொண்டு மாமண்டபமாகிய கிழக்குச் சுற்று மண்டபத்திற்கு சிறிது கிழக்கே வந்தால் அம்பலவாணர் திருமுன்பு வருவோம். இங்கே சிவகாமி அம்மையும், மாணிக்க வாசகப் பெருமானும் உடனிருக்க கூத்தப் பெருமான் எழுந்தருளியிருக்கின்றார். இவ்விடத்தே தான் அஸ்திர தேவர், அஸ்திரதேவி, வள்ளியம்மை, தெய்வயானை, முருகக் கடவுள்; பிள்ளையார், சந்திரசேகரர் மனோன்மணி முதலிய திருவுருவச் செப்புத் திருமேனிகள்உள்ளன.

**புராண வரலாறு:**

நெல்லையப்பன் கவிராய மூர்த்திகளால் எழுதப்பெற்ற திருநெல்வேலித் தலபுராணத்தில் சிந்து பூந்துறைச் சருக்கத்தில் இக்கோயில் தோன்றிய வரலாறு கூறப்பெற்றுள்ளது.

'முன்னொருகால முக்கண் முதல்வனார் கயிலை நின்று,



மன்னியிங்கெய்தி வந்து மகிழ்வொரு வழங்கல் மூழ்கத்
துனனு மாதவர்கள் விண்ணோர் தூய நலனதிகளெல்லாம்
டொன்மலர் தூவிச் சிந்துபூந்துறை யானதாமால்(8)

முன்னொரு காலத்தில் கைலாசநாதர் கைலையிலிருந்து அம்மை வடிவாளோடு எழுந்தருளி வந்து இங்கே சிந்துபூர்துறையில் தீர்த்தம் கொடுத்தவரலாறு கேட்கப் பெறுகின்றது. இதனைக் கருதித்தான் இக்கோவில் கைலாசநாதர் கோவில் என்று பெயர் பெற்றது. மேலும் வடிவாள் என்ற திருப்பெயரே சுந்தரவல்லி என அம்மைக்குச் சூட்டப் பெற்றிருக்கின்றது.

**கோவில் எழுந்த வரலாறு:**

குருத்து செட்டியார் என்ற ஒரு பணக்காரர் குன்ம வயிற்று வலியால் துன்புற்றார். அப்போது இக்கோயில் இருக்கும் இடத்தில் ஒரு பெரியவர் தம் மனைவியோடு இருந்து வந்தார். அவரைத் தஞ்சமெனச் செட்டியார் அடைந்தார். செட்டியாருக்குத் தேறுதல் கூறிக் கடவுள் அன்பை ஊட்டி வந்தார். அம்மையார் தமது மனைவியோடு இறந்ததால் அவ்விருவரையும் செட்டியார் சமாதியில் அடக்கம் செய்து, 'எனது வயிற்று நோயைத் தீர்த்து வையும்; நான் ஒரு சிவன் கோவில் கட்டி வைப்பேன்'' என்று கும்பிட்டு வந்தார். அவருக்கு நோய் நீங்க அவர் புதிதாக இக்கோயிலைக் கட்டித் திருமதில்கள் எழுப்பி வைத்தார். செட்டியாருடைய கல் உருவம் மண்டபத்தில் ஒரு தூணோடு நிற்கின்றது. இக்கதையை அவ்வூர் மக்களில் தெரிந்தவர்கள் சொல்லி வருகின்றனர்.

**திருப்பணி செய்தோர் :** நல்லகண்ணு முதலியார் என்பவர் இத்திருக்கோவிலுக்குத் திருப்பணிகள் செய்திருப்பதோடு நல்ல நிலங்களும் வாங்கிக் கொடுத்திருக்கிறார் என்று கூறுவர்.

முருகேச முதலியார் என்பவர் இக்கோவிலுக்குத் தருமகர்த்தாவாக இருந்திருக்கிறார். இப்போது கொடிமர மண்டபம் என்று சொல்லப்படும் முன்மண்டபத்தைக் கட்டியுள்ளார். ஒரு உயரமான கல்வெட்டும் வைத்துள்ளார். அதில் 1080—கார்த்திகை 29-இல் ஆரம்பம். இந்த மண்டபம் தரும கருத்தர் முருகேச முதலியாரால் உயர்த்திக் கட்டப்பட்டது. 1081 விசுவாசு வருடம் தை மீ. என்று கல்வெட்டில் காணப் பெறுகிறது.

**பூஜைகளும் விழாக்களும்**

இத்திருக்கோவிலில் தினசரி ஐந்துகாலப் பூஜைகள் நடைபெறுகின்றன. திருவனந்தல், காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்த சாமம் என்பன ஆகும். ஆண்டுதோறும் வைகாசி மாதம் விசாகத் திருவிழா, மிகவும் சிறப்பாக நடைபெறும். 9-ம் நாள் திருத்தேர் ஓடும். பத்தாம் திருநாள் தீர்த்தவாரி நடைபெறும். ஆவணியில் பிள்ளையார் சதுர்த்தி, புரட்டாசியில் நவராத்திரி, ஐப்பசியில் கந்த சஷ்டி, மார்கழியில் திருவாதிரை, மாசியில் சிவராத்திரி, பங்குனியில் வருஷாபிஷேகம் முதலின சிறப்பாக நடைபெறுகின்றன.

**நிர்வாகம் :** தமிழக இந்து சமய அற நிலையத் துறையினால் நிர்வகிக்கப் பெறுகிறது. அரசு ஓர் நிர்வாக அதிகாரியை நியமித்துள்ளது.

**நிறைவுரை :** கருணைமிகு கைலாசநாதர் திருவருள் பெறுவோம்.

# சங்க இலக்கியங்களில் திருமால் அவதாரங்கள்

ப. சிவநேசன், எம்.ஏ., எம்ஃபில்.பி.எட்

திருமால் முல்லை நிலக்கடவுள் 'மாயோன் மேய காடுறை உலகம்' எனத் தொல்காப்பியம் குறிக்கும். ஆயினும் எல்லா நில மக்களையும் காக்கும் கடவுளாகவும் விளங்குகிறார். கடவுளர்களில் திருமால் அவதாரம் எடுத்துள்ளார். அவதாரம் என்பது மேலிருந்து கீழிறங்குதல் என்று பொருள்படும். வைகுந்தத்தில் எழுந்தருளியிருக்கும் திருமால், அங்கிருந்து கீழிறங்கி வருதற்குக் காரணம் உண்டு. உயிர்களை ஈடேற்றுவதற்காக அவ்வாறு இறங்கி வருவார் என்று கூறுவர்.

'வானின்று இழிந்து வரம்பிகந்த மாபூதத்தின்
வைப்பெங்கும்
ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும்
புறனும் உளன் என்ப
கூனும் சிறிய கோத்தாயும் கொடுமை
இழைப்பக் கோல் துறந்து
கானும் கடலும் கடந்து இமையோர் இடுக்கண்
தீர்ந்த கழல் வேந்தே'

(கம்பராமா..அயோத்தி..கடவுள் வாழ்த்து)

'அறம்தலை நிறுத்தி வேதம் அருள்சுரந்து
அறைந்த நீதித்
திறம் தெரிந்து உலகம் பூசை செந்நெறி
செலுத்தித் தீயோர்
இறந்துக நாறித் தக்கதோர் இடர்துடைத்து
ஏக ஈண்டுப்
பிறந்தனன் பிறவி நோய்க்கு மருந்திவன்
பிறிதொன்று உண்டோ'

(சுந்தர காண்டம்)

என்பன அவதார நோக்கத்தைப் புலப்படுத்தும் பாடல்களாகும். உலகில் தீமை வெளிப்படும்போது இறைவன் மனிதசட்டை தாங்கி வருவார். இது அவரது அவதார மகிமை என்று கீதை குறிக்கிறது.

**தசாவதாரம்** :—திருமால் எடுத்த அவதாரங்கள் பத்தாகும். இராமாவதாரம் பலராம அவதாரம், குருஷ்ணாவதாரம், நரசிம்மவதாரம், வராக அவதாரம், வாமன அவதாரம், கூர்ம அவதாரம், மச்ச அவதாரம், பரசுராம அவதாரம், கல்கி அவதாரம் என்பன. இப்பத்தினையும்.

''தேவுடைய மீனமாய் ஆமையாய் ஏனமாய்
அரியாய்க் குறளாய்
மூவுருவின் இராமனாய்க் கண்ணனாய்க்
கற்கியாய் முடிப்பான்கோயில்
சேவலொடு பெடையன்னஞ் செங்கமல
மலரேறி ஊசலாடி
பூவணைமேல் துதைந்தெழு செம்பொடியாடி
விளையாடும் புனலரங்கமே'.

என அருளுவர் பெரியாழ்வார்.

திருமாலின் அவதாரம் பரிணாம வளர்ச்சியின் முக்கிய படிகளை உணர்த்துவன என்பர். மீன் ஆமை பன்றி மூலம் விலங்குப் பிறப்புகளும் இடைப்பட்ட நிலையினை நரசிம்ம அவதாரமும் விளக்குகிறது. மனித வடிவமும் விலங்கு குணமும் உடையது பரசுராம அவதாரம். இராமாவதாரம் நற்பணபுகளின் உறைவிடம். பயன் கருதாது தீயவற்றைப் போக்குவ.து கிருஷ்ணாவதாரம். ஒழுக்கக் கேட்டை வீழ்த்தக்கூடியது கல்கி அவதாரம். இது பரிணாம வளர்ச்சியில் சிறப்பிடம் பெறுகிறது என்பர்



## சங்க இலக்கியங்களில் அவதாரச் செய்திகள்:

திருமாலின் அவதார வரலாறுகள் ஆழ்வார்களாலும்,கம்பராலும், பின்னுள்ள புலவர்களாலும் விளக்கமாக எடுத்து இயம்பப்பட்டுள்ளன. ஆயினும் சங்க இலக்கியங்கள் திருமாலின் அவதாரங்களைக் குறிப்பிட்டுள்ளன. திருமாலின் அவதாரங்களில் ஏழு அவதாரங்களே இடம் பெற்றுள்ளன. இராமன் கண்ணன் நரசிம்மம் வராகம் வாமனம் பலராமன் பரசுராமன் என்பன அவை.

## இராமாவதாரம்:

வால்மீகிக்கும் கம்பருக்கும் இராமகாதை இயற்றுவதற்கு உதவியாய் இருந்தவை சங்க இலக்கியம். அகநானூறு புறநானூறு முதலியவற்றில் இராமாவதாரக் குறிப்புகள் காணப்படுகின்றன. சோழன் செருப்பாழி எறிந்த இளங்சேட் சென்னி பரிசிலர்க்குப் பல அணிகலன்களை வழங்கினான். அப்பரிசிலர் அவ்வணிகலன்களை அணியத் தெரியாது கையில் அணிவதைக் காலில் அணிந்தனர். காலில் அணிவதைக் கையில் பூண்டனர். செவியில் அணியக் கூடியதை விரலிலும் விரலில் அணிவதைச் செவியிலும் அணிந்து மகிழ்ந்தனர். இச்செய்தியை விளக்குவதற்குச் சீதையை இராவணன் தூக்கிச் சென்றபோது அவள் தன் அணிகலன்களைக் கீழே விடுத்துச் சென்றனள். அவற்றைக் குரங்குகள் அணிந்து கொள்ளத் தெரியாது அணிந்து மகிழ்ந்தனவாம். பரிசிலர் செயலைக் குரங்குகளின் செயலோடு ஒப்பிடுவதாக ஒரு பாடல் புறநானூற்றில் உள்ளது.

''விறற்செறி மரபின செவித்தொடக் குநரும்
செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரும்
அரைக்கமை மரபின மிடற்றியாக் குநரும்
மிடற்றமை மரபின அரைக்கியாக் குநரும்
கடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வெளவிய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந்
தா அங்கு
அறாஅ அருந்தை இனிதுபெற் றிடுமே'' (378)

என்பது பாடல்:

R. RAJU
Dy Commissioner (Retd.)
HR&CE Administration Dept


இராமன் இலங்கைக்குச் செல்வதற்கு முன்பு கோடியக்கரையில் ஓர் ஆலமர நிழலில் தங்கினான். படையெழுச்சி குறித்துக் குரங்கினங்களோடு ஆராயும் போது மரத்தின் மீதிருந்த பறவைகள் ஒலி செய்தன. இராமன் பறவைகளின் ஒலி எழாதவாறு கையமைத்தான் என்பது வரலாறு. அதுபோன்று தலைவன் திருமணத்திற்கு உடன்பட ஊரார் அலரும் அடங்கிற்று எனத் தலைவியிடம் தோழி கூறுவதாக அகநானூற்றில் ஒரு குறிப்பு உள்ளது.

இதனை

''வென்வேல் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்துறை
வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலிஅவிந் தன்றுஇவ் வழுங்கல் ஊரே'' (70)

எனும் பாடல்வழி அறியலாம்.





**பரசுராம அவதாரம் :**

இவர் சமதக்கினி இரேணுகைக்கும், பிறந்தவர். செருக்குக் கொண்ட அரசமரபினரை அழித்தற்கெனச் சிவனை நோக்கித் தவம் இருந்து பரசு பெற்றவர். இதனால் பரசுராமர் எனவும் அழைக்கப் பெற்றார். (பரசு-கோடரி-மழு)

பரசுராமர் செல்லூரில் வேள்வி ஒன்று செய்தார். அவ்வேள்வியிலுள்ள தூண் நாணலினால் சுற்றி மறைக்கப்பட்டிருந்தது. யாவரும் காணவியலாத அவ்வேள்வித் தூணைப் போல தலைவியின் மார்பும் எவராலும் காணவியலாது உள்ளது என்ற ஒரு செய்தி அகநானூற்றில் உள்ளது.

“கெடாவுத் தீயின் உருகெழு செல்லூர்
மன்மருங்கு அறுத்த மழுவால் நெடியோன்
முன் முயன்று அரிதினின் முடித்த வேள்விக்
கயிறரை யாத்த காண்டகு வனப்பின்
அருங்கடி நெடுந்தூண் போல யாவரும்
காணல் ஆகா மாண்எழில் ஆகம்
நல்லெழில் சிதையா ஏமம்
சொல்இனித் தெய்யயாம் தெளியுமாறே”(220)

**பலராம அவதாரம் :** திருமால் இராமாவதாரம் எடுத்தபொழுது ஆதிசேடன் இலக்குவன் ஆனான். திருமால் ஆதிசேடனிடம் இன்னொரு முறை அவதாரம் எடுக்கும்பொழுது உன் தம்பியாய் தோன்றுவன் என்றனன். திருமால் கண்ணனாய்த் தோன்றியபோது ஆதிசேடன் பலராமனாகப் பிறந்தான். பலராமன் கண்ணனின் முன்னோன் என்பதைப் பரிபாடலும், கலித்தொகையும் குறித்துள்ளன. (பரி: 2: 20-7; நெய்தற்கலி) பலராமன் வெண்மை நிறம் உடையவன் என்பதைக் ‘கடல்வளர் புரிவளை புரையும் மேனி’-(புறம்-56), பால்நிற உருவின் பனைக்கொடியோன் (புறம் 58) ‘வாலியோன் அன்ன வயங்கு வெள்ளருவி’(நற்றிணை-32) பாலன்ன மேனியான் அணிபெறத் தைஇய (நெய்தற்கலி-7) எனவரும் குறிப்புகள் சுட்டுகின்றன. பலராமன் ஒரு குழையுடையவன் என்பது ஒரு குழை ஒருவனை (பரிபாடல் 1:5) ஒரு குழை ஒருவன் போல் இணர்சேர்ந்த மராஅமும் (பாலைக்கலி-26) ஒரு குழை யவன் மாரில் ஒண்தார் போல் ஒளிகைப் பொருவறப் பொருந்திய செம்மறு வெள்ளை (முல்லைக்கலி-5) எனும் பாடற் பகுதிகளில் அமைந்துள்ளது. பலராமன் நாஞ்சில் டையினை உடையவன். இதனையும் சங்க இலக்கியங்கள் உணர்த்தியுள்ளன. (புறம்-56, பரிபாடல் 1:5, 13:33, 15:37, பாலைக்கலி-36)

**கிருஷ்ணா அவதாரம் :**

திருமால் நல்லோரைக் காக்கவும், தீயோரை அழிக்கவும் எடுத்த அவதாரங்களுள் குறிப்பிடத்தக்கது கிருஷ்ணாவதாரம். வில்லிப் புத்தூராருக்குப் பாரதம் எழுதுதற்கு வியாசர் பாரதமேயன்றிச் சங்கஇலக்கியங்களும் துணை புரிந்திருக்க வேண்டும். கம்சனுக்கும் கண்ணனுக்கும் நிகழ்ந்த வஞ்சங்களும் வெற்றிகளும் சங்க இலக்கியங்களுள் பதிவாகியுள்ளன.



குதிரை வடிவம் கொண்ட கேசி என்னும் அசுரன் கண்ணனை எதிர்த்தான். இவன் கம்சனால் ஏவப்பட்டவன்; கண்ணன் கேசியின் வாயைப் பிளந்து அழித்தான் என்பது வரலாறு: இவ்வரலாறு பரிபாடலிலும் (3:31-2) கலித்தொகையிலும் இடம் பெற்றுள்ளது.

''மேவார் விடுத்தந்த கூந்தற் குதிரையை
வாய்ப்பகுத் திட்டுப் புடைத்த ஞான்று இன்னன் கொல்
மாயோன் என்று உட்கிற்று என்நெஞ்சு'' (3)

என்பது முல்லைக்கலி.

பாண்டவர்க்குத் துணை நின்ற கண்ணனை வஞ்சனையால் அழிக்க எண்ணிய துரியோதனன் மூங்கில் பிளவுகளைக் கொண்ட ஓர் இருக்கையை அமைத்து அதன் கீழ் அசுரர்கள் பலரையும் நிறுத்தி வைத்தான். கண்ணன் அவ்விருக்கையில் அமர, அது ஒடிந்து கீழே சென்றனன். அங்கிருந்த அசுரர்கள் கண்ணனைத் தாக்க முற்பட்டனர். கண்ணன் நெடியோனாகி அவர்களை அழித்தான். இதனைக் கலித்தொகை விளக்குகிறது.

''மல்லரை மறஞ்சாய்த்த மால்போல்தன் கிளை நாப்பண்
கல்லுயர் நனஞ்சாரல் கலந்தியலு நாடகேள்''
(குறிஞ்சிக்கலி-16)

''மல்லரை மறஞ்சாய்த்த மலர்தண்தார் அகலத்தோன்'' (நெய்தற்கலி-17)

என்பன அப்பாடற்பகுதிகள்.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போர் நடக்கையில் அசுரர்கள் ஞாயிற்றைக் கவர்ந்தனர். கண்ணன் அவரிடமிருந்து ஞாயிற்றை மறைத்தான். இவ்வரலாறு புறநானூற்றிறுள்ளது.

''அணங்குடை அவுணர் கணம்கொண்டு ஒளித்தெனச்
சேண்விளங்கு சிறப்பின் ஞாயிறு காலை
இருள்கண் கெடுத்த பருதி ஞாலத்து
இடும்பைகொள் பருவரல்தீரக் கடுந்திறல்
அஞ்சன உருவன் தந்து நிறுத்தாங்கு'' -174

என்பது பாடற் பகுதி.

கண்ணன் ஆயர்குலப் பெண்களின் துணியைக் கவர்ந்து பின்பு குருந்த மரத்தை வளைத்து அவர்களின் மானத்தைக் காத்தான் என்பது ஒரு வரலாறு. இதனை

''வடாது—
வண்புனல் தொழுநை வார்மணல் அகன்துறை
அண்டர் மகளிர் தண்டழை உடீஇயர்
மரஞ்செல மிதித்த மாஅல் போலப்
புன்தலை மடப்பிடி உணிஇயர் அங்குழை
நெடுநிலை யாஅம் ஒற்றி நனைகவுள்
படிநிமிறு கடியும் களிறே''. (59)

எனவரும் அகநானூற்றால் அறியலாம்.



**நரசிம்ம அவதாரம் :**

இரணியன் ஆணவத்தால் தானே முதல்வன் என்று செம்மாந்து இருந்தான். மகன் பிரகலாதனுக்கும் தன்னை வெளிப்படுத்தினான். பிரகலாதனோ, நாராயணனே பரம்பொருள் என்றான். இரணியன் அந்நாராயணன் எங்குளன் என்றான். பிரகலாதன் எங்கள் நாராயணன் தூணிலும், துரும்பிலும் உள்ளனன் என்றான். இரணியன் எதிரிலிருந்த தூணை உதைக்க அங்கிருந்து நரசிம்மம் தோன்றியது. அந்நரசிம்மம் இரணியனை அழித்தது. இதனைச்

"செயிர்தீர் செங்கம் செல்வநின் புகழப்
புகைந்த நெஞ்சில் புலர்ந்த சாந்தில்
பிருங்க லாதன் பலபல பிணிபட
வலந்துழி மலர்ந்த நோய்கள் கூம்பியநடுக்கத்து
அலர்ந்த புகழோன தாதை ஆகலின்
இகழ்வோன இகழா நெஞ்சின னைநீ யிகழா
நன்றா நட்டஅவன் நன்மார்பு புயங்கி
ஒன்றா நட்டவன் உறுவரை மார்பில்
படிமதம் சாம்ப ஒதுங்கி
இன்னல் இன்னர்ஒடு இடிமுரசு இயம்ப
வெடிபடா வொழதூண் தடியொடு
தடிதடி பலபட வகிர்வாய்த்த உகிரினை
*(4 : 10—21)*

எனவரும் பரிபாடற்பகுதி விளக்குகிறது.

**வராக அவதாரம் :** வராகம் - பன்றி. திருமால் பன்றி வடிவில் தோன்றி அருள் செய்தது குறிப்பிடத்தக்க ஒன்று. இரணியகசிபுவின் உடன் பிறந்தவன் இரணியாக்கதன். இவன் நிலவுலகைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு கடலினுள் புகுந்து விட்டான். இவன் செயலைக் கண்டு அஞ்சிய தேவர்கள் திருமாலிடம் முறையிட்டனர். அதுபொழுது திருமால் பன்றி வடிவில் தோன்றி, கீழ்ப்புகுந்து உலகை மீட்டனன். இது வராக அவதாரத்தின் வரலாறு. இதனையும் பரிபாடல் விளக்குகிறது. *(பரிபாடல் 2:16-17, 3; 23-4, 4:22-4)*

''ஊழி ஆழிக்கண் இருநிலம் உருகெழு
கேழலாய் மருப்பின் உழுதோய்''. *(3:23-4)*

**வாமன அவதாரம் :** மாவலி மூவுலகையும் வெற்றி கொண்டான். இவனிடம் தோற்ற இந்திரன் திருமாலிடம் தம்மைக் காக்க வேண்டிக் கொண்டனன். திருமால் குறளனாகி மாவலியிடம் மூன்றடி மண் கேட்டான். மாவலி சுக்கிரன் தடுத்தும் கேளாது நீர்வார்த்துக் கொடுத்தான். திருமால் நெடியோனாய்த் தோன்றி உலகை இரண்டடியால் அளந்தான். மற்றுமோர் அடிக்கு நிலப்பரப்பு இல்லாமையால் மாவலியின் தலையில் வைத்தழுத்தி கீழ் உலகத்திற்கு அனுப்பினார். இவ்வரலாற்றை




சங்க இலக்கியங்களில் பார்க்கக் காணலாம் (பெரும்பாண்-29-30, முல்லைப்பாட்டு - 3) நெய்தற்கலி. (7)

''இருநிலம் கடந்த திருமறு மார்பில்
முந்நீர் வண்ணன்'' (பெரும்பாணர்-29-30)

''நீர்செல நிமிர்ந்த மாஅல் போல''.
(முல்லைப்பாட்டு-3)

''ஞாலம் மூன்றடித்தாய முதல்வன்.''
(நெய்தற்கலி-7)

**நிறைவுரை :** திருமால் உயிர்களை உய்வித்தற்காக அவதாரம் எடுக்கும் பாங்குடையவர். வைணவ இலக்கியம் தோன்றுவதற்கு முன்பே திருமால் பற்றிய வரலாறுகள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. காவியம் படைத்தற்குக் கம்பருக்கும், வில்லிப்புத்தூராருக்கும் வடமொழி இதிகாசங்கள் துணை இருப்பினும் சங்க இலக்கியங்களும் துணை புரிந்திருக்கின்றன எனலாம். சங்ககாலத்திற்கு முன்பே திருமால் பற்றிய கதைகள் மக்களிடத்தில் பரவியுள்ளதை உணர முடிகிறது. திருமாலின் தொன்மையும் பெருமையும் இனிது புலனாகின்றது.



# ஸ்ரீ ஐயப்பன் 108 போற்றி

## செந்தில் துறவி

1. அரிஹரன் மைந்தா சரணம் பொன் ஐயப்பா
2. அனாதரட்சகா சரணம் பொன் ஐயப்பா
3. அருள்புரிவாயே சரணம் பொன் ஐயப்பா
4. அன்புருவானாய் சரணம் பொன் ஐயப்பா
5. அகந்தையழிப்பாய் சரணம் பொன் ஐயப்பா
6. அரனார் சுதனே சரணம் பொன் ஐயப்பா
7. அறிவினுள் அறிவே சரணம் பொன் ஐயப்பா
8. அகிலமும் நீயே சரணம் பொன் ஐயப்பா
9. அறுமுகன் தம்பீ சரணம் பொன் ஐயப்பா
10. ஆனந்த மூர்த்தி சரணம் பொன் ஐயப்பா
11. ஆனந்த ஜோதீ சரணம் பொன ஐயப்பா
12. ஆனந்த காரண சரணம் பொன் ஐயப்பா
13. ஆனந்த பூமா சரணம் பொன் ஐயப்பா
14. ஆனந்த மளிப்பாய் சரணம் பொன் ஐயப்பா
15. ஆதியும் நீயே சரணம் பொன் ஐயப்பா
16. இன்புருவானாய் சரணம் பொன் ஐயப்பா
17. இகபர சுகம்தா சரணம் பொன் ஐயப்பா
18. இருமுடிப் பிரியனே சரணம் பொன் ஐயப்பா
19. இன்னல் தவிர்ப்பாய் சரணம் பொன் ஐயப்பா
20. இருவினை நீக்குவாய் சரணம் பொன் ஐயப்பா
21. ஈசனின் மைந்தா சரணம் பொன் ஐயப்பா
22. ஈடில்லா மணியே சரணம் பொன் ஐயப்பா
23. உம்பர்கள் வாழ்வே சரணம் பொன் ஐயப்பா
24. உலப்பிலா ஒன்றே சரணம் பொன் ஐயப்பா
25. உண்மை விளக்கே சரணம் பொன் ஐயப்பா
26. உயிரின் உயிரே சரணம் பொன் ஐயப்பா
27. உன்னடைக்கலம் நான் சரணம் பொன் ஐயப்பா
28. உன்னத கதி தா சரணம் பொன் ஐயப்பா
29. உன் திருவடி தா சரணம் பொன் ஐயப்பா
30. எங்கும் நிறைந்தாய் சரணம் பொன் ஐயப்பா
31. எந்தனின் தேவா சரணம் பொன் ஐயப்பா
32. எருமேலி வாழ்வே சரணம் பொன் ஐயப்பா
33. எருமையை மாய்த்தாய் சரணம் பொன் ஐயப்பா
34. ஏழைப் பங்காளா சரணம் பொன் ஐயப்பா
35. ஏற்றம் அளிப்பாய் சரணம் பொன் ஐயப்பா
36. ஐயப்ப சுவாமி சரணம் பொன் ஐயப்பா
37. ஐங்கரன் தம்பீ சரணம் பொன் ஐயப்பா
38. ஐயம் தவிர்ப்பாய் சரணம் பொன் ஐயப்பா
39. ஒன்றாய் நின்றாய் சரணம் பொன் ஐயப்பா
40. ஒண்பொருள் நீயே சரணம் பொன் ஐயப்பா
41. ஒளியின் ஒளியே சரணம் பொன் ஐயப்பா
42. ஓங்காரப்பொருளே சரணம் பொன் ஐயப்பா

43. ஔதார்ய சீலா சரணம் பொன் ஐயப்பா
44. அஃகம் தரிப்பாய் சரணம் பொன் ஐயப்பா
45. கணங்களின் தலைவா சரணம் பொன் ஐயப்பா
46. கருணையே புரிவாய் சரணம் பொன் ஐயப்பா
47. கதியிலேன் சுவாமி சரணம் பொன் ஐயப்பா
48 கரிவாகனனே சரணம் பொன் ஐயப்பா
49. கரிமலை வாழ்வே சரணம் பொன் ஐயப்பா
50. களிநடம் புரிவாய் சரணம் பொன் ஐயப்பா
51. கற்பூர ஜோதி சரணம் பொன் ஐயப்பா
52. காருண்ய சீலா சரணம் பொன் ஐயப்பா
53. காந்தமலை ஜோதியே சரணம் பொன் ஐயப்பா
54. கீர்த்தன ப்ரியனே சரணம் பொன் ஐயப்பா
55. குருவுருவே நீ சரணம் பொன் ஐயப்பா
56. குளத்துப்புழையாய் சரணம் பொன் ஐயப்பா
57. திருவருள் புரிவாய் சரணம் பொன் ஐயப்பா
58. சரணம் சரணம் சரணம் பொன் ஐயப்பா
59 சடுதியில் அருள்வாய் சரணம் பொன் ஐயப்பா
60. சங்கையைத் தீர்ப்பாய் சரணம் பொன் ஐயப்பா
61. சபரிகிரீசா சரணம் பொன் ஐயப்பா
62. சாஸ்தாவே வா சரணம் பொன் ஐயப்பா
63. சண்முக சோதர சரணம் பொன் ஐயப்பா
64. சரணப்பிரியனே சரணம் பொன் ஐயப்பா
65. சீக்கிரம் அருள்வாய் சரணம் பொன் ஐயப்பா
66. சூலாயுதனே சரணம் பொன் ஐயப்பா
67. டமருகப் பிரியனே சரணம் பொன் ஐயப்பா
68. டம்பகமற்றேன சரணம் பொன் ஐயப்பா
69. பம்பைபாலா சரணம் பொன் ஐயப்பா
70. பம்பா விஹாரா சரணம் பொன் ஐயப்பா
71. பாவனமாக்கு சரணம் பொன் ஐயப்பா
72. பவபயம் நீக்கு சரணம் பொன் ஐயப்பா
73. புனித தேவனே சரணம் பொன் ஐயப்பா
74. புலி வாகனனே சரணம் பொன் ஐயப்பா
75. புண்ணிய சீலா சரணம் பொன் ஐயப்பா
76. புண்டரீகாட்சா சரணம் பொன் ஐயப்பா
77. புவன மோகனா சரணம் பொன் ஐயப்பா
78. பூதி பூஷணா சரணம் பொன் ஐயப்பா
79. பூரணை கணவா சரணம் பொன் ஐயப்பா
80. புஷ்கலை நாதா சரணம் பொன் ஐயப்பா
81. நானற்ற விடமே சரணம் பொன் ஐயப்பா
82. நாதனின் தாள்கள் சரணம் பொன் ஐயப்பா
83. வேத நாயகா சரணம் பொன் ஐயப்பா
84. நாத நாயகா சரணம் பொன் ஐயப்பா
85. பூத நாயகா சரணம் பொன் ஐயப்பா
86. மன்மத ரூபா சரணம் பொன் ஐயப்பா
87 என்குல தேவா சரணம் பொன் ஐயப்பா
88 சிற்பர தேஹா சரணம் பொன் ஐயப்பா
89. தற்பரமானாய் சரணம் பொன் ஐயப்பா
90. வியாதி நிக்ரஹா சரணம் பொன் ஐயப்பா
91 ஆதி நாசனா சரணம் பொன் ஐயப்பா
92. மாமலை வாசா சரணம் பொன் ஐயப்பா
93. மணி கண்டதேவா சரணம் பொன் ஐயப்பா
94. பூத தயாபரா சரணம் பொன் ஐயப்பா
95. யமபயம் தவிர்ப்பாய் சரணம் பொன் ஐயப்பா
96. முன்னின்று காப்பாய் சரணம் பொன் ஐயப்பா
97. காக்கும் தெய்வமே சரணம் பொன் ஐயப்பா
98. கருணை வாரிதியே சரணம் பொன் ஐயப்பா
99. நெய்யபிஷேகா சரணம் பொன் ஐயப்பா
100. சத்திய ஜோதீ சரணம் பொன் ஐயப்பா
101. சபரிச் செல்வா சரணம் பொன் ஐயப்பா
102. சாந்த சொருபா சரணம் பொன் ஐயப்பா
103. சுந்தர ரூபா சரணம் பொன் ஐயப்பா
104. சூழொளி விளக்கே சரணம் பொன் ஐயப்பா
105. வில்லாளி வீரா சரணம் பொன் ஐயப்பா
106. வீரமணி கண்டா சரணம் பொன் ஐயப்பா
107. வாவரின் தோழா சரணம் பொன் ஐயப்பா
108. வரமருள் தேவா சரணம் பொன் ஐயப்பா

வந்தனை செய்தோம் சரணம் பொன் ஐயப்பா
சரணம் சரணப் சரணம் பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

— — — —

# அறிவுடையார் ஆவது அறிவார்

டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி, சிங்கம்பட்டி.

இக்கட்டுரையின் தலையங்கமே ஒரு குறட்பாவின் முதற்கூறாக இருந்தாலும்கூட வாசகர்களை இதன் கீழ் குறிப்பிட்டுள்ள இரு குறட்பாக்களை நினைவில் கொண்டே இக் கட்டுரையை முழுமையாகப் படிக்க வேண்டு கிறேன்.

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்'' குறள்-466

மற்றொன்று

'அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலர்
என்னுடைய ரேனும் இலர்'' குறள்—430

உலகில் ஏழு அதிசயங்கள் இருப்பதாக விளக்கம் கூறுவார்கள். என்னுடைய சிற்றறி விற்கு எட்டியவரை இவ்வுடல் கூறையே எட்டாவது அதிசயமாகக் கொள்ளலாம்.

இவ்வுடல் கூற்றில் உள்ள பல அதிசயங் களில் ஒரு சிலவற்றை வரிசையாகக் கீழே தந்தி ருக்கிறேன்.

1. நம் அன்னை வயிற்றில் சுமார் 4 மாதக் குழவியாக நாம் இருக்கும்போதே நம் முடைய இருதயம் அடிக்கத் தொடங்குகிறது. அப்படித் தொடங்கிய அவ்வுடற்கருவி ஓய்வு இன்றி ஏறத்தாழ சுமார் 70 அல்லது 75 ஆண்டுகள் நிற்காமல் செயல்படுகிறது. ஆனால் அது ஒரு சதைப்பற்று. தேய்மானத்திற்கு உட்பட்டதே ஆகும். அது தேய்மானம் இல்லாமல் எப்படி அது இயங்குகிறது என்ற வினா நமக்கு எழும் அல்லவா! Systolic and diastolic என்று மருத்துவ பரிபாஷை யில் குறிப்பிடுகின்ற சுருங்கி விரியும்போது உள்ள குறுகிய இடைவெளியில் அது தானே பழுது பார்த்துக்கொள்கிறது.

2. நமது பாட்டியின் காலங்கள் தொடங்கி நாம் சிறு வயதினராக இருந்தபோது நாம் தும்மும்போதெல்லாம் அம்முதியோர்கள் வயசு நூறு என்று வாழ்த்துவார்கள். இது நம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஜெர்மனி தேசத்திலும்கூட குழந்தைகள் தும்மினால் ycur healthgood health என்று சொல்வது இன்னும் பழக் கத்திலிருக்கிறது. இதற்கு முக்கிய பின்னணி ஒன்று இருப்பது மிகுதியான பேருக்குத் தெரி யாது. அதாவது நாம் சாதாரணமாக தும்மு வது என்பது 160 கிலோ மீட்டர் வேகத்தில என்பது நம் எல்லோருக்கும் பெரிய வியப் பாகவே இருக்கும். அந்நேரம் நம்முடைய இருதயம் இடைவிடாது இயங்கி வருவது அப் பொழுது நின்று விடுகிறது. அது மீண்டும் இறைவனின் அருளாலேயே இயங்கத் துவங்கு கிறது. இதனாலேயே பெரியவர்கள் அவ் வேளை நம்மை ஆசீர்வதித்தார்கள்.

3. ஒரு சிறுநீரகம் செயல்படவில்லை என்றால் அதன் வேலையையும் சேர்த்து பார்க்கும் ஆற்றலையும் மற்றொன்றுக்கு ஆண் டவன் அளித்திருக்கிறார் என்பது பெரும்பான்மையோருக்குத் தெரியும். இரவு நேரங்களில் நம் உறக்கம் கலையக் கூடாது என மூத்திரக்காய் தனது வேலையை சுருக்கிக் கொள்கிறது.

4. அதைப் போலவே ஒரு சுவாசப்பை செயலிழந்தால் அல்லது இரண சிகிச்சை மூலம் எடுக்கப்பட்டுவிட்டாலும் எஞ்சி இருக் கும் மற்றொன்றின் மூலம் நாம் சுவாசித்து வாழலாம்.

5. ஏதோ காரணம் கொண்டு நம் இரைப்பையை இரண சிகிச்சை மூலம் எடுக்க நேரிட்டாலும் oesophagusஐயும் சிறு குடலை யும் இணைத்து உணவு அருந்தி வாழ வைத்து விடுவார்கள். ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்திற்கு இடைவெளியில் சிறிது அளவு உண்டு உயிர் வாழ்ந்து விடலாம்.

6. ஈரல்—இதை இரண சிகிச்சை மூலம் முக்கால் பகுதியை எடுத்து விட்டாலும் குறுகிய கால அளவில் மீண்டும் பழைய நிலைக்கு வளர்ந்துவிடும். இரவில் கண் தெரி வதற்கு அவசியப்படும் வைட்டமினை தயார் செய்வதுடன், Pharmaceutical நிறுவனங் களே கண்டுபிடிக்காத 5000-க்கும் மேலான உடற்கூற்றிற்கு அவசியப்படும் வைட்டமின் களை இது தயார் செய்கிறது. குடற்கிருமி, அதிக அளவு மதுபானம் மற்றும் அதிக அளவு காப்பி அருந்துவதினாலேயும் இது கெட்டுப் போக வகையுண்டு. நாம் காப்பி அருந்திய பத்து நொடிக்குள் அதிலுள்ள caffeine சத்தை பிரித்து சிறுநீரகத்திற்கு அனுப்பி விடு கிறது. அப்படி அது செய்யாவிடில் caffeine சத்து artery இரத்தக்குழாயில் சென்று இருதயத்தை

நிறுத்திவிடும். இந்த அவயவம் முழுமையாகக் கெட்டுவிட்டால் ஆங்கிலத்தில் குறிப்பிடுவது போல் coronei க்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள வேண்டியதுதான்.

7. ஒரு சிகரட்டிலிருக்கும் 'நிக்கோடின்' சத்தைக் காட்டிலும் உடற்கூற்றிற்கு பல மடங்கு கேடு விளைவிக்கும் பொருள் Benzopyreneஇது அகல பாதைகளில் விரிக்கும் 'டார்' எண்ணையைத் தவிர வேறு இல்லை. பத்து சிகரட்டுகளில் உள்ள Benzopyreneசத்தை ஒரு vial-ல் எடுத்து ஒருவருக்கு ஊசி மூலம் ஏற்றினால், ஊசியை உடற்கூற்றிலிருந்து எடுப்பதற்கு முன் அவன் இறக்க நேரிடும். அதன்பின் ஒருவன் எப்படி 50 சிகரட்டுகளுக்கு மேல் ஊதித்தள்ளியும் உயிர் வாழ்கிறான் என்று கேட்டால் மருத்துவர்கள் - 'அதிசயம் விளக்கம் தெரிவதற்கு இல்லை' என்று கையை விரிக்கிறார்கள்.

8. நம் நாக்கும் ஒரு அதிசயக் கருவி.
1. உரைப்பு— Hot 2. கசப்பு—Bitter
3. துவர்ப்பு4—Astringen 4. இனிப்பு—Sweetness

இந்த நான்குவித உருசியையும் நாம் நுகரத் தனித்தனியாக உணர்வு நாளங்கள் நாக்கில் அமைக்கப்பட்டுள்ளன.

9. கண்—நம் மூக்குக் கண்ணாடியைப் போல், நம் கண்களில் 'லென்ஸ்' அமைக்கப் பட்டிருக்கிறது. திருவருள் சக்தியால் இவை நம் கண்களில் பொருத்தப்படவில்லை என்றால் நமக்கு கண்களில் ஒளி இருக்காது. மற்றொன்று மருத்துவர்கள் நம் கண்களில் லைட் அடித்துப் பார்ப்பது என்பது dialetation பார்ப்பதற்கு மட்டும் அல்ல. அப்படிப் பார்ப்பதில் நமக்கு இரத்தக் கொதிப்பு இருந்தாலும் தெரிய வரும் மற்றும் மண்டைக்குள் கட்டி (Tumour) இருந்தாலும் தெரியவரும்.

10. சிறு புண்கள் அல்லது காயங்கள் நம் உடலில் தோன்றினால்-ஏற்பட்டால் குறிப்பிட்ட சில இடங்களில் நெறிகட்டும் ( glandular swelling ). சிறு குழந்தைகள் இவ்வேதனையைக் குறித்து பெற்றோர்களிடம் கூறுவதைப் பார்த்திருக்கலாம் ஆனால் இது நம் நன்மைக்கே ஏற்படுவதாகும். இதுபோன்று அவ்விடஙகளில் நெறி கட்டவில்லை என்றால் அவ்வேதனை உடல் முழுவதும் பரவ வகையுண்டு

உடற்கூற்றின்இசைவுகளில் முடியிருப்பதும் ஒரு நன்மைக்கே. அவைகள் அவ்விடதகளில் இல்லை என்றால் தோல் உராய்ந்து புண் உண்டாக வாய்ப்புண்டு.

12. ஆங்கிலத்தில் சோம்பேறிகளை Lazy Bones என்று கூறுவார்கள். அது அப்படியில்லை. எலும்பின் உள் உள்ள ஊண் தான் நமக்கு இரத்த அணுக்களைத் தயார் செய்து கொடுக்கின்றது.

13. உள்ளங்கையில் (Dysentry( தொடர் புள்ள Bacteria வைத்துப் பார்த்தால் குறுகிய நேரத்தில் நம் கையில் உள்ள Dermicidal சக்தி அதை அழித்து விடும் ஆற்றல் உள்ளதைக் காணலாம்.

14. நாம் கீழே தரையில் படுத்து உறங்கினால் நாம் அறியாமல் ஏதேனும் ஒரு சிறிய உயிரினம் காதுக்குள் சென்றுவிட்டால். அங்கு கசப்புத் தன்மையுடைய மெழுகு ஒன்றை சுவைக்க நேரிடும். உடனே அது வெளியே ஓடி வந்துவிட வகையுண்டு.

15. ஒரு குண்டூசியை நன்றாகச் சுட வைத்து நெட்டக்குத்தலாக முளையை மட்டும் நம்மேல் வைத்தால் சுடாது. ஆனால் அதே நேரம்அச்சூடுஉள்ள ஊசியை பாட்டிலில் போட்டு நம்மேல் வைத்தால் அது உடனே தாங்க முடியாமல் மூளைக்கு அறிவித்துவிடும்' நாமும் பதறி அகற்றிவிடுவோம்.

மது மாது சூது புலன் இன்பத்திற்கென நமக்கு ஆண்டவன் இவ்வபூர்வமான உடலைத் தந்திருந்தால் அவரையும் நாம் தாழ்வாகவே மதிக்க நேரிடும். அதுபோலவே இது புலன் இன்பத்திற்கே என்று நம்பிவாழும் மனிதர்களையும் மக்களாக மதிக்காமல் மாக்களாகவேதான் அறிவாளிகள் கருதுவார்கள்.

இவ்வுடம்பு ஒரு காரியத்திற்காகவே வந்திருக்கிறது.'வினைபோகமே ஒரு தேகம் கொண்டாய் வினைதான் ஒழிந்தால் தினைப்போது அளவும் நில்லாது கண்டாய்'' என்று பட்டினத்து அடிகள் குறிப்பிட்டிருக்கிறார். மற்றும் வள்ளுவரும் 'இலக்கம் உடம்பு இடும்பைக் கென்றே கலக்கத்தைக் கையாறாக் கொள்ளாதாம் மேல்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பிண்டம் எடுத்து வந்த இப்பூத உடலை அழித்துவிடலாமா! கூடாது. நமக்கும் மேற்பட்ட சக்தி ஒன்றல்லவோ நாம் பிறப்பதற்கு காரணமாக இருக்கிறது.

''உண்டு சொர்க்கத்திலுள்ளது கண்டு விடும்
சூக்கமம் காரணமாய்ச் செல்ல பண்டு
தொடர
பரகாய யோகிபோல் பிண்டம் எடுக்கும்
பிறப்பு இறப்பு எய்தியே'' —திருமந்திரம்

ஆகவேஅதன் காரணத்தைஅறிந்து உடம்பைப் பேணுதல் வேண்டும்.

''உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவும்மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே''

என்றும்

''உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான்
என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே''

என்று ''திருமந்திரம்'' கூறுகிறது.

ஊழின் அடிப்படையில்தான் நமக்குவியாதிகளும் வருகின்றன. நகைச்சுவை கலந்த சிறந்த தத்துவ அடிப்படையில் இதனை நம் மேதகு வாரியார் ஸ்வாமிகள் நமக்கு ''ஈமைசின்''. ''அல்த்துரோசின்', 'ஆரியோமைசின்'. 'அக்ரோமைசின்' ( My Sin ) என்று மருந்துகளை மருத்துவர்கள் நமக்கு எழுதிக் கொடுக்கிறார்கள் என்று கூறுவார்கள்

நோய் நொடிகளுக்கு உள்பட்டு துன்பத்தை அனுபவிக்க வந்த உடம்பை ஏன் பேணுதல் வேண்டும் என்று ஒரு வினா எழும். வள்ளுவரும் திருமூலரும் ஒருவருக்கொருவர் முரண்பாடாகச் சொல்லியிருப்பதாகத் தோன்றும் ஆங்கிலத்தில் இதை (Paradoxical) என்று கூறுவார்கள். அப்படி இல்லை. முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும். அதைப் போலவே வினைக்காக வந்த உடலை வைத்துத் தான் வினையை அறுத்து வீடுபேறு அடைய முடியும்.

''மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே

கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க
வல்லானே''

என்கிறது மணிவாசகருடைய திருவாசகம். இவ்வுடல் பிறவிக் கடலை கடக்க நமக்கு ஆண்டவன் கொடுத்த தோணி. உயிர் உடல் எடுப்பதற்கு மூலகாரணமாக இருப்பது எது? மாங்கொட்டையைப் போட்டால் மாமரம் வரும். புளியங்கொட்டையைப் போட்டால் புளியமரம் வரும். வேப்பங்கொட்டையைப் போட்டால் வேப்பமரம் வரும். ஆகவே உடல் வருவதற்கு வித்து எது? ஆசை. இதனால் தான் திருவள்ளுவர்

'அவாஎன்பஎல்லா உயிருக்கும்எஞ்ஞான்றும்
தவா பிறப்பு ஈனும் வித்து'
என்று குறிப்பிடுகிறார். (குறள். 361)

ஏறத்தாழ 350 அல்லது 400 ஆண்டுகளுக்கு முன் சதாசிவ பிரும்மேந்திரர் என்று ஒரு மகான் இருந்தார். அவர்தான் பதஞ்சலி யோக சூத்திரத்திற்கு (பாஷ்யம்) உரை எழுதியவர். யோகத்தின் ஆற்றலை ஒவ்வொரு இடத்திலும் நிறுத்தி அனுபோக மூலமாக உரை எழுதியவர். இவர் ஒரு திகம்பர சாமியார் (நிர்வாணம்). ஒரு நாள் இவர் திருச்சியில் இஸ்லாமியர் வாழும் தெருவழியே செல்ல நேர்ந்தது. ஒரு யுவன், தன் இன மதப் பெண்களை இழிவுபடுத்தவே இது போன்று இங்கு நடந்து செல்கிறார் எனக் கருதி ஒரு அரிவாளால் அவரது கையைப்பின் புறம் இருந்து வெட்டிவிட்டான். கைதான் தரையில் விழுந்ததே தவிர இவர் அதையும் பொருட்படுத்தாமல் நடந்து கொண்டு போனார். அப்போதுதான் அவ்விளைஞனுக்கு இவரது பெருமை புலப்பட்டது. உடன் தன் தவறை உணர்ந்து துணித்த கையை எடுத்துக் கொண்டு சாமியார் பின் ஓடினான். அவரை வழி மறித்து நிகழ்ந்ததைதெரிவித்தான். அவர் நிதானமாகக் கேட்டுவிட்டு இப்போது தன் கை எங்கே என்று கேட்டார். இளைஞன் அதை எடுத்து அவரிடம் நீட்டினான். ஞானி அதை வாங்கி இருந்த இடத்தில் பொருத்தித் தேய்த்து விட்டார். ஒட்டிக் கொண்டது.

இவர் ஆகாயமார்க்கமாக செல்லும் ஆற்றல் படைத்தவர். இரவு பத்து மணி அளவில் சிறுவர்கள் காவேரி ஆற்றில் விளையாடிக்கொண்டிருப்பவர்களை அழைத்து கணணை மூடிக் கொண்டு தன்னைத் தொடச் சொல்வார். பத்து நொடிக்குள் அவர்களுடன் வைகைக் கரையில் இறங்கி எல்லோரையும் சித்திரைத் திருவிழாவைப் பார்த்து வரச் சொல்வார். மீண்டும் காலை 4 அல்லது 5 மணி அளவில் எல்லோரையும் காவேரி கரைக்கு அழைத்து வந்துவிடுவார். பெற்றோர்கள் முன்னாள் இரவு காணாமல்போன குழந்தைகளைக் கண்டித்து விசாரித்தால் இவர்கள் சித்திரைத் திருவிழா பார்த்ததைக் கூறுவார்கள்.

சதாசிவபிரும்மேந்திரருக்கு) சாதாரண ஒரு இல்லறத்தாரே குரு. ஒரு தடவை அவரை ஒரு ஞானி அணுகி எனக்கு இன்னும் எத்தனை ஜென்மம் உண்டு என்று கேட்டார். ஞானியின் குரு சிரித்தார். ஏன் சிரிக்கிறீர்கள் என்று ஞானி கேட்டார். அப்போது இல்லற குரு சொன்னார். உனக்கு இன்னும் ஒரு ஜென்மம் உண்டென்று. பிரும்மேந்திரர் அசந்து போனார். குருவை அப்பாவென்றும், குரு பத்தினியை அம்மாவென்றும் இவர் சொல்லி அழைப்பதுண்டு. தனக்கு ஏன் இன்னொரு ஜென்மம் என்று கேட்டார். அப்போது அவ்வில்லற குரு கேட்டார். நீ வரும்போதெல்லாம் உனது அம்மாவைப் பார்த்து என்ன வேண்டுகிறாய்?' இவருக்கு பாயாசம்மேல் கொள்ளை ஆசை. ஆகவே வந்தபோதெல்லாம் குரு பத்தினியிடம் பாயாசம் வைக்கச் சொல்லி சாப்பிடுவார். அவரும் அதனை பக்குவமாக வைத்து குழந்தையாக வரித்து பிரும்மேந்திரருக்கு பாசத்துடன் கொடுப்பார். ஆகவே அத்தகைய ஆசைக்கு மற்றொரு பிறவி உண்டு என்று இல்லற குரு சொன்னார்.

நாமெல்லோரும் பாதையில் போகிறதையெல்லாம் கண் கொட்டாமல்பார்த்துக்கொண்டிருக்கிறோமே! நமக்கு இன்னும் எத்தனை பிறவி வருமோ?

ஆசை நம்மை ஈர்த்து இழுத்து கட்டாயம் இவ்வுலகத்திற்கு கொண்டு வரும் என்பதில் ஐயம் வேண்டாம்.

இவ்வுலகில் வாழும்பொழுது உலக வாழ்க்கையில் ஈடுபட்டு இம்மாயையில் உழன்று விடுகிறோம். அதனால் நாம் இறந்தபின், பூத உடல் தகனத்திற்குப் பின் அஸ்தியை எடுப்பதற்கு முன் மஞ்சப்பொடி, மாப்பொடி, வாசனை திரவியம், பால், தயிர், இளநீர் போன்றவைகளை அதன்மேல் ஊற்றித்தான் எடுப்பார்கள். ஏன் என்றால் மனிதன் பூ உலக பாசத்தை, பிடிப்பை நினைந்து தடு

மாறுகிறான். பூதவுடல் மறைந்துவிட்டதே' இனி மது அருந்த முடியாது, புலால் உண்ண முடியாது, பெண்ணைக்கூடி மகிழ முடியாது.

இந்நிலையில் இப்பாசம்அறும் வகை ஏது?

இனி ஐந்தெழுத்திற்கு விளக்கம் தருகிறேன்.

நமசிவாய—ஸ்தூல பஞ்சாச்சரம்
சிவாயநம—சூக்கும பஞ்சாச்சரம்

குரு வாயிலாக இம்மந்திரங்களை உபதேசம் பெறுவதேநலம் பயக்கும். ஏன் என்றால் குருவருளும் திருவருளும் ஒன்று சேரும்போது நிச்சயம் நமக்கு வெற்றி கிட்டும்.

சிகாரம் (சி) — சிவன்

வகாரம் (வ) — சக்தி

யகாரம் (ய) — உயிர்

நகாரம் (ந) — திரோதான சக்தி

மகாரம் (ம) — ஆணவ மலம்

சிவசக்தியை ஒருபுறம் வைத்து மற்றொரு புறம் திரோதன மலத்தையும் ஆணவ மலத்தையும் வைத்து மத்தியில் உயிரை வைத்து. உருவேற்றினால் பாசம் தேய்ந்து ஒளிகூடும்.

உருவேறினால் திருவேறும் என்பார்கள்.

ஆணவமலம் இயற்கையாகவே என்றுமே உயிரைப் பீடித்துள்ளது. பல ஜென்மங்களில் நாம் அனுபவித்த துன்பங்கள் நம்மை பீடித்து நாம் வருந்தக்கூடாது என்பதால் ஆண்டவனின் பெருங்கருணையால் மறைப்பு சக்தியான திரோதான மலம் உயிருடன் இணைக்கப் பட்டுள்ளது.

இதனால்தான் திருஞானசம்பந்தர்

'நற்றிநாமம் நமச்சிவாய என்னும் சந்தையால்
தமிழ் ஞானசம்பந்தன் சொல் சிந்தையால்
மகிழ்ந்து ஏத்தவல்லாரெல்லாம்
பந்தபாசம் அறுக்கவல்லார்களே''

என்று நமச்சிவாயப் பதிகத்தில் கூறியுள்ளார். ஐந்தெழுத்தை சொல்ல நேரம் இல்லை. காலம் இல்லை என்று பலரும் கூறுவதால் குழந்தைகளுக்கு தெய்வங்களின் நாமங்களைச் சூட்டி அவர்களை அழைத்தார்கள் ஆனால் இவைகளையும் மறந்து சில பெற்றோர்கள் ஈன்றெடுத்து சீராட்டி பாராட்டி வளர்க்கும் தம் குழந்தைகளை சில நேரங்களில் சனியனே, மூதேவி, கழுதை என்றெல்லாம் ஏசுவதைப் பார்த்திருப்பீர்கள் இதனாலேயே என்னவோ சில குழந்தைகள் அதைப்போலவே போய்விடுகிறார்கள். இத்துடன் நில்லாமல் அறிவில் சிறந்த நம் முன்னோர்கள் இறைவனின் நினைவு மாறாமல் இருக்க வாழைப்பழ வகைகளுக்குக்கூட முகுந்தன், பூவன், பேயன் என்று பெயர் வைத்ததுடன் நெல் வகைகளிலும் ஆனைக்கொம்பன் செந்தில் நாயகம் என்றெல்லாம் பெயர் வைத்து மகிழ்ந்திருக்கிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத் தகுந்தது. கீழே தருகிற பாடல்களுக்கு வாசகர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

'மற்றும் பல பிதற்ற வேண்டாம் மடநெஞ்சே
கற்றைச் சடையண்ணல் காளத்தி—
நெற்றிக்கண்
ஆரா அமுதன் திருநாமம் அஞ்செழுத்தும்
சோராமல் எப்பொழுதும் சொல்''.

(கயிலைபாதிகாளத்தி பாதிஅந்தாதி)

—நக்கீர தேவநாயனார்.

திருநாவுக்கரசர் தேவாரம்:

''மண்பா தலம்புக்கு மால்கடல்
மூடி மற்று ஏழுலகும்
விண்பால் திசைகெட்டு இருசுடர்
வீழினும் அஞ்சல் நெஞ்சே.
திண்பால் நமக்கு ஒன்று கண்டோம்
திருப்பாதிரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுள்
சுடரான் கழல் இணையே''

மனிதனின் வாழ்க்கையில் ஒருவன் கடைபிடிக்க வேண்டியது அறம்தான். சாஸ்திரங்களில் 32 அறங்களை வகைப்படுத்தி கூறியிருந்தாலும்கூட வள்ளுவர் அதற்கென ஒரு அத்தியாயத்தையே தனித்து ஒதுக்கித் தந்திகிறார். அறன் வலியுறுத்தல் என்ற ஒரு அத்தியாயத்தை தவிர்த்து அவர் வேறு எந்த ஒரு அத்தியாயத்தையும் வலியுறுத்தவில்லை.

''சிறப்புஈனும்செல்வமும் ஈனும்அறத்தி னூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு'' குறள்-31

''அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு''.

குறள்—32

ஆகவே ஒருவருக்கு அவகாசம் இல்லை என்று சொன்னால் 'அறன் வலியுறுத்தல்' என்ற இந்த ஒரு அதிகாரத்தை மட்டும் படித்தே அதன்படி ஒழுகி உய்வு பெறலாம் என்பதில் ஐயமில்லை.

'அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின்
புறத்தாற்றின் போஒய் பெறுவது எவன்''

''இல்லறம் அல்லது நல்லறம் அன்று'

இக்கட்டுரை நூல்கள் ஆய்வு செய்து மட்டும் எழுதினதாக கருதாமல் அனுபோக ரீதியாக உணர்ந்து நான் எழுதியிருப்பதை அறிந்து கொள்ளல் வேண்டும் எனறு பணிவுடன் வாசகர்களை வேண்டிக்கொள்கிறேன்.

ஆகவே ஆண்டவன் அருளால் அவா வறுத்து அறத்தின் நின்றொழுகி வீடுபேறு அடைய முயல்வோமாக.



# சமயபுரத்தாய்

இயற்றியவர் :

**மயிலை தவத்திரு ஓம் சிவஞான ஜோதி**

இசை அமைத்தவர் :

**சிவசக்தி அம்மையார்**

ராகம் : ஆனந்தவல்லி தாளம் : ஆதி

பல்லவி

தக்க சமயத்தில் அருள் புரிவாள்
சக்தி சமய புரத்தாய்
பக்கக் கண்ணாகத் துணை இருப்பாள்
சக்தி கண்ண புரத்தாய் (தக்க)

சரணம்—1

இதயக் கோயிலில் இதய மேடையில்
அன்புத் தந்தையுடன் அமர்ந்திருப்பாள்
இதயலிங்கமாய் உதய ஜோதியாய்
ஆத்ம ஜோதியாய் ஜொலித்திடுவாள் (தக்க)

சரணம்—2

புருவ நடுவினில் மேரு மலையினில்
ஞானக் கண்ணாகத் தோன்றிடுவாள்
ஞான ஜோதியாகி ஞான குருவாகி
ஞானப் பாலினை ஊட்டிடுவாள் (தக்க)

சரணம்—3

பக்கக் கண்ணாகத் துணை இருந்து
தானே தவம் யோகம் செய்திடுவாள்
அருட்பெருஞ் ஜோதியாம் சிவப்பெருஞ்
ஜோதியாம்
தந்தையுடன் கூடி ஆடி மகிழ்வாள் (தக்க)

சரணம்—4

திருவடி இன்பம் மறுவடிவின்பம்
சிவவடி வின்பம் தந்திடுவாள்
சுயம்பு ஜோதியாம் சுதந்திர ஜோதியாம்
சிவப் பெருஞ் ஜோதியாய் ஜொலித்திடுவாள்
(தக்க)



# பொருட்காட்சியில் நமது அரங்கம்

ப. தனபால், எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34.

சென்னை தீவுத்திடலில் 23-வது இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள நமது இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அரங்கின் அழகிய முகப்புத் தோற்றத்தைத்தான் நீங்கள் கீழே கண்டு மகிழ்கின்றீர்கள்.

திருவொற்றியூர் அருள்மிகு வடிவுடையம்மன் முகப்பின் நடுவை அலங்கரிக்க மேலூர் திருவுடையம்மனும், திருமுல்லைவாயில் கொடியுடையம்மனும் வல. இடப் பக்கங்களை அலங்கரிக்க முகப்புத் தோற்றம் சிறப்புற வடிவமைக்கப்பட்டுள்ளது.


முழுமதி நாளில் இச்சா சக்தியாகவிளங்கும் திருவுடையம்மனைக் காலை தரிசித்து, ஞானசக்தியாம் திருவொற்றியூர் வடிவுடையம்மனை அதே நாளில் உச்சி காலத்தில் தரிசித்து, கிரியா சக்தியாக விளங்கும் திருமுல்லைவாயில் கொடியிடையம்மனை இரவில் தரிசிக்க மெய்யன்பர்கள் யாவரும் இம்மை மறுமைப் பேறுகளைக் குறைவின்றிப் பெறலாம் என்பது நமக்கு ஆன்றோர்கள் அருளியுள்ள வழிமுறையாகும்.


இத்தகைய சக்தியில் மிகுந்த தேவியர் மூவரை ஒரேநாளில் ஒரே இடத்தில் வழிபட்டு மனமகிழ்வைப் பெறும் வகையில் பொருட்காட்சி முகப்பு வடிவமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற ஒளவை மூதாட்டியின் பொன்மொழியும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புறநானூற்றுப் பொன்மொழியும் அரங்கின் முகப்பை அலங்கரிக்கின்றன. அரங்கின் பக்க முகப்பில் அறநிலையத்துறையின் சீரிய செயற்திட்டங்களைவிவரிக்கும் வகையில் கிராமக் கோயில் திருப்பணித் திட்டம், சிறப்புத் திருமணத் திட்டம், குடும்ப நல நிதி வழங்கும் திட்டம் ஆகியவற்றை விளக்கும் காட்சிகள் வண்ண ஒவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

அரங்கின் இடப்பக்கம் நுழைவு வாயிலும் வலப்பக்கம் வெளியேறும் வாயிலும் அமைக்கப்பட்டுள்ளது.

அரங்கில் நுழைய முதலில் காட்சி தருகிறார் மூலமுதற் கடவுளாம் கணபதி. நேர்





எதிரே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் படமும் அண்மையில் சித்திரக்குளத் திருப்பணியை மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் புலவர் செங்குட்டுவன் அவர்கள் முன்னிலையில் சென்னை மாநகராட்சி மேயர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தபோது எடுக்கப்பட்ட படமும் அலங்கரிக்கின்றன.

அரங்கின் பிரதானமான மையப்பகுதியில் 'மகாமேரு' சிறப்புற வடிவமைக்கப்பட்டு அதனை வழிபடும் முறையும் பயனும் விளக்க முறக் கூறப்பட்டுள்ளன.

அரங்கின் உட்புறம் செல்ல முதலில் 'இராமானுஜரின் திருக்கோட்டியூர் வைபவம்' ஒலி-ஒளிக் காட்சியாகச் சித்தரிக்கப்பட்டிருக்கக் காண்கிறோம். திருக்கோட்டியூர் நம்பிகளிடம் எட்டெழுத்து மந்திரம் உபதேசம் பெறுகிறார் இராமானுஜர். 'இம்மந்திரத்தைப் பிறருக்கு உபதேசிக்காதே' என்று குருநாதர் ஆணை பிறப்பிக்க குருவாணையை மீறி இராமானுஜர் திருக்கோட்டியூர் கோயில் விமானத்தில் ஏறி நின்று


''எல்லோரும் கேட்டு உய்மின்
எம்பெருமான் திருமந்திரம்
ஓம் நமோ நாராயணாய''

என்று உபதேசிக்கிறார்.

இராமானுஜர் மந்திரோபதேசம் பெறுவதும் கோயில் கோபுரத்திலேறி உபதேசிப்பதுமான காட்சிகள் அழகிய பொம்மைகளாக வமைக்கப்பட்டு அவை அற்புதமாக இயக்கப் பெறுவது தத்ரூபமாக அமைந்து, மக்களின் பாராட்டைப் பெறுவது குறிப்பிடத்தக்கது.

தாம் ஒருவர் குருவாணையை மீறிய குற்றத்திற்காக நரகம்புகினும் மந்திரம் கேட்ட மக்கள் எல்லோரும் சொர்க்கம் பெறுவர் அன்றோ என்று எண்ணிய ஏற்றம் காரணமாக இராமானுஜர் திருக்கோட்டி நம்பிகளாலேயே 'எம்பெருமானார்' எனச் சிறப்பிக்கப் பெற்றார். இந்த எம்பெருமானார் வைபவம்





ஒலி-ஒளிக் காட்சியில் கண்டோர் பரவசப் படும் வகையில் நன்கு சித்தரித்துக்காட்டப்பட்டுள்ளது.

அடுத்து ஒலி-ஒளிக் காட்சியாக சித்தரிக்கப்படுவது திருச்செந்தூர் சூரசம்ஹாரம். முருகப்பெருமானிடம் போரிட்டு வலிமை குன்றிய சூரபதுமன் கடல் நடுவே மாமரமாய் நிற்கிறான். முருகப் பெருமான் வேலெடுத்து வீச அவ்வீரவேல் மாமரத்தைப் பிளக்கிறது. அதன் ஒரு கூறு சேவலாக மற்றொரு கூறு மயிலாகத் தோன்றுவது மிகச் சிறப்பாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஒலி-ஒளிக் காட்சியாக 'அம்மனின் அருள் தரிசனம்' விவரிக்கப்பட சிம்ம வாகனத்தில் அம்பிகை வலம் வருவது தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயிலில் சேவிக்கும் மக்களை போலவே தத்தம் தலையில் சடாரி வந்தமரக் கண்டு அகம் மகிழ்வது அரங்கின் மற்றொரு சிறப்பு அம்சமாகும்.

இதையடுத்து 'திருவரங்கத்தில் திருப்பாணாழ்வார் வைபவம்' மக்கள் கண்டு பரவசப்படும் வகையில் ஒலி-ஒளிக் காட்சியாகத் தத்ரூபமாக நிகழ்த்தப்படுவது இவ்வரங்கத்தில் இன்னொரு சிறப்பு அம்சமாகும்.

அறநிலையத்துறை செயல்படுத்திவரும் எண்ணற்ற திட்டங்களில் ஒரு சிறந்த திட்டமான 'ஒரு கால பூசைக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்' அடுத்து ஒலி-ஒளிக் காட்சியாக நல்ல முறையில் விவரிக்கப்பட்டிருக்கிறது. மக்கள் தம்முடைய பங்காக ரூ 2250 திரட்டி ஆலயத்திற்காக வழங்கினால் அறநிலையத்துறை தனது பங்காக ரூ. 2 2250 அந்த ஆலயத்திற்கு வழங்கிக் கூடுதல் தொகையான ரூ. 25 000 ஆலயத்தின் பெயரில் நிலையான வைப்புத் தொகையாக வைக்கப்பட்டு அதிலிருந்து வரும் வட்டித்தொகையில் ஒரு கால பூசை குறைவின்றி நடைபெற ஆவனச் செய்யப்படும்' என்பது ஒலி-ஒளிக் காட்சியாக நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய ஒலி-ஒளிக் காட்சிகளில் மனம் ஒன்றி மகிழும் மக்கள் உள்ளங்களை மேலும் மகிழ்வுறுத்தும் வகையில் மேள ஒலி தானாக ஒலிக்கத் தொடங்கி மக்களை குதுகலப்படுத்துகிறது.

திருக்கோயில் வண்ணப் படங்கள் டாலர்கள், தெய்வத் திருவுருவங்கள், திருக்கோயில் இதழ்கள் இதே அரங்கில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

அறநிலையத்துறை அரங்கைக் காண வரும் மக்கள் அனைவருக்கும் வடபழநிமுருகர் விபூதி-குங்குமப் பிரசாதமும் ஸ்ரீபார்த்தசாரதிக் கோயில் பிரசாதமும் இலவசமாக வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

மக்களை மகிழ்விப்பதும், அறிவுறுத்துவதும் பொருட்காட்சியின் தலையாய நோக்கம் என்று கூறுவார்கள். இத்தகைய உயர்ந்த நோக்கில் மக்கள் அனைவருடைய பாராட்டையும் பெறும் வகையில் அறநிலையத்துறை அரங்கு மிகச் சிறப்புற அமைக்கப்பட்டிருப்பதை நீங்களே நேரில் கண்டு மகிழலாம் வாரீர், வாரீர்.

— — — —

# திருமாலின் ஐந்து நிலைகள்!

திருமால்தாசன்



K. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

ஓம் நமோ நாராயணாய நம.

மஹா விஷ்ணு பரம், வியூகம், விபவம் அந்தர்யாமி, அர்ச்சா என்று ஐந்து ரூபங்களில் விளங்குகின்றார்.

பரம் : ஸ்ரீதேவி, பூதேவி நீளா தேவியோடு பரம பதத்தில், தன்னை விட்டுப் பிரியாத நித்யா முக்தர்களுக்கு (பூவுலகு வாழ்வு நீங்கிய புனிதர்கள்) வாழ்வளிக்கும் வைகுந்த ஆனந்த நிலையமே 'பரத்துவம்' என்பர்.

வைகுண்டத்தில் மகாவிஷ்ணு தரும் காட்சி பரம், சங்கு, சக்கரம், வாள், வில் பத்மம், கதை முதலியவைகளை வைத்திருக்கின்றார். சங்கு, பாவங்கள் அழிக்கிறது. சக்கரம் - அஞ்ஞானம் அழிக்கிறது. வாள் சொந்த பந்த உறவுகளை அறுக்கிறது. தாமரை-உலக நிலைகளை உணர்த்துகிறது. கதை, வில்—துன்பங்கள் முறியடித்து, அவருடைய திவ்யரூபத் தன்மையைக் காட்டுகிறது.

இந்நிலையில் உள்ள மகா விஷ்ணுவை ''வாசுதேவன்'' என்று அழைக்கிறோம். வீயூகம் ஆமோதம், புவனம் ப்ரமோதம் என்ற மூன்றும் விஷ்ணு லோகங்கள். இந்த மூன்று லோகங்களில் முறையே சங்கர்ஷணன், ப்ரத்யும்னன் அனுருத்தன் என்று பெயருடன் அழைக்கப்பட்டு இந்த தோற்றங்கள் மூலம் படைத்தல், காத்தல் அழித்தல் முதலான முத்தொழில்களை இயக்கி தேவர்களின் குறைகளை கேட்டறிந்து அதை நிவர்த்தி செய்கிறார்.

சங்கர்ஷணனிடம், விவேகம், சக்தி இவைகள் அடங்கியுள்ளன. ஜீவாத்மாக்களைக் கவனிக்கும் இலாக்கா இவருடையது.

ப்ரத்யுமனனிடம் - தர்மகாரியங்கள், புண்ணியங்கள் கட்டிக்காக்கும் இலாக்கா இவருடையது.

அநுருத்தனிடம்—ஆன்மீகம், ஞானம், வீரம் இவருடைய இலாக்கா.

விவரம் : அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட நல்லவர்களை காத்து, தீயவர்களை அழிக்கும் பொருட்டாகப் பூவுலகில் இராமன், கிருஷ்ணன் முதலிய அவதாரங்களை அந்த ஆழி நாயகன் மேற்கொள்வதே 'விபவம்' என்பதாகும்

அந்தர்யாமி : தியானத்தில் மூழ்கி இறைவனைக் காண முயல்பவர்களுக்கு பகவான் காட்சிதரும் உருவம் அந்தர்யாமி எனப்படும்.

அர்ச்சா : அடியவர்களின் விருப்பம் போல பொன், வெள்ளி முதலிய உலோகங்களிலும், வைர விக்ரகத்திலும் (வைரம் என்பது இங்கே உலோகத்தை குறிப்பிடுவது அல்ல, கற்சிலை என்ற சொல்லிற்கு மாற்றுச் சொல்லாகப் பயன்படுத்துவது வைணவ மரபு). தார் மண் அனைத்திலும், பிம்பம், ஓவியம் வடிவிலே தனக்கு இஷ்டமான வடிவில் பக்தனின் உள்ளத்திற்சேற்ப எழுந்தருளி அருள்பாலிக்கும் ஸ்ரீமந் நாராயணனின் வடிவமே அர்ச்சாவதாரம்.


தனக்கு இஷ்டமான வடிவில் பகவானை வழிபடும் பக்தனின் உள்ளத்தில் ஒரு ஆன்மீக ஆர்வம் கிளம்பும். இதை ருசிஜகத்வம் என்பர். இதைக் கண்டதும் மகிழ்ச்சி ஏற்படும் நிலைக்கு சுபாச்ரகத்வம் என்பர்.

நின்றான், இருந்தான், கிடந்தான் என்ற மூன்று கோலங்களைக் கொண்ட விஷ்ணு இப்படி ஐந்து நிலைகளைக் கொண்டு லோக பரிபாலனம் செய்து வருகிறார்.

---

# வளர்ச்சி

**திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப.**
*தலைவர், பத்திரப் பதிவுத்துறைத் தலைமை அலுவலகம், சென்னை-28.*



வெற்றிபெற்றால் நானேயென
வீழ்ந்துவிட்டால் நீயேயென
பெற்றுவிட்டால் பெறாததே
வற்றிவிட்டால் மட்டுமே

உல்லாசமாக இருந்திடவே
சல்லாபமாக இருந்திட்டு
பொல்லாத மாயைக்கு
கல்லாத குற்றத்திற்குத்

உன்னை நினைப்பதற்கு
எண்ணிலா வசதிகள்
எல்லாம் கிடைத்தபின்
பொல்லாத நேரத்தில்

தகுதியின்மையால் மறுபடியும்
பகுதியேனும் இல்லாமையால்
பக்குவம் பெற்றிடவே
பக்கம் நெருங்கிடவே

இடையறாது நினைக்கும்
கடைத்தேறும் காலத்தைக்
கர்மவினை மாயும்
மர்மப்பிறப்பு ஒயும்

வீராப்புப் பேசிடுவார்
வீண்பழி போட்டிடுவார்
பெரிதென எண்ணிடுவார்
வந்தனைகள் செய்திடுவார்.

உன்னருள் வேண்டிடுவார்
சகதியில் வீழ்ந்திடுவார்
அடிமையாகப் போயிடுவார்
துன்பத்தில் ஆழ்ந்திடுவார்

நிபந்தனைகள் விதித்திடுவார்
வேண்டுமெனக் கேட்டிடுவார்
மயங்கியே இருந்திடுவார்
மட்டுமே நினைத்திடுவார்.

மண்ணில் பிறந்திடுவார்
பழையபடி ஆகிடுவார்
பலகாலம் முயன்றிடுவார்
படாதபாடு பட்டிடுவார்.

கட்டத்திற்கு வந்திடுவார்
கைக்கருகில் அடைந்திடுவார்
வேளையை நெருங்கிடுவார்
நாளையும் பெற்றிடுவார்.

# ஆண்டாள் அருளிய நெறி

திருமதி அனுசுயா. எம்,ஏ., எம்.பில்.
சென்னை - 20.

ஆழ்வார்கள் வாழி! அருளிச்செயல் வாழி!

''வேதத்தைவேதத்தின் சுவைப்பயனை
விழுமிய முனிவர் விழுங்கும்

கோதில் இன் கனியை, நந்தனார் கனிற்றைக்
குவலயத்தோர் தொழுதேத்தும்

ஆதியை, அமுதை, என்னை யாளுடை
அப்பனை, ஒப்பவரில்லா

மாதர்கள் வாழும் மாடமாமயிலைத்
திருவல்லிக்கேணிக் ,கண்டேனே.''

உயர்வற உயர்நலமுடைய ஸ்ரீமந் நாராயணன் இவ்வுலகின் அறியாமையாகிய இருளை நீக்கி, இவ்வுலக மக்களுக்கு மெய்யறிவைப் புகட்ட விரும்பினான். இதற்காக, வேத, புராண இதிகாச, சாஸ்திர மந்திரங்களை உறு துணையாக்கியும் பலன் கிடைசக்காமையால் தானே அவதாரங்களை எடுத்து தர்மங்களை எடுத்தியம்பினான். அப்போதும் பலன் குறைவாகவே இருந்தது. திருப்பாற்கடலிலே எழுந்தருளியுள்ள திருமாலிடம், பூமிதேவி ஒருநாள் உரையாடினாள். நீங்கள் ஒன்பது அவதாரங்களையெடுத்தும் மக்களுக்கு மெய்யறிவைப் புகட்ட இயலவில்லை. என வருந்துகின்றீர். எனவே யான் பூமியில் அவதாரம் செய்து முடலுகின்றேன். எனக்கு ஒரு வாய்ப்பு அளியுங்கள் என வேண்டினாள். அவருடைய அனுமதியுடன் அவருக்கு விருப்பமான அடியாராகப் பிறக்க நினைத்து, ஸ்ரீவில்லிபுத்தூரிலே, பெரியாழ்வார் திருத்துழாய் தோட்டத்தில் திருத்துழாயின் அடியிலே ஒரு பெண் பிள்ளையாக அவதரித்தாள்.

தநதையான பெரியாழ்வாரின் மூலம் திருமாலின் சிறப்புக்களை அறிந்து அவரை அடைய பாவை நோன்பு இயற்றத் தொடங்கினாள். கருவிலே திருவுடைய மக்களைத் தோற்றுவிப்பது சிறந்த எளியமுறையென்பதையும், அதைப் பெண்கள் மூலமே உருவாக்க முடியுமென்பதையும் உணர்ந்து, பாவையர் நோன்பினை நோற்றாள். இதனை பிரகலாதனின் வரலாற்றாலும் உணரலாம். வேதம் அனைத்துக்கும் வித்தாக, திருப்பாவையைத் திருமாலுக்குப் பாமாலையாகச் சூட்டினாள்.

ஆழ்வார்களைத் தோற்றுவித்து அவர்கள் வாழ்க்கை வரலாற்றின் மூலமும் மக்களைத் திருத்த முயன்றார். ஆழ்வார்களுள் கடைகுட்டி ஆழ்வாரான திருமங்கை மன்னரின் வாழ்க்கை வரலாற்றைக் கொண்டு ஆடவர்களைத் திருத்திப் பணிகொள்ள வைப்பதில் பெரும்பாலும் பெண்களுக்கே பங்குண்டு என்பதை நாம் இன்று காண்போம். திருமங்கையாழ்வார் கள்ளர் மரபில் தோன்றினார். இயற்கையிலேயே வலிமையும் வீரமும்உடையவராக விளங்கினாலும் சிற்றின்பத்திலும் வேட்கை உடையவராக இருந்தார். எனவே திருமால் இவரைத் திருத்திப்பணி கொள்ள. அவருடைய சிற்றின்ப வேட்கையையே பயன்படுத்த திருவுள்ளம் கொண்டார்.

'முள்ளைக் கொண்டே முள்ளை எடுப்பாரைப்
போல'

தேவலோகத்திலிருந்து பூவுலகில் திருவெள்ளக் குளத்தில் குமுதமலர் பறித்து நின்ற பெண்ணை மருத்துவர் ஒருவர் வளர்த்து வருவதையும் அவள் அழகையும் பற்றி கேள்வியுற்ற நீலன் என்று வழங்சப் பெற்ற திருமங்கை மன்னன், அவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினார். இஃதை உணர்ந்த திருமால் குமுதவல்லியைக் கொண்டே இவரை இறையுணர்வில் ஆழ்த்தி. திருமாலடியவராக்க எண்ணினார். குமுதவல்லி திருமங்கை மன்னனின் ஆவலை அறிந்து சங்கு சக்கர இலச்சினைகளைப் பொறித்தல் திருமண் காப்பு தரித்தல், தாஸ்ய நாமம் பெறுதல், திருவாராதனை செய்தல், திருமந்திரம் பெறுதல் ஆகிய ஐந்தையும் தக்க ஆசாரியரிடமிருந்து பெற்று வந்தால் மணந்து கொள்வதாக இசைந்தார். இவரும் திருநறையூர் நம்பிகளிடம் பஞ்ச சம்ஸ்காரங்களைப் பெற்று, குமுதவல்லியிடம் தெரித்தார். ஆனால் குமுதவல்லியோ மீண்டும் வேறு ஒரு நிபந்தனையைச் சொன்னார். 'உந்து பெரும் செல்வத்தராய் திருமாலடியார்களைப் பூசிக்க நோற்றார்களே' எனும் ஆழ்வாரின் அருளிச் செயலுக்கிணங்க 1000 திருமாலடியார்களுக்கு ஓராண்டுக் காலம் அமுது படைத்து வந்தால் மணப்பதாக உறுதி கூறினார். இதைக் கேட்ட திருமங்கை மன்னனும்அவ்வாறே செய்வதாக உறுதி அளித்தார்.

முதல் நிபந்தனையை நிறைவேற்றியவர் இரண்டாவது நிபந்தனையையும் நிறைவேற்றுவார் என நம்பிக்கை வைத்து. அவரை திருமணம் செய்து கொண்டார் குமுதவல்லி. திருமங்கை மன்னனும் உறுதி செய்தபடியே தினமும் திருமால் அடியார்களுக்கு அமுது படைத்து வந்தார். இவ்வாறு திருமங்கை மன்னனை ஒரு ஒப்பற்ற திருமாலடியவராக மாற்றி அவரை ஆழ்ந்த பக்தியுடைய ஆழ்வாராகவும் ஆக்கிய பெருமை குமுதவல்லியையே சேரும். இப்படி பெண்களால் எத்தகைய முரடர்களையும் திருத்திப் பணி கொள்ள இயலும் என்பதை குமுதவல்லியார் திருப்பணியால் உணரலாம்.

அத்துடன் அவரது வாழ்க்கையில் உடனிருந்து திருமால் பக்தியில் சிறந்துவிளங்கினார். எனவேதான் திருமங்கையாழ்வாருடன் குமுதவல்லியையும் சேர்த்து அர்ச்சை நிலையில் நாம் வணங்கி வழிப்பட்டு வருகின்றோம். ஆழ்வார் எங்கு எழுந்தருளினாலும் குமுதவல்லியுடன் தான் எழுந்தருள்வார். இத்தகைய சீரிய தொண்டாற்றிய குமுதவல்லியாரின் திருத்திப் பணிகொள்ளும் சீரிய முறையை ஒவ்வொரு ஆண்டாள் கோஷ்டியினரும் பின்பற்றி, மக்களைத் திருத்திப் பணிகொண்டு, திருமால் அடியார்களை உருவாக்கினால், வைணவம் வெகு விரைவில் தழைத்து ஓங்கும். வைணவர்கள் பல்லாயிரவர் பல்லாயிரவராகப் பல்கிப் பெருகுவர். நமது வைணவப் பெண்மணிகள் ஒவ்வொருவரும் திருமாலே 'மிக்க இறை' என்பதையும், திருமால் நெறியே 'தக்க நெறி, என்பதையும் உணர்ந்து, அந்நெறி நின்று தமக்கு துணைவர்களைத் தேடும்போது திருமாலடியவர்களையே தேர்ந்தெடுத்து மணப்பதை வைராக்கியமாகக் கொள்ள வேண்டும். அவ்வாறின்றி பிறநெறியினராயினும் குமுதவல்லியைப் போல. திருமால்நெறியினராக்கிய பின்னரே திருமணம் செய்து கொள்ள வேண்டும். திருமகள் முதலில் பரிந்துரையையும், பின்னர் தன் அழகையும் காட்டி திருமாலிடத்திலே காரியம் கொள்வதைப் போன்ற முறையையும் ஒவ்வொரு ஆண்டாள் கோஷ்டியினரும் பின்பற்ற வேண்டும்.

இல்லற வாழ்க்கையை ஏற்ற பின்னரும் திருமால் நெறியைப் பின்பற்றி திருமாலையே சர்வ சதாகாலமும் மனத்தில் நினைத்து வாழ்வதாலும், கருவுற்றிருக்கும் காலத்தில் கொள்ளும் அந்நினைவு, கருவிலே உள்ள மகவைத் திருவுடைய மகவாக மாற்றும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். இதனையே,

'கருவிலே திருவிலாதீர் காலத்தைக் கழிக்கின்றீரே' என்றார் தொண்டரடிப்பொடியாழ்வார்.

ஒவ்வொரு ஆண்டாள் கோஷ்டியினரும் திருமால் நெறியையும், திருமாலைப்பற்றியும் இளம் வயது முதற்கொண்டே சொல்லி வந்தால் அவை பிள்ளைகளின் மனத்தில் 'பசுமரத்து ஆணிபோல' நன்குபதியும். இதனையே

## மதப் பூசல் வேண்டாம்

**எம்மதமும் சம்மதம் என்பது உயர்வான கருத்து,**
**எம்மதமும் என்மதம் என்பது அதைவிட**
**உயர்வான கருத்து.**
**"மதமெனும் பேய் பிடியாதிருக்க வேண்டும்."**
**—வள்ளலார்**

'இளமையில் கல்வி சிலையில் எழுத்து'
'தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரையில்'

என்ற சான்றோர் வாக்குகள் நமக்கு உணர்த்துகின்றன.

ஆண்டாள் கோஷ்டியினர் ஆண்டாள், கோபியர்கள், நீலாவதி, பொன்னாச்சி, கொங்குப்பிராட்டி, போன்றவர்களைப் போல திருமாலிடத்தில் பெரும்பக்தி கொண்டு தாம் மட்டும் இன்றி, தமது வழித்தோன்றல்களும்

'எந்தை தந்தை தந்தை தந்தை தம்
மூத்தப்பன்
ஏழ்படி கால் தொடங்கி'

எனும் பெரியாழ்வாரின் அருளிச் செயலுக்கிணங்க. திருமால் அடியார்களாக விளங்கச் செய்ய வேண்டும். இதற்காக ஏதாவதொரு திவ்விய தேசப்பெருமாள் திருநட்சத்திர விழாவினுக்கென்று நிரந்தரவைப்பு நிதியை வைத்து, அதன் மூலம் வரும் வட்டித் தொகையை அதற்குச் செலவிட வேண்டுமென்ற நிபந்தனையில் அறக்கட்டளையை ஏற்படுத்தினால், நிச்சயமாக நமக்குப் பின்னர் நமது பிள்ளைகளோபேரன்மார்களோ அதைச் செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்படுத்தப்படுவார்கள். இதனால் அவர்கள் தவறாமல் திருமால் நெறியைப் பின்பற்றி போற்றும் திருமாலடியவர்களாகத் திகழ்வர் என்பது உறுதி.

இப்படி இயன்ற வழிகளிலெல்லாம் நாம் திருமால் நெறிபோற்றி, அவர் திருவருள் பெற்று வாழ்வோமாக, இங்கு


ஒல்லும்வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்

எனும் திருக்குறள் நோக்கத்தக்கது.

''நல்லகோட்பாட்டு உலகங்கள்
மூன்றினுள்ளும்தான் நிறைந்த
அல்லிக்கமலக் கண்ணனை
அந்தண் குருகூர்ச்சடகோபன்
சொல்லப்பட்ட ஆயிரத்துள்
இவையும் பத்தும் வல்லார்கள்
நல்லபதத்தால் மனைவாழ்வர்
கொண்ட பெண்டிர் மக்களே''

ஆண்டாள் திருவடிகளே சரணம்.


வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை. சென்னை-600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ. பிஎச்.டி.
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம். அரசினர் தோட்டம். சென்னை-600002.



சென்னை வைணவ மகாசங்கத்தின் சார்பாக பெரும்புலவர் மே. வீ வேணுகோபாலப்பிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழா 25-12-96 அன்று சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திருக்கோயில் இதழாசிரியர் டாக்டர் த. அமிர்தலிங்கம், பெரும்புலவர் மே. வீ வே. அவர்களின் தலைமகனார் மே. வீ. வே. ஸ்ரீனிவாசன், வழக்கறிஞர் வேணுராச நாராயணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



வைணவ மகாசங்கத்தின் சார்பில் நடைபெற்ற ஸ்ரீவைணவ மாதர் மாநாட்டில் வடசென்னை பாரதி மகளிர் கல்லூரி முதல்வர் டாக்டர் திருமதி பார்வதிராஜன், பாரத் பொறியியல் கல்லூரியின் தாளாளர் திருமதி அனுசுயா, எம்.ஏ.எம்.பிஎல்., திருமதி பத்மாவதி, பி.எஸ்சி. பிஎட்.. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



மயிலையில் சித்திரக்குளத் திருப்பணியைத் தமிழக அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு புலவர் செங்குட்டுவன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். மத்திய இணை அமைச்சர் மாண்புமிகு டி. ஆர். பாலு அவர்களும், சென்னை மாநகராட்சி மேயர் மாண்புமிகு மு. க. ஸ்டாலின் அவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மயிலை சட்டமன்ற உறுப்பினர் திருமிகு இராமஜெயம், அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ், இ.ஆ.ப., சென்னை இணை ஆணையாளர் திருமிகு ப. தனபால், எம்.ஏ.,பி.எல்., ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டார்கள்.



முருகன் மயிலையில் சித்திரக்குளம்